# தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி

சுவாமி ஞானப்பிரகாசர்

International Institute of Tamil Studies

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி

**(Studies in Tamil Etymology)**

**நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113.

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title | : | Studies in Tamil Etymology |
| Author | : | **S. Gnana Prakasar, O. M. I.**<br>Nallur, Jaffna, Ceylon. |
| Publisher | : | **International Institute of Tamil Studies,**<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication No. | : | 341 |
| Language | : | Tamil |
| Year of Publication | : | 1999 |
| Edition | : | RePrinter |
| Paper used | : | TNPL 18.6 Kg Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10.5 Points |
| No.of pages | : | 128 |
| Price | : | Rs. 30/- (Thirty Rupees Only) |
| No. of copies | : | 1200 |
| Wrapper design | : | V. Karunanithy |
| Subject | : | Etymology |
| Printed by | : | ***The PARKAR***<br>293, Ahamed Complex IInd Floor,<br>Royapettah High Road, Chennai 14. |

---

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தின் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

# அணிந்துரை

நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள் ஈழத்தில் 1875. ஆகஸ்டுத் திங்கள் 30 ஆம் நாள் மானிப்பாய் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் இராசசிங்கம் சுவாமிநாதப்பிள்ளை. தாயார் பெயர் தங்கமுத்து அம்மையார். சைவக் குடும்பத்தில் பிறந்த இவருடைய இயற்பெயர் வைத்தியலிங்கம். 1901இல் இவர் கிறித்தவராக மாறி ஞானப்பிரகாசம் என்ற பெயரைப் பெற்றார்.

மொழி நூல் அறிவும் பன்மொழிப் புலமையும் மிக்கவர். தமிழைத் தன் உயிர் போலக் கருதிய பெருந்தகை. ஒரு பொருட்கு ஒரு செயற்கு ஒரே ஒரு சொல் மாத்திரம் அன்று; பல சொற் கொண்டது எந்தமிழ், என்று தமிழின் சொல் வளத்தைச் சிறப்பித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் நூல்கள் பல எழுதியுள்ளார். தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும். யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சி, தமிழமைப்புற்ற வரலாறு, தருக்கம், துறவி ஞானம், கிறிஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி, கத்தோலிக்கத் திருச் சபையும் அதன் போதகங்களும், வேத ஆராதனை முறை, ஆண்டவர் சரித்திரம் என்பவை இவர் எழுதிய தமிழ் நூல்கள். யாழ்ப்பாண அரசர், பண்டைய இந்திய சரிதையும் ஆண்டு வரிசையும், தமிழரின் சாதி உற்பத்தி முதலிய பொருண்மைகளில் ஆங்கில நூல்கள் எழுதியுள்ளார்.

ஞானப்பிரகாச சுவாமிகள் கிறித்தவராக இருந்தாலும் சைவ சமய மடங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவருடைய தமிழ் ஆய்வைச் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் ஊக்குவித்தார்கள். அவர் களுள் திருப்பனந்தாள் மடத்தலைவரும், திருவாவடுதுறை மடத்தலை வரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

லோகோபகாரி, சத்தியநேசன், ஈழகேசரி முதலிய தமிழ் இதழ்களில் இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ்ச்சொற் பிறப்புப் பற்றிப் பல இடங்களில் உரை நிகழ்த்தியுள்ளார்.

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்

இவரது நூல்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 'சொற்பிறப்பியல் ஒப்பியல் ஆராய்ச்சி' என்னும் நூலாகும். மேலை நாட்டு மொழியிலும் வட மொழியிலும் வழங்கும் தமிழ்ச் சொற்களைப் பற்றி விரிவான அகராதியாக இது அமைகிறது.

இந்த அகராதி எழுதுவதற்குமுன் எழுதப்பட்ட முன்னுரை 'தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி' எனும் இந்நூலாகும். 1932இல் முதல் பதிப்பாக இந் நூல் வெளிவந்தது. இன்று கிடைத்தற்கரிய இந்நூலை வெளியிடத் தந்து தவியவர் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் இந்நிறுவன ஆளுநர் குழுவின் துணைத் தலைவருமான முனைவர் பொற்கோ அவர் கள் ஆவார். அவருக்கு இந்நிறுவனத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு, ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற இந்நிறுவனத்தலைவர். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையைத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு.சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் இந்நூலினை வெளி யிட நிதி நல்கிய தமிழ் வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநர் முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும் இந்நாள் இயக்குநர் முனைவர் மா. இராசேந் திரன் அவர்களுக்கும் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த 'தி பார்க்கர்' நிறுவ னத்திற்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

## FOREWORD

RECENT word-studies in ancient Tamil, as compared with its sister dialects, have made it possible to identify with precision the "roots" of what is commonly known as the Dravidian group of languages. These roots are not mere vocal elements artificially put together by a comparison of analogous forms, as is the case with most of the hypothetical "roots" constructed by Indo-European philologists for their languages. The Dravidian roots are real words in their primitive stage, still to be met with here and there in current writings, but most commonly used in early Tamil literature. They number but a few scores, and, by a patient investigation of the laws of Tamil word-building, the conclusion is arrived at, that it is from these scanty early forms that the entire vocabulary of the Dravidian languages (excepting, of course, a handful of onomatopoetic terms) was derived. The identification of these original words, coupled with the ascertaining of the laws which govern the evolution of their derivatives, furnishes us with the necessary data for a scientific study of Dravidian etymology.

On further examination of the laws of the evolution of Dravidian derivatives from their germinal or root stage, it has been found that the vocabularies of Sanskrit and the other members of the Indo-European group were also evolved from the same roots, by the operation of some additional laws occasioned by the physiological tendencies of the peoples who made use of the common word-materials for building up their own speeches. This fact, I am aware, will not be recognised at once by scholars who have hitherto discovered no more connexion between the two groups than the accidental one of the mutual borrowing of a number of stray words. The publication of my proposed

Etymological and Comparative Lexicon, it is hoped, will enable impartial students to discover the common origin of both the groups for themselves.

The laws governing the formation of derivatives from the original roots are set forth and fully discussed in a work entitled AN ESSAY ON THE PRINCIPLES OF TAMIL ETYMOLOGY which is now in course of preparation. The present Tamil treatise gives the substance of the former, and is, mainly, a reprint of a series of articles which appeared in some Tamil Journals of South India and Ceylon.

Here is a brief summary of the principles of Tamil etymology as discussed in the following pages:-

I. Primary roots are early words composed of one of the four demonstratives a, u, i, and e and a formative consonant. They are all grouped under four classes corresponding to the aforesaid demonstratives, and semantically represent the root-ideas of Near, Far (or hidden from view) Beneath and Above, respectively. These roots, essentially monosyllabic, are, in more cases, rendered dissyllabic by the addition of an enunciative for facility of pronunciation. e. g. அஃகு, be near; உள், hidden away, within; இழி, get beneath; எழு, arise.

II. Primary roots become diversified into other analogous ones by

(1) Sense-differentiating enunciatives. e.g. இழி to get beneath, becomes இழு, to drag down, இழ, to lay down & c

(2) Variation of the formative.e.g., இழு becomes இடு, to set down; இரு, to sit down.

(3) Variation of the radical vowel. e.g., எல், "the riser" the sun, becomes ஒல், to be lightsome, உல-ர், to burn.

III. Secondary and tertiary roots are formed the following ways:

(1) By introducing an inital intensive consonant. e.g., இழி, to get beneath, become கிழி to dig into the ground; ஒலி to be light some, becomes சொலி, to shine.

(2) By additional formatives. Thus: இழு, drag down, இழு-கு, lag behind, இழ, lay down, இள-கு, become loose.

(3) By lengthening (guna) and flattening (varddhi) the radical vowel. Thus: இரி, fall down, ஈர், drag down; தாழ், bend, தவல், to slip, tumble over.

IV. Among the laws for the formation of derivatives are:

(1) Reduplication and euphonic nunnation. e.g., இளகு, to be loose, இளக்கு, to loosen; அடு, to be near, அட்டு, to put near (by reduplication) and அண்டு, to get near, (by euphonic nunnation).

(2) The use of suffixes which are no other than variations of original root-words such as: அது, "the"; உள், "having" இல், "that which is";"where a thing is". Thus: இழுது, "the thing that is sticky" i.e. grease, butter; இயவுள், "having power to move", a leader; வெய்யில், "what possesses heat", sunshine. Prefixes are but seldom used in the Dravidian group, unlike the Indo-European which has a great fondness for them.

V. Of the many (and rather complicated) phonetic laws governing dialectal corruption within the Dravidian group, only the chief ones can be noticed here:

(1) Vowel changes - அ, ஆ become எ, ஏ and ஒ, ஓ and vice versa. So too உ and இ are interchanged. Again initial உ has a pronounced tendency to become வ (=w). This is most patent in the Indo-European group, wherein a great many Tamil roots having intial உ are found with inital v or w.

(2) Consonantal changes- க changes into ச, and this into ய, ஞ and ந and vice versa. Again ச becomes த; and also க is changed into வ and ப. The last is often represented by ஹ in Kanarese. ப is also changed into வ and ம. This last becomes ண, while ந is also changed into ம. Again ல and ர interchange as do ல, ழ, ந and ட. Likewise, த, ட, ள

and ல, ழ, ள, ற, ன are found to change places. In Tulu ஜ often stands for ற.

VI. Among the cases of dialectal corruption peculiar to the Indo-European group the following may be noted as the earliest ones:

(1) Initial vowels are easily elided and many words are now found with their original formatives as initials. e.g. Tam. உருள் Skt. lul.; Tam. வெளிச்சம் Lat. lux etc. Other phonetic phenomena such as syncope, metathesis, anaptyxis, haplology etc. are also frequent.

(2) A sibilant is often introduced before the initial consonants of secondary roots. e.g., Skt. spas for pas, Tam. பார் (பர-வு) Gr. strepho for trepo, Lat. tremo, Tam. திருப்பு, திருமு.

(3) Similarly, a guttural (sometimes palatalised) is introduced before initial vowels. Thus Tam. உய், உயிர் Lat. uiuus, Goth. uwius, A.S. cwic (quick), Skt. jiv.

(4) There is a tendency to add an r (trill) to certain consonant sounds. Thus: Skt. droni, for Tam. தோணி; vrdh, for tam. வளர்.

The later vowel gradations and consonental changes, through which the various Indo-European speeches passed, are not taken into consideration here, as they can be found in the works of the philologists of Europe.

An appendix presents some of the many ramifications of a single secondary root, as an illustration of the principles set forth in the body of the work.

Nallur, **S. Gnana Prakasar,** O.M.I.
Jaffna, Ceylon,
30.1.32.

# நூன்முகம்

சென்ற வருடம் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் யான் தமிழ்ச்சொற் பிறப்பு ஆராய்ச்சி சம்பந்தமாய்ப் புதினப் பத்திரிகைகளில் வெளியிட்ட சில விடயங்களை ஒருங்கு திரட்டி, அவற்றோடு பல துறைகளை நலமாய்ச் சேர்த்தும், அநுபந்தத்தில் ஒரு வழியடிச் சொல்லின் வியுற்பன்னங்களை விரித்துக் காட்டியும் இந்நூலை இப்போழ்து அரங்கத்தில் விடுகின்றேன். இது "தமிழ்ச்சொற் பிறப்பகராதி" எனும் நாமத்தோடு என்னால் இயற்றப்பட்டு வருகின்ற பெரிய நூலினுக்கு ஒரு முகவுரை போன்றதாம். தமிழ்ச் சொற்களெல்லாம் ஒருசிறு தொகையான அடிகளினின்று பிறந்திருத்தலையும், அவ் அடிச்சொற்களே வடமொழியாதிய வேற நேக மொழிகட்குந் தாதுக்களாய் நிற்றலையும் விளக்கி, தமிழையும் பிறமொழிகளையுங் கற்போர்க்கெல்லாம் அருமந்த துணைக்கருவியாக நிலைபெறத்தக்க அவ் அகராதியின் வேலையை நிரப்பி வெளியிட எனக்கு உதவி செய்தல் தமிழ் அபிமானிகளது குன்றாத கடமையாகும்.

அவ் அகராதியின் இயல்பைத் தெரிவிக்கின்ற இச்சிறு ஆராய்ச்சி நூலை அச்சு வாகனம் ஏற்றித் தமிழுலகில் உலவி வர விடுதற்குப் பொருளுதவி புரிந்தருளிய, திருப்பனந்தாள் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகளது அளப்பருங் கருணையை உயிருள்ளளவும் மறவேன். மகா சந்நிதானம் தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்து வருகின்ற பெரு முயற்சிகளை இறைவன் மேன்மேலும் கைகூடச் செய்யுமாறு அவன் அமல அடியிணையைச் சிந்திக்கின்றேன்.

**நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர்**

# உள்ளுறை


I. அடிச்சொல் இயல்பு 11-21

*நிகண்டுகளும் அகராதிகளும் - தமிழ்த்தாதுக்கள் - அடிச்சொற்களே ஆதிப்பாஷை - தாதுக்களின் அகத்தியல்பு - சுட்டுதலே பெயரீடு - சொல்லெல்லாம் இடச்சார்பு பற்றிப் பிறந்தனவே.*

II. வழிச்சொல்லாக்கக் கட்டளைகள் 22-31

*- (1) கருத்தை வேறுபடுத்தும் உச்சாரண உயிர்கள் - (2) வேறுபடும் வியஞ்சனங்கள் - (3) மேல்வந்துறும் வியஞ்சனங்கள் - (4) வியஞ்சனம் இரட்டலும் மெல்லொற்று அணைதலும்.*

III. மேலும் நான்கு கட்டளைகள் 32-48

*- (5) வலியுறுத்துகின்ற முதனிலை மெய்கள் - (6) அடிச்சொல்லை நீட்டலும் மடக்கலும் - (7) வேறுபடும் அடியுயிர்கள் - (8) பிறிதொரு ஆதிச்சொல்லோடு கூட்டுதல் - வேறு சில இறுதி நிலைகள்.*

IV. சொற்சிதைவு 49-60

*- உயிர்மாற்றும் மெய்ம்மாற்றும் - மெல்லொற்றும் உடம்படுமெய்யும் - உருத்திரிபாற் சிதைவு.*

V. பொருள் வேறுபாட்டு முறை 61-70

*- (1) சொற்களின் அடிப்பொருள் - (2) சிறப்பியல்பு சுட்டல் - (3) சார்புபற்றி விரிதல் - (4) இனந்தழுவல் - (5) இயைபுடைமை - (6) எதிர்நிலை - (7) வழக்காறிழிதல்.*

VI. ஆரிய மொழிகளில் வழிச் சொல்லாக்கம் 71-82

*- அடிப்படையிற் சொல்லொற்றுமை - தமிழும் ஆரியமும் -வடமொழிச் சொல்லாக்கச் சிறப்பு விதிகள்.*

அநுபந்தம் 83-123

*- ஓர் வழியடிச் சொல்லிற் பிறந்தவை.*

# Studies in Tamil Etymology
# தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி

## முதல் அதிகாரம்

## NATURE OF TAMIL ROOTS
## தமிழ் அடிச்சொல் இயல்பு

உலகின்கண் சொற்பொலிவில் தலைசிறந்த மொழிகளுள் தமிழும் ஒன்று. ஒரு பொருட்கு ஒரு செயற்கு ஒரே ஒரு சொல் மாத்திரமன்று. பலசொற் கொண்டது எந்தமிழ். தனித்தமிழில் ஒரு சொல்லால் எடுத்து விளக்கக்கூடாத உள்ளக்கிடக்கைகள் மிகச் சிலவேயாம். தமிழ்ச் சொற் கணக்குப் பல்லாயிரமென்பது எவர்க்குந் தெரிந்ததொன்று. இனி நாடோடி வழக்கிலுள்ள கொடுந்தமிழ்ச் சொற்கள் ஒரு திறம்; பழைய இலக்கியங் களுட் பயிலும் செந்தமிழ்ச் சொற்கள் ஒரு திறம். இவை இரண்டு திறத்தன வான தொகுதிகளும் ஒன்றிற்கொன்று எவ்வளவு மாற்றமுடையவையெ னின், இரண்டையும் இருவேறு பாஷையெனச் சொல்லினும் சொல்லலாம். கொடுந்தமிழ் மட்டும் பேச்சிலும் எழுத்திலும் தனித்து வழங்குமாயின், அல்லது செந்தமிழ் தான் தனித்து வழங்குமாயின், இரண்டுள் ஒரு தமிழி னைக் கற்றுக்கொள்ளுதல் எளிதில் அமைவதாகும். தமிழ் நாட்டிலோ அவ்வாறன்று. பேச்சிலெல்லாம் கொடுந்தமிழ் இயன்று வர, எழுத்தில் இதற்கும் இலக்கியத் தமிழுக்கும் இடைநின்ற ஒரு தமிழ் வழங்குகின்றது. இதனால் முன்னைய செந்தமிழ், கொடுந்தமிழ் எனும் பாகுபாட்டோடு "புத்தகத் தமிழ்" எனவும் ஒரு பகுப்பு ஏற்படுவதாயிற்று. கொடுந்தமிழை விலக்கிப் புத்தகத் தமிழ் வழங்கும் நூலாசிரியர்களும், தத்தம் அறிவாற்ற லுக்கு ஒப்பச் செந்தமிழிலிருந்து சொற்களை, தொடர்களை ஆங்காங்கு எடுத்து வழங்க ஏவப்படுவோராகின்றனர். செந்தமிழ்ச் செய்யுட்களையும் ஒரோவிடத்து மேற்கோளாக எடுத்தாளுகின்றனர் இதனால் தமிழ் மொழி

யில் வல்லுநராக விரும்புவோரெல்லாம் முத்திறப்பட்ட தமிழ்ச் சொற்களையும் அறிந்திருத்தல் வேண்டப்படுகின்றது.

## நிகண்டுகளும் அகராதிகளும்

முற்காலம் தமிழ்ச்சொல் கற்போர்க்கு உதவியாக வாய்த்தன பிங்கலந்தை, திவாகரம், சூடாமணி நிகண்டு முதலிய சொற்றொகுதிகளாம். இவை செய்யுள் உருவமாய் அமைந்தன. இவற்றைப் பன்னாள் முயன்று நெட்டுருப் பண்ணிக்கொள்வோர் தமிழ்ச்சொற் பெரும் பரப்பில் ஒரு பாகத்தை அறிவோராவர். அவ்வொரு பாகத்தினுக்குச் சொற்குச் சொல்லாகப் பொருளறிதற்கு இந்நூல்கள் உதவினும், அவ்வச்சொல் வெவ்வேறு நிலையிலும் தொடர்பிலும் கொள்ளுகின்ற புதுப்புதுப் பயன்களை முற்றத் தெரிந்து கொள்ளற்குப் பெரும்பாலும் உதவ மாட்டா. இக்குறைபாட்டினை இற்றைக்கு இரண்டு நூற்றாண்டுகளின் முன் தென்னிந்தியாவில் எழுந்தருளியிருந்த கத்தோலிக்க சமயாசாரியராகும் வீரமாமுனிவர் எனும் கொன்ஸ்தன்சியு பெஸ்கி (Rev. C. Beschi) அகற்ற உன்னி, ஐரோப்பையர் தம் மொழிகளின் நெடுங்கணக்கு வரிசையில் அகராதி வகுக்கும் முறையைத் தழுவி, தமிழுக்கும் சொற்றொகுதிகள் நான்கு செய்து சதுரகராதி எனும் பெயரோடு வெளிப்படுத்தினர். வீரமாமுனிவர் வழிகாட்ட. அவ்வழியைப் பின்பற்றி. மானிப்பாய்த் தமிழ்ச்சொல் அகராதி. கதிரைவேற்பிள்ளை தமிழ்ச்சொல் அகராதி ஆதியன பல அகராதிகள் ஒன்றைவிட ஒன்று அதிகத் திருத்தமாய் வெளிப்பட்டுள்ளன. இன்றைக்குச் சென்னைச் சர்வகலாசாலையின் ஆதரவோடு பிரசுரிக்கப்பட்டு வருகின்ற பெருந் தமிழ்ச் சொல்லகராதி, யாவற்றிலும் காட்டில் அதிக விசேடம் பெற்றது. நிகண்டுகள் மட்டும் நிலவிய காலத்திற் போலன்றி, அகராதிகள் மலிந்து விளங்கும் இக்காலம் தமிழ்ச் சொல்லுணர்ச்சி மிக்க இலேசாய்ப் பெறப்படலாமென்பது ஒருதலை. ஆயின், அகராதிகளின் துணையோடேயும் சொற்குச் சொல்லாய் ஒவ்வொரு பயனையும் வாய்ப்பாடமாக்கும் தொல்லை நீங்கிற்றன்று. தமிழ்ச் சொற்களைப் பாடம் பண்ணிக்கொள்ளும் முயற்சி ஒருவரது வாழ்நாள் முழுவதும் ஒழுங்குபெற நிகழுமிடத்தும் முற்றுப் பெறாததாகிக் கிடப்பது நாமெல்லாம் பட்டறிந்ததொன்று.

தமிழில் இக்காலம் வழங்கும் அகராதிகளைக் கொண்டு சொற்பயன்களை அரிதிற் பாடமாக்கும் முறையில் யாதேனும் திருத்தத்திற்கு இடமுண்டா? தனித்தனித் தமிழ்ச்சொற்களை மனத்தில் தரித்துக் கொள்ளுத

லாகிய பெருமுயற்சியை எளிதாக்கி வைத்தற்கு யாதாவது சூழ்ச்சியான வழியுண்டா? ஆரியம் முதலிய சில பிறமொழிகளை நோக்குவோமாயின். அவற்றிற் சொல்லர்த்தங்களைச் சுலபமாய் மனத்தில் தரித்து நெட்டுரு பண்ணிக் கொள்ளற்கு வாய்ப்பான ஒர் உபாயம் இருத்தலைக் காண்போம். அவ்வுபாயம் யாதெனில்: சொற்கள் கூட்டங் கூட்டமாய்த் தம்முட் பிறப் பொற்றுமை கொண்டு நிற்றலை ஆராய்ந்தறிந்து, ஒவ்வொரு கூட்டச் சொற் கட்கும் பொதுப் பிறப்பிடமாயுள்ள அடியை அன்றேல் தாதுவைக் கண்டு பிடித்து வைத்தமையாம். இவ்வாறே ஆரியமென்னும் வடமொழியின் சொற்களை இயன்றவரை கூட்டங் கூட்டமாய் வகுத்து ஒவ்வொரு கூட்டத் தினும் அடிகளைத் தங்காலத்து அறிவு கொண்டளவில் நிச்சயித்துப் போயினார் நிருக்தம் என்னும் நூலை இயற்றிய யாஸ்கர் என்பவர். தற் காலம் மேனாட்டிலும் பிறாண்டும் விளங்குகின்ற சொற்பிறப்பு ஆராய்ச்சி யாளர்க்கெல்லாம் தந்தையாகும் இச்சமஸ்கிருத மொழி வல்லுநர் வாழ்ந்த காலம் கி.மு. அறுநூறு ஆண்டு வரையில் என்ப. அந்நாட் தொட்டு இந் நாள் வரையில் வடமொழியாராய்ச்சி, முக்கியமாய் ஐரோப்பையர்களது தளரா முயற்சியைத் துணைகொண்டு, மேன்மேலும் வளர்ச்சி பெற்று வந்தமையினால் தற்காலச் சமஸ்கிருத அகராதிகளில் ஏறக்குறைய ஒவ் வொரு சொல்லினுக்கும் பெரும்பான்மை சரியான தாது குறிக்கப்பட்டிருத் தலைக் காணலாம். இத்தாதுக்களை ஒருதரம் மனத்திற் பதித்துக் கொள்வ துண்டாயின். அவ்வவற்றினின்றும் பிறந்து கிளைத்து வரும் பற்பல சொற் களையும் ஒருங்கே மனனம் பண்ணிக் கொண்டதாகும். அடிச்சொல் உணர்ச்சியால் கிளைச் சொற்களைப் பாடின்றிப் பயின்றுகொள்ளும் சௌகரியம் நந் தமிழுக்கே இதுகாறும் இல்லாததாயிற்று.

## தமிழ்த் தாதுக்கள்

வடமொழியிலும் தமிழ் திருத்தங் குறைந்ததா? பொலிவு குன்றி யதா? நியதமான கட்டளைகட்கேற்ப ஒழுங்குபடக் கிளைத்த சொற் கூட்டங் கள் இன்றியதா? அல்லவெனில், சமஸ்கிருதத்திற்குப் போலத் தமிழினுக் கும் அடிச்சொற்கள் தெரிக்கப்பட்டிராமைக்குக் காரணம் யாது? தமிழைப் போலும் கொத்துக் கொத்தாய்க் கூடி இயலுஞ் சொற்பரப்பைக் கொண்ட ஒரு பாஷை நாம் அறிந்தவற்றுள் வேறின்று. புதியன புகவிடாது பெரும் பான்மை பண்டை உருவங்களையே காத்துக் கொள்ளும் சார்பொன்று தமிழகத்துக் காணப்படுவது. இச்சார்பினால் ஆரியத்தின் கண்ணும் இல்லாத நிரைப்பட்ட சொல்லொற்றுமை தமிழுக்குரியதாகும். ஆயின்

தமிழ்ச்சொற்கள் ஒற்றுமைப்பட்டு ஒருசில அடிகளினின்றும் கிளைத் தெழுந்து நிற்கும் பெற்றி அரிதின் உணரக்கிடத்தல் எங்ஙனமெனில். தமிழ்ச்சொற் பிறப்புக் கட்டளைகளை வரையறுத்து நாட்டி வைக்க யாவ ரேனும் இதுவரையில் வெளிப்படாமையினாலாம்.

தொல்காப்பியர் தமது உரிச்சொல்லியல் ஆதிய சிலவிடங்களிலும். நச்சினார்க்கினியர் ஆதியாம் உரையாசிரியர்கள் ஆங்காங்கும் ஒருசில சொற்கட்குப் பிறப்புக் காட்டிப் போயினார் அன்றோ எனின். அது உண் மையே. ஒரு சில சொற்கள் பிறந்தமை பல நூலாசிரியர்களால் ஆங்காங்கு தனித்தனியே காட்டப்பட்டிருப்பினும், சொற்கள் யாவும் பிறந்து வேற்றுருப் பட்டு நிற்றற்கு விதிகளாய் அமைந்த கட்டளைகளை ஆராய்ந்து காட்டு வோர் இல்லாதொழிந்தனர். சொற்பிறப்புக் கட்டளைகளை முறைப்படி எடுத்து விளக்குதலே இந்நூலின் நோக்கமாம்.

தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருதத்திற் போல அடிச்சொற்களினின்று கிளைத்தெழுந்தமையை இரு எடுத்துக் காட்டுக்களால் விளக்குதும். முன் வருவது தலையடிச் சொற்கு எடுத்துக்காட்டு; பின்னது வழியடிச் சொற் காம். இங்குக் காட்டுவன அவ்வச் சொற்களின் ஆதி அர்த்தங்களே யெனக் குறித்துக் கொள்க.

## *1. எழு எனும் தலையடிச் சொல்*

**எழு—தல்** - மேற்கிளம்புதல்

**எல் — எழுவது** - சூரியன்: எழுவானும் அது.

**எல் — லு, என்—று, என்—றாழ்**-சூரிய ஒளி. பகல் எனும் பொரு ளுள்ள சொல் விகற்பங்கள்.

**எல்—லை, எல்—மை** - பகல். கால வரம்பு.

**ஏல, ஏற்—க, ஏற்—கென** - வெளிச்சத்தோடு. நேரத்தோடு.

**எல்—லே** - வெளியே

**எல்—லார்** - விளங்குவோர். தேவர்

**எழி—ல்** - விளக்கம். நிறம்

**எழி—லி** - நிறம் பொருந்தியது. மேகம்

**எழி—னி** - நிறந்தீட்டியது. திரைச்சீலை

**எழு—த்து** - நிறந்தீட்டல்

**இலக்—கித்தல், இலக்கம்** - எழுதல். எழுதியது

**இல—குதல், இலங்குதல்** - இலக்கம்

**இல—கு, இலேசு** - ஒளி பொருந்தல். இறுக்கமற்றிருத்தல்

## 2. துழ எனும் வழியடிச் சொல்

**துழ—த்தல்** - உழன்றுவரச் செய்தல்

**துழ—தி** - உலைவு

**துழ—வுதல், துழா—தல், துழா—வுதல், துரு—வுதல்**-உழன்று வருமாறு செலுத்துதல்

**துழ—வை** - துழாவியிட்டது, கூழ்

**துடு—ப்பு** - துழாவுவது, அகப்பை (தோண்டி காண்க)

**துளை—த்தல்** - உழன்றுவருங் கருவியால் குழிபண்ணல்

**துளை, தொளை, தொள்—கு, தொண்—டை**-ஓட்டை. குழி

**தொழு—வை** - மடு

**தொள்—ளல், தொடு—தல், தோண்டு—தல்** - துளைத்தல், குழி பண்ணல்

**தோட்—டி** - துளைப்பது, துளை (வாயில்)

**தோண்—டி** - துழாவுவது, (துடுப்புக் காண்க)

**தோணி** - நடுவிடம் அகழ்ந்தெடுத்தது, மரக்கலம்

**தோள—ல், தோளுதல்** - துளைத்தல்

**தோல்** - துளையுள்ளது, மூங்கில்.

கண்ட இரு தொகுதிகளிலுமுள்ள நாற்பத்துநாலு சொற்களும் முறையே எழு, துழ எனும் அடிகளினின்றும் பிறந்தன என உணர்தற்கு இதனை வாசிப்போர் மாட்டு மொழிநூல் வன்மை வேண்டப்படாது. இச்சொற்களை ஒன்றன்பின் ஒன்றாய் ஆராய்வோடு படித்து அவற்றின் உருவம் சிறிது சிறிதாய் மாறி வருதலையும் அவ்வவற்றின் பொருளும் அம்மாற்றத் திற்கேற்பப் படிமுறையாய்த் திரிந்து வருதலையும் கவனிப்போர், இளம் பாலரேயாயினும், முற்றொகுதி எழுவின் கூட்டமெனவும் பிற்றொகுதி துழவின் கூட்டமெனவும் தெள்ளிதின் அறிந்துகொள்வார். ஆயின் எழு என்பது இலங்குதல் என வந்தமை எவ்வாறு? துழ எனுஞ் சொல் துடுப்பு

எனும் உருவந் தாங்குதல் கூடுமா? எனுங் கேள்வியும் பிறக்கும். அடிச் சொற்களினின்றும் கிளைச்சொற்கள் ஆகும் ஆற்றினை ஆளும் கட்டளைகளை எடுத்துக் கூறுவதே இந்நூலின் நோக்கமாதலால், அவற்றை மேல்வரும் பிரிவுகளைக் கருத்துடன் ஆராய்ந்து கண்டுகொள்க.

## அடிச்சொற்களே ஆதிப்பாஷை

எழு எனுஞ் சொல்லை தலையடி எனவும் "துழ"வை வழியடி எனவும் குறித்தோம் அன்றோ? அது யாது பற்றியோ? எனில், முந்தியது அப்பால் தனக்கு ஒரு பிறப்பு இல்லாமல் தானே ஓர் அடியாய் நிற்பது; பிந்தியது தனக்கப்பாலும் அப்பாலும் ஒவ்வோர் அடியைத் தாயகமாய் உடையது. ஆதியில் நிற்பதுதான் தலையடியாம். "துழ"வுக்கு நேரே முற்பட்டது 'உழ-ல்' எனும் சொல். இது உலை, உழை, உளை எனவும் நின்று ஒரு சிறிது வேறுபட்ட பொருள் தரும். மீண்டும் உழ-ற்று உழ-ன்றி ஆதியன வழிச் சொற்களாகியும் இயலும். இத்துணை வியுற்பன்னங்களை யுடைய 'உழ-ல்' தானும் உள் எனும் தலையடியினின்று தோன்றியதாம். உள் விழுந்து விழுந்து வருதலே அதாவது சுற்றுதலே, உழலுதல் எனக் கண்டு மகிழ்க.

இவ்வாறு ஆதி அடிச் சொற்களைத் துருவித் துருவி ஆராய்ந்து காணுங்கால், அவையே தமிழ்ச் சொற்கட்கெல்லாம் தாதுக்களாமெனல் புலப்படும். தாதுக்கள் தனித்துப் பயின்ற காலமும் ஒன்று உளதா? உளதாயின் தமிழ் மக்களின் ஆதிபாஷை எத்தகைத்து? எங்காலத்தும் இடைக் காலத்தும் வழங்கும் சொற்கள் யாவும் தமக்கு முற்பட்ட ஆதி காலத்துத் தாதுக்களின் திரிபென்பது ஒரு தலையாதலால், பண்டை நாளில் தமிழர் பேசியது ஓரசை ஈரசைகள் கொண்ட ஆதிச்சொற்களாகும் தாதுக்களை மட்டும் கொண்டதோர் பாஷையே என்பது திண்ணம். உலகினிலுள்ள சர்வ பாஷைகளும் முதற்கண் ஒரு கைம்மண்ணளவு ஓரசை ஈரசைச் சொற்கள் மாத்திரம் கொண்டியன்றன என்பதூஉம், காலச் செலவில் அச் சிறு தொகைச் சொற்கள்தாம் உலகளவாய் எண்ணிறந்து பெருகி வந்திருக்கின்றன என்பதூஉம் மொழிநூல் விற்பன்னர்கட்கெல்லாம் ஒத்த துணிபு. இன்றைக்கும் சீனம் முதலிய சில மொழிகளில் ஓரசை ஆதிச்சொற் பருவம் நீங்காதிருத்தலும் நோக்கற்பாற்று. தமிழில் ஆதிச்சொற்கள் உருத் திரிந்து அச்சொற்களோடு ஒற்றுமைப்பட்ட புதுப்புதுப் பொருள் தரும். சீனத்தில் ஆதிச்சொற்கள் உருத்திரியாமலே சொல் நிலையாலும் சொற் கூட்டரவாலும் மட்டும் புதுப்புதுப் பொருள்தரும். இங்ஙனமே "லி"

எனுஞ் சீனச்சொல் தன் நிலைக்கேற்ப உழுதல், கலப்பை, உழவு மாடு எனும் பொருள் கொள்ளும். "த" என்பது பெரிய, மேன்மை, மிக என்றர்த்தம் கொள்ளும். 'வு' எனுஞ் சொற்கு மனிதன் என்பது பொருள். த வு எனின் பெரிய மனிதன், சான்றோன் எனவும், வு த எனின் மனிதன் பெரியன் எனவும் அர்த்தமாகும். (Max Muller, Science of Language II 380) தமிழிலும், ஆதிச்சொற்கள் மட்டும் நிலவியகாலையில், இவ்வாறே சொல் நிலையும் சொற்கூட்டரவுங்கொண்டு பொருள் விளங்கப் பெற்றதாகலாம் என உய்த்துணர்க.

பரவை வழக்கிலும் பழந்தமிழ் நூல்களுள்ளும் இன்று யாம் சுழியோடிக் காண்கின்ற தலையடிகள் எல்லாம் ஒரு நூற்றுக்கு மேற்பட்டனவல்ல. இவையிற்றையன்றிப் பல வழக்கொழிந்து இறந்து பட்டனவுமாகலாம். நூற்றுக்குட்பட்டனவும் பெயர், வினை, இடை, உரி எனும் பாகுபாடற்றனவுமான சொற்களைக்கொண்டும் உள்ளக் குறிப்புக்களை வெளிப்படுத்தல் கூடுமா? நூற்றுக்குக் குறைந்த சொற்களின் தொகுதியையும் ஒரு பாஷை என்னலாமா? எனும் கடா எழுவதுண்டாயின், சீனத்தில் இன்றைக்கும் சொற்பாகுபாடு அவ்வச் சொல்லோடு பொருந்திய குறியீட்டாலன்று சொல் நிலையாலேதான் பெறப்படுதலையும், பாலர்களும் அந்நியர்களும் ஒரு சில சொற்களைக்கொண்டு தம் மனக் குறிப்புக்களை ஒருவாறு வெளியிட்டுத் தீருதலையும் நோக்கி விடை சொல்லிக் கொள்க. மக்கள் சிறுதொகையினராய், கிருஷிகம், வர்த்தகம், தத்துவ ஆராய்ச்சி முதலிய துறைகளில் பயிலாதோராய், காற்றைப் போலும் சுயாதீனமுள்ளோராய், ஆடு மாடு மேய்த்துத் தான்றேன்றி நிலப் பயன்களை உண்டு தோலையோ மரவுரியையோ உடுத்துக் கட்டுமட்டாய் வாழ்ந்து வந்தகாலையில், அன்னோர்க்குச் சொல் வளங்கொண்ட பாஷையொன்று வேண்டப்படாது என்பதனையும் நுனித்துக் காண்க.

## தாதுக்களின் அகத்தியல்பு

யாஸ்கரைப் போலும் சொல்லுணர்ச்சி வல்லுநர்கள் அவ்வப் பாஷைச் சொற்கட்குத் தாதுக்களை ஆய்ந்து கண்டிருப்பினும், அத்தாதுக்கள் தாம் எவ்வாறு உண்டாயின? அவை எக்காலத்தாதல் அவ்வம் மொழியின் சொற்களாய் வழங்கினவா? எனும் இவ்வினாக்கட்கு விடை காணது போயினர். அன்னோர் கொள்கைப்படி தாதுக்கள் சநாதனமாய் எங்கோ மறைந்து கிடந்து மக்கள் வாய்ப்பட்டுச் சொற்கட்கு அடியாயின. அன்றேல்

அவை இயற்கை ஒலிகள் என்ப. இவை பொருந்தா. உண்மையில் அடிச் சொற்கள் எல்லாம் மக்களாக்கமாம். இது எமது தமிழ்ச் சொல்லாராய்ச்சி யால் இனிது முடிந்த முடிபு தமிழ்த் தாதுக்கள் எவ்வாறு உருவாக்கப் பட்டன என்பது மேல் வருவனவற்றால் விகசிதமாகும்.

தமிழ் அடிச்சொற்களெல்லாம் உள்ளபடி ஓரசைகளே. இவ் ஓரசைச் சொற்கள் உச்சாரணம் நோக்கிப் பெரும்பான்மை ஈரசைகளாய் நிற்கும். எங்ஙனம்? எல் என்பது ஓரசை. இது எழுகின்ற அக்கினிக் கோளத்தை, சூரியனைக் குறிக்கும். எழு என்பது ஈரசை. இது மேற்கிளம்புதலாகிய வினையைச் சுட்டும். எழ் என்பதே ஈற்றுயிர் கூட்டி எழு எனவாயிற்றெனக் கொள்க. தமிழ் அடிச்சொற்கள் பெரும்பான்மை ஈரசையேயாய் நிற்றல், தமிழ் மக்கள் வாய் கூட்டிச் சொல்லுதற்கு இதமாய் மெய்களோடு ஒவ் வோருயிரைச் சேர்த்து வழங்கும் பான்மையுடையோராயின்மை பற்றியே என்க. இனி அடிச்சொற்கள் யாவையும் நிரைப்படுத்தி நோக்குமிடத்து, அவை, தம்முள் உருவமும் பொருளும் ஒத்த நான்கு தொகுதிகளாக வகுக்கப்படும். இந்நான்கும் முறையே அ, உ, இ, எ எனும் சுட்டுயிர்களை முதல் நிலையாகவும், பெரும்பான்மை, ஒவ்வொரு மெய்யை (ஈற்றுயிர் ஒன்றோடு சேர்த்தியோ சேராமலோ) வியஞ்சனமாகவும் கொண்டனவாம். வியஞ்சனம் எனும் பெயர் வடமொழியில் "விளக்குவது" எனும் பொரு ளுள்ளது. யாம் ஈண்டு அதனைச் சொல்லுருப்படுத்தும் உறுப்பு எனும் பொருளில் வழங்குகின்றனம். உதாகரணம்: (1) "அடு" இதில் "அ" என் னும் சுட்டோடு "உ" என்னும் ஈற்றுயிர் சேர்ந்த டகர வியஞ்சனம் பொருந்தி, கிட்ட வைத்தல் எனும் பொருளுள்ள சொல்லாயிற்று. (2) "உள்" இதில் "உ"என்னும் சுட்டோடு ஈற்றுயிர் பெறாத ளகர வியஞ்சனம் பொருந்தி அகப்பக்கம் எனும் பொருளுள்ள சொல்லாயிற்று. இரு வியஞ்சனங்கள் ஒட்டி ஆக்கப்பெற்ற அடிச்சொற்களும் உள. உதாகரணம்: "அண்-ணு", இதில் ணகர வியஞ்சனத்தோடு உகரமூர்ந்த வேறொரு வியஞ்சனமும் பொருந்திற்று. பிற்றைஞான்றெழுந்த இலக்கண நூல்களுள் அ, உ, இ, எனும் இம் மூன்றுமே சுட்டெனப்படினும், எகரமும் முதற்கண் சுட்டுப் பொருள் கொண்டுதான் பின் வினாவர்த்தம் பொருந்திற்றென அறிக. (தமிழ் அமைப்புற்ற வரலாறு 11ஆம் பக்கங் காண்க.)

ஒரு சுட்டுயிரும், பெரும்பான்மை அச்சுட்டுயிரோடு உயிரூர்ந்த, அன்றேல் ஊராத மெய்யும், சிறுபான்மை இரட்டித்த மெய்யும் கொண்ட

னவே அடிச்சொற்களாம். இனி இவை எவ்வாறு ஆக்கப்பட்டன என ஆராய்வாம்.

## சுட்டுதலே பெயரீடு

சொற்கள் எல்லாம் பெயரே என்பது ஒருதலை. இங்கு நாம் வியா கரணத்தில் ஓதப்படும் பெயர்ச்சொல்லையன்று; பொருள், வினை, குணம் ஆகிய எதற்கும் நாமமாய் நிற்பதையே பெயர் என்கின்றோம். குரங்கு, ஆல், கல் என்பன பொருளின் பெயர். எடு, பற, கிட என்பன வினையின் பெயர். தண், நள், பெரும் என்பன குணத்தின் பெயர். இவ்வாறு எவ்வெச் சொல்லை எடுத்து நோக்கினும் அவ்வது ஒவ்வொன்றின் பெயரே ஆமாறு காண்க. ஓரோர் பொருள், வினை குணங்கட்குப் பெயர் இடும் முகத்தா லேயே சொற்கள் எழுந்தன. இனி ஒரு பொருட்குப் பெயரிடுவது எனின் அது யாது? அப்பொருளைப் பிறவற்றினின்றும் பிரித்து உணரவைத்தலே யாம். குரங்கு, ஆல், கல் இம் மூன்றும் பொருள்; மூன்றையும் வேறுபடுத்து இது குரங்கு, இது ஆல், இது கல் என உணர வைப்பதே அவ்வப் பெயர் எழுந்த நோக்கமாம். வேறுபடுத்து உணருதல்தான் அறிவுமாம். வேறு படுத் தல் எனினும் பிரித்துச் சுட்டுதல் எனினும் இரண்டும் ஒன்றே என உய்த் துணர்க. பெயர் எனுஞ் சொல்லேயும் பிரித்தலினின்று எழுந்தது. எங்ஙனம்? பிரி> பேர்> பெயர் என்பது அதன் வரலாறாம். பிரித்ததே பெயர். இவ்வரலாறு மேல் விளக்கப்பெறுவது. அன்னணமே அறிவு எனுஞ் சொல்லின் பிறப்பும் இப் பிரித்துச் சுட்டுதலை நயம் பெறக்காட்டும். வெட்டுதல் எனும் பொருளுள்ள அறு எனுஞ் சொல்தான் அறவு எனவும் அறிவு எனவுந் திரிந்து நிற்கும். இரண்டும் அறுத்தது, பிரித்தது எனும் பொருளையே தருவன. பிரித்துக் கண்டது அறிவு. பிரித்துக் காணத விடத்து அறிவின்மையாகிய மயக்கமே விரவும் என்றபடி.

ஆயின் குரங்கு, ஆல், கல் என்பன, தாம் வழிச்சொற்கள் ஆதலால், ஒவ்வொரு பொருளை மிகத் துளக்கமாய்ச் சுட்டும் பெயரீடுகளாகின்றன. அடிச் சொற்கள் எல்லாம் அவ்வாறல்ல. அவை ஆதியில் பெரும்பான்மை மங்குளமாகவே பொருளாதிகளைச் சுட்டிப் பின் படிக்கிரமமாய் உருத் திரிந்து அதிகத் துளக்கமடைந்தன என்பது மேல்வருவனவற்றால் வெளிப் படும். உண்மையில் முதற்கண் சொற்களாய் வாய்த்தன முறையே "அண் மையில்" "சேய்மையில்" "கீழே" "மேலே" எனும் நால்வகை இடவேறு பாட்டை மட்டும் சுட்டிக்காட்டிய அ, உ, இ, எ எனும் பேச்சொலிகளாம்.

இவ்வுண்மைச் சுட்டொலிகளையே முன்னிலையாக் கொண்ட நால் வகைக் கூட்டத் தமிழ்ச் சொற்பரப்பினால் ஊகிக்கக் கிடக்கின்றது. தமிழ் அகராதி யின் கண்ணுள்ள உயிர்வருக்க முதனிலைச் சொற்களெல்லாம் அ, உ, இ, எ எனும் நாலுயிர்களையும் தலையெனக்கொண்ட அடிகளினின்றுதான் பிறந்தனவெனவும், அவ்வகராதியின் ஏனை மெய்வருக்க முதனிலைச் சொற்களும் அவற்றினின்றே பிறந்தனவெனவும் இந்நூலினுட் பின்னர்க் காட்டுதும். ஆதிமானுடர் கைப் பயிலாற் பொருளாதிகளைக் காட்டித் தம் உள்ளக் கிடக்கைகளை ஒருவர்க்கொருவர் தெரிவித்து உளார் என்பதூஉம், கைப் பாஷையே வாய்ப் பாஷைக்கு முன் வழங்கிற்று என்பதூஉம், மொழி நூலாளர் சில்லோரது அபிமதம். இது முழுதும் பொருத்தமற்றதன்று. வாய்ச் சொல்லாலான பாஷைகள் நன்றாய் வளர்க்கப்பட்டிருக்கும் எங்கா லத்திலும் சொல்லுறுதியின் பொருட்டுப் பிரசங்கிகள் ஆதியோர் சைகை களையும் நற்பயனோடு ஆங்காங்கு எடுத்தாண்டு வருகின்றமையால், ஆதியில் சைகைகள் மிகப் பயின்றனவாகலாம் என்பது உறுதி. ஆயினும் இயல்பில் ஆறறிவுள்ளவனாகிய மானுடன், நெறிப்படுத்திய தன் குரலாலே யும் பொருளாதிகளைச் சுட்டும் ஆற்றல் தனக்கு உண்டு என்பதை ஏலவே உணர்ந்து, அக்குரலொலியை இயன்றவரை கையாண்டிருப்பான் எனத் துணிதற்குப் போதிய ஏதுக்கள் காணப்படுகின்றன. முதற்கண் எடுத்து வழங்கிய பேச்சொலிகளே நான்கு சுட்டுமாம் என்பது முன்னர் தெரிக் கப்பட்டது.

நான்கு சுட்டுமாகிய ஆதிப் பேச்சொலிகள் அண்மை, சேய்மை, கீழுறல், மேலுறல் எனும் இடவேறுபாட்டை மட்டும் தெரிக்க வாய்த்தன. ஆயின் பொருளாதிகளின் பெயரீட்டுக்கும் இதற்கும் எத்துணைத் தூரம்! சுட்டுக்கள் தனி நின்றவிடத்துத் துளக்கமாய் எதனையும் பிரித்துக்காட்டும் வன்மை அவற்றிற்கின்று. ஆகலினன்றே அச்சுட்டுக்களோடு வியஞ்சனங் கள் (விளக்குகின்றவைகள்) எனப்படும் மெய்களைச் சேர்த்தி இவ்வுபா யத்தால் வரையறுத்த எண்ணங்களை விளக்கும் ஆதிச்சொற்கள் ஆக்கப் பட்டன என்க.

உண்மையில் நான்காய் நின்ற சுட்டுக்களோடு ஆக்கப்பெற்ற அடிச் சொற்களின் வரலாற்றினையும், அகர உகரங்கள் ஆதித் தமிழ்ச் சொல்ல மைப்பில் முறையே அண்மையையும் சேய்மையையும் (உட்பட்டு மறை யுந் தன்மை சேய்மையுள் அடங்கும்) குறிக்கின்ற பான்மையையும் முன் சுட்டிய எமது "தமிழ் அமைப்புற்ற வரலாறு" நூலினுட் கண்டு தெளிக.

## சொல்லெல்லாம் இடச்சார்பு பற்றிப் பிறந்தனவே

ஒலிக்குறிப்பு மாத்திரையான கறகற, சரசர ஆதிய ஒரு சில சொற் களை ஒழித்து, ஒழிந்த ஏனைத் தமிழ்ச் சொற்கள் அனைத்தும் அண்மை. சேய்மை. கீழுறல். மேலுறல் எனும் இடச்சம்பந்தம் பற்றியே பிறந்தன வாதல் மேல்வரும் பிரிவுகளில் விளக்கப்படும். ஈண்டு முன் எடுத்தோதிய குரங்கு. ஆல் கல் எனும் மூன்று பொருட்பெயரீடுகளையும் உதாகரண மாகத் தந்து அப்பாற் செல்லுவாம். வானரத்துக்குக் குரங்குப் பெயர் வந் தமை எவ்வாறு? அப்பெயர் இடச்சார்பு பற்றி எழுந்ததென்றல் ஒக்குமா? ஒக்கும் ஒக்கும். எங்ஙனமெனில் குர-ங்கு எனுஞ் சொல் கொடு-கு எனுஞ் சொல்லின் மரூஉ என்றும். கொடு-குதலே குடங்-குதல். குரங்-குதல் என்றும் வழிச் சொல்லாக்கக் கட்டளைகளை விளக்குமிடத்துக் காட்டுதும். இக் கொடு-கு என்பது குட-கு எனும் சொல்லின் மரூஉ. குடகுச் சொற்கு உற்பத்தி குழை என்பது. குழைதல் உலைதலினின்றும் தோற்றுவது. உலை தல் உள் விழுந்து விழுந்து வருதலாம். வளைதலும் அது. அங்ஙனமே உள் எனும் சொல்லே> குழை-தல் குடங்-குதல்> குர-ங்குதல் என நின்று. வளைந்து குடங்கிய மேனியையுடைய மிருகத்தைக் குறிக்கும். உள் என் பதோ உகரச் சுட்டால் பிறந்த சேய்மைப் பொருளின் திரிபாகிய மறைந்த விடத்தின் பெயராம். உள்ளிடம் என்னும் இடச் சம்பந்தம் வளைதற் பொரு ளையும். அப்பால் குடங்குதற் பொருளையும். அதன்மேல் குடங்கித் திரித லைப் புறப்பாடான இயல்பாக் கொண்ட வானரத்தையும் சுட்டுதல் காண்க.

இவ்வாறே வட விருட்சத்தினுக்கு ஆல் எனும் பெயரீடு அக-லு எனும் இடம் பற்றிய பெயரால் உண்டாயிற்று. அண்மையின் நீங்கிப் புறத்தே பரத் தல் அகலுதலாம். மிகப்பரத்தலைப் புறப்பாடான குணமாக்கொண்ட மரம் ஆல் எனப்பட்டது.

கல் எனும் உருவம் அள் (அடு) என்பதினின்றும் எழுந்த வழிச் சொல். “அள்” நெருங்கியிருத்தலையும் அக்குணத்தின் திரிபேயாகிய இறுக்கத்தையும் சுட்டுவதோர் தலைச்சொல். ‘அள்’ தான் கல் எனும் உரு வந்தாங்கி. மிக இறுகிக் கடினமாயிருத்தலைத் தன் சிறப்பியல்பாக் கொண்ட அசுமத்துக்குப் பெயராயிற்று. இம்மாற்றங்களை ஆளும் மொழி நூல் விதிகள் மேல்வரும்அதிகாரத்தினுள் விளக்கப்படுவன.

○○○

# இரண்டாம் அதிகாரம்

# LAWS GOVERNING THE FORMATION OF DERIVATIVES

## வழிச்சொல்லாக்கக் கட்டளைகள்

தமிழ் மொழியில் தலை அடிச்சொற்கள் ஆக்கப்பெற்ற முறை முன் விளக்கப்பட்டது. அவ்வடிச் சொற்கள் யாம் பழந்தமிழ் இலக்கியங்களில் தேடிக் கண்டளவில் ஒரு நூற்றுக்குமேல் இல என்றோம். தலையடிகளி னின்று வழியடிச் சொற்களும், இவை இரண்டினையுந் துணைக்கொண்டு வெவ்வேறு வழிச்சொற்களும் காலச் செலவில் படிப்படியே அமைக்கப் பட்டன. முதல் அதிகாரத்திற் தரப்பட்ட காட்டுக்களை ஈண்டு நினைந்து கொள்க. ஆங்கு எழு எனும் தலையடியினின்றும் எல், எழில், எழுத்து ஆதிய வழிச்சொற்கள் பிறந்தமையும், உலை எனும் தலையடியினின்றும் துழ எனும் வழியடியும், அப்பால் தொழுவை, தோணி ஆதிய வழிச்சொற் களும் பிறந்தமையும் தெரிக்கப்பட்டது. இனித் தலையடிகள் வழியடிகளாக மாறுதலும் இருவகை அடிகளினின்றும் வழிச்சொற்கள் கிளைப்பதும் படிக்கிரமமாய் நடப்பதொரு நிகழ்ச்சியாம்; ஒரு பாஷையைப் பேசுவோ ரின் கண்டம், அண்ணம், வாய், இதழ்கள் ஆதிய பேச்சுறுப்புக்களின் தன்மையையும், நாப் பயிற்சியின் வன்மையையும் ஒட்டிப் பேச்சொலியா னது வேறுபடுகின்ற இயற்கை விதிகளை அனுசரித்து ஏற்படுவதொரு விகற்பமாம். ஆகலின் இவ்விதிகளை அன்றேல் கட்டளைகளை நாம் ஆராய்ந்து கண்டுகொள்வதுண்டாயின், எவ்வெச் சொல்லையும் அதன தன் பிறப்பிடமாகிய தலையடி வரையில் துருவித் துருவித் தொடர்ந்து சென்று. அவ்வச்சொல்லின் உண்மை உற்பத்தியை முறைப்படி நிச்சயித் துக் கொண்டதாகும் அன்றோ? ஆதலால் வழிச்சொல் ஆக்கக் கட்டளை கள் இனி ஆராயப்படும் என்க.

## 1 ஆம் கட்டளை

## கருத்தை வேறுபடுத்தும் உச்சாரண உயிர்கள்

சொல்லுதற்கு எளிதாதற் பொருட்டு வியஞ்சனத்தோடு சேர்ந்து வரும் உயிரே உச்சாரண உயிர் எனப்படும். முன் அதிகாரத்திற் கண்ட உள் எனும் உதாகரணத்தில் உகரச் சுட்டோடு ளகர வியஞ்சனஞ் சேர்ந்து நின்றவிடத்து, உள் எனுஞ் சொல்லை உச்சரித்தல் எளிதாகையால் உச்சாரண உயிர் வேறொன்று வேண்டப்படாததாயிற்று. ஆயின், அகரச் சுட்டோடு டகரஞ் சேர்ந்து வேறொன்று சொல் உண்டானவிடத்து அட் என உச்சரித்தல் தமிழ் நாவுக்குக் கடினமாதலின், உகர உயிரை ஈற்றிற் சேர்த்தி அடு என வைக்கப்பட்டது. இங்குச் சொல்லுதற்கு எளிதாகும் பொருட்டு எழுந்த உகரம் உச்சாரண உகரமெனும் பெயர் பெறுவது. இவ்வாறே அக-லு என்னுஞ் சொல்லில் இடை நின்ற அகரமும் ஈற்றுகரமும் உச்சாரண உயிர்களாமெனக் காண்க. உச்சாரண உயிரின்றி வல்லின மெய்களைச் சொல்வீற்றில் வரவிடுதலும் அம்மெய்கள் பல அடுக்கிச் சொல்லுதலும் ஆரியம் ஆதிய பாஷைகளிற் போலத் தமிழில் வழங்காமை தமிழ் மக்களது பேச்சுறுப்புக்களும் நாப் பயிற்சியும் அதற்கிடங்கொடாமையினாலாம் என உய்த்துணர்க. எங்ஙனம்? ஆரியத்தில் வாக் எனும் உருவம் ஒரு சொல். அது தமிழில் வாக்கு என உச்சாரண உகரம் பெற்றன்றி வழங்காது. ஆரியத்தில் சக்ரம் எனும் சொல் தமிழில் உச்சாரண அகரம் இடையிற்சேர்ந்து சக்கரம் என்றதாலே மரபு.

சொல்லுதல் எளிதாகும் பொருட்டு வழங்கும் உச்சாரண உயிர்களேயன்றி, சொற்கருத்தை வேறுபடுத்தும் உச்சாரண உயிர்களும் உள. அவையுண்மையையே வழிச்சொல்லாக்கத்தின் முதற் கட்டளையாய் நாம் இங்கு நிறுவுவது என அறிக. இக்கட்டளையை இரு உதாகரணங்களால் விளக்குதும். இகரச் சுட்டு கீழுறலைக் குறிக்கும் அன்றோ? இஃது ழகர வியஞ்சனத்தோடு பொருந்தி இழ் என்றாகி உச்சாரண இகரம் பெறும்போது இழி எனும் தலையடிச் சொல் பிறக்கும். இழிதல்=கீழ் நோக்கி வரல், இறங்குதல். "இழி"ச் சொல்லின் உச்சாரண இகரம் வேறு உயிர்களாக மாறுமிடத்து வெவ்வேறு கருத்துள்ள தலையடிச் சொற்கள் ஆக்கப்படும். எங்ஙனம்?

இழி=கீழ் நோக்கி வா, இறங்கு. ஈண்டு உச்சாரண இகரம்.

இழு=கீழ் நோக்கி வரச்செய், விழுத்து. ஈண்டு இகரம் உகரமாயிற்று.

இழ=கீழ்நோக்கி விழவிடு, கைவிடு. ஈண்டு இகரம் அகரமாயிற்று.

இழை=கீழ்விழுத்தி அழுத்து, பின்னு. ஈண்டு இகரம் ஐகாரமாயிற்று.

இவை நான்கு சொற்களிலும் கீழுறுதலாகிய ஆதி அர்த்தமொன்றே, உச்சாரண உயிரின் வேறுபாட்டுக்கொப்ப, சிறிது சிறிது வேறுபட்ட பொருள் தந்து நிற்கின்ற விநோதத்தை நுனித்துக் காண்க. இறங்குதல் எனும் அர்த்தங்கொண்ட "இழி"ச் சொல்லின் உச்சாரண இகரம் உகரமாகுமிடத்து விழுத்துதலும், அகரமாகுமிடத்துக் கைவிடுதலும், ஐகாரமாகுமிடத்து அழுத்துதலும் எனும் அர்த்த விகற்பங்கள் பெறப்பட்டன.

இங்ஙனமே அண்மையில் எனும் அர்த்தமுள்ள அகரச் சுட்டோடு டகர வியஞ்சனஞ் சேர்ந்து உச்சாரண உகரம் பெற்றுவந்த அடு எனும் தலையடிச் சொல், உச்சாரண உயிர் வேறுபாட்டால் கருத்து வேறுபடுதல் பின்வருமாறு:-

அடு=அண்மையில் வை, இறுக்கு, ஈண்டு உச்சாரண உகரம்.

அடி=அண்மையாக்கு, இறுகச்செய், அடக்கு. ஈண்டு உகரம் இகரமாயிற்று.

அட-ர்=அண்மையாகு, நெருங்கு, ஈண்டு உகரம் அகரமாயிற்று. இச்சொல்லில் உறுதியின் பொருட்டு ரகர வியஞ்சனமும் கூட்டுற்றது. மேல் வருவனவற்றில் அதன் விளக்கங் காண்க.

அடை=அண்மையாகு, சேர், ஈண்டு உகரம் ஐகாரமாயிற்று.

அண்மையில் வைத்தலாகிய ஆதி அர்த்தமானது உச்சாரண உயிர் மாற்றத்தால் இறுக்குதல், அடக்குதல், நெருங்குதல், சேர்தல் எனச் சிறிது சிறிது விகற்பித்து வருதலை நோக்குக. காட்டிய உதாகரணத் தொகுதிகள் இரண்டும் தலை அடிச் சொற்களாம். வழி அடிச் சொற்களிலேயும், அப்பால் இருவகை அடிகளினும் நின்றும் பிறக்கின்ற வழிச் சொற்களிலேயும், இவ்வாறு கருத்தை வேறுபடுத்து நிற்கின்ற உச்சாரண உயிர்களைக் குறித்துக்கொள்க.

## 2ஆம் கட்டளை

### வேறுபடும் வியஞ்சனங்கள்

சொற்கருத்தைச் சிறிது விகற்பித்து வேறு சொல்லாக்குதற்குத் தமிழில் மிகப் பயிலும் உபாயங்களுளொன்று தம்முள் பிறப்பொத்த வியஞ்

சனங்களை மாற்றி வைத்தலாம். வியஞ்சன மாற்றில் பிறப்பொத்தனவாகக் கொள்ளப்படும் மெய்களது வரிசை பின்வருவது:-

1. ககரத்தினின்று சகரமும், சகரத்தினின்று தகரமும் பிறக்கும். அப்பால் சகரத்தினின்று யகரமும், யகரத்தினின்று ஞகரமும், ஞகரத்தினின்று நகர ஙகரங்களும் பிறக்கும். இவற்றோடு ககரம் வகரமாவதூஉம், வகரம் பகரமாவதூஉம், நகரம் லகரமாவதூஉம் கொள்க.

2. லகரத்தினின்று ரகரமும் ளகரமும், ளகரத்தினின்று ழகரமும் பிறக்கும். இவை றகர னகரமும், டகர ணகரமும் ஆவதூஉங்கொள்க.

3. மகரத்தினின்று பகரமும், பகரத்தினின்று வகரமும் பிறக்கும். மகரம் நகரமாவதூஉங் கொள்க.

ஆகவே வியஞ்சன மாற்றங்களை மேல்வருமாறு சூசிப்பிக்கலாம்:

1. க. (வ, ப) ச, த, ய, ஞ, ந, (ல) ங
2. ல, ர, ள, ழ, ட, ண, ற, ன,
3. ம, (ந) ப, வ,

முன் எடுத்தாண்ட ஒரு தலையடிச் சொல்லினின்று இக்கட்டளைக்கு உதாகரணங் காட்டுதும். கீழ் நோக்கிவரச் செய்தலை உணர்த்துகின்ற இழு எனும் சொல் வியஞ்சன மாற்றத்தால் சிறிது சிறிது அர்த்தம் பேதப்பட்டுப் பின்வருமாறு புதுச் சொற்களாகும்.

இழு=கீழ்நோக்கி வரச்செய்

இடு=கீழே வை. ஈண்டு ழகரம் டகரமாயிற்று

இரு=கீழே மடங்கு. ழகரம் ரகரமாயிற்று

இறு=கீழே சமர்ப்பி. ழகரம் றகரமாயிற்று

அப்பால் 1ஆம் கட்டளைப்படி இச்சொற்களின் உச்சாரண உகரம் வேற்றுயிர்களாகுமிடத்துப் பின்னும் வேறு சொற்கள் பிறக்கும்:-

இடு-

இட என, உகரம் அகரமாகி எடுத்துவை, கடந்துபோ எனப்பொருள் கொள்ளும்.

இடி என, உகரம் இகரமாகி உறுத்தி வைத்தலைக் காட்டும்.

அவ்வாறே

இரு-

இர என, உகரம் அகரமாகிக் கீழ்ப்படு, பிச்சை வாங்கு எனப் பொருள்கொள்ளும்.

இரி என, உகரம் இகரமாகிக் கீழே விழு, அழி எனப் பொருள்படும்.

இறு-

இற என, உகரம் அகரமாகி கீழே விழு, அழி, சா எனப் பொருள் கொள்ளும்

இறை என, உகரம் ஐகாரமாகி, கீழே பரப்பு எனப் பொருள்படும்

இவையெல்லாம் அடிச்சொற்களின் பிரதம விகற்பங்கள். இவை தாம் மேலும் விகற்பமாவது பின்வருங் கட்டளைகளை விளக்குங்காற் காட்டப் படும். ககர வரிசையிலும் மகர வரிசையிலும் இங்கு உதாகரியாதொழிந்த வியஞ்சன வேறுபாடுகளை மேல்வரும் அதிகாரங்களுட் பரக்கக் காண்க.

## 3ஆம் கட்டளை

### மேல்வந்துறும் வியஞ்சனங்கள்

அ. உ. இ. எ எனும் சுட்டுயிர்களோடு ஒவ்வொரு மெய்யைத் தனித்தாதல் உயிரூர்வித்தாதல், சொல்லை உருப்படுத்துகின்ற வியஞ்சன மாய்ச் சேர்த்தி அமைக்கப்பட்டனவே தலையடிச் சொற்கள் எனக் கூறப் பட்டது அன்றோ? தலையடிச் சொற்களின் கருத்தைப் படிப்படியாய் வேறு படுத்துப் புதுப்புது வழிச்சொற்களை உருவாக்கும் முகத்தால், இவற்றின் **வியஞ்சனத்தோடு மேலும் ஒரு வியஞ்சனம் சேர்க்கப்படுதலா யிற்று**. இவ்வியஞ்சனம் சிலகால் தனக்கினமான மெல் ஒற்றோடும், சில கால் அவ் ஒற்றின்றியும் இயலும். இவ்வாறே முன் எடுத்தாண்ட தலைச் சொற்கள் சில பின்னும் வழிச்சொற்களைப் பெருக்கியபான்மை பின் வருவது:

| | |
|---|---|
| இழு= விழுத்து; | இழு-கு= பின் வீழ்ந்துநில் |
| இழ= கைவிடு; | இழ-கு= நுகையவிடு |
| இடு= கீழேவை; | இடு-ங்கு= இழுத்துவிழுத்து |
| இர= கீழ்ப்படு; | இர-ங்கு= கீழ்ப்படக் கண்ணோக்கு |
| இற= கீழே விழு; | இற-ங்கு= கீழ்நோக்கிச்செல் |

இவ்வழிச்சொற்கள் அனைத்திலும் அடிச்சொல்லின் ஆதி அர்த்தமே ஒரு சிறிது திரிந்து புதுப்புது உள்ளக் கிடக்கையாய் நிற்றலைக் கவனிக்க. அனைத்திலும் "கீழுறல்" எனும் மனக்குறிப்பு விரவிநிற்கின்றது. இங்ஙன மாக நால்வகைச் சுட்டுக்களினின்றும் பிறந்த அடிகள்தாம் தமிழ்ச்சொற் கட்கெல்லாம், அண்மைச் சார்பாலோ சேய்மைச் சார்பாலோ, உற்பத்தித் தானமாயிருத்தல் அடைவிலே வெள்ளிடை விளங்கலாகும்.

சுட்டுக்களோடு சொல்லுருப்படுத்தும் வியஞ்சனத்தைச் சேராது, அச்சுட்டுக்கள் தம்மையே நீட்டி அமைக்கப்பட்ட ஆ, ஊ முதலிய தலை யடிச்சொற்களும் சிலவுள. இவையும் மேலுறும் வியஞ்சனச் சேர்க்கை யால் வழிச்சொல்லாகும். உதாகரணம்:

ஆ-கு= அண்மை கொள், கைகூடு

ஓ-ங்கு(ஊங்கு)= சேய்மை கொள், உயர்

இவை இரண்டையும் அடிச்சொல்லென்னாது வழிச்சொல் என்றல் யாது பற் றியோ? எனின்; ஆ, ஊ, என்பன தாமே உண்மையில் அடிச்சொற்களாம்: சுட்டுயிர்களோடு சொல்லுருப்பாட்டு மெய் சேர்ந்தவைதாம் தலை அடிச் சொற்களாமென்பது பொது விதியாயினும், சிறப்புவிதியால், ஒரோவிடத்து அச்சுட்டுயிர்கள் நீண்டு வியஞ்சனத்தினிடமாய் நிற்றலுங் கொள்ளப்படும். மங்குளமான குறிப்புக்களை மட்டுங் காட்டுகின்ற சுட்டுக்கள் அதி துளக்க மான பெயரீடுகளாய் வரும்பொருட்டே வியஞ்சனங் கூட்டப்படுமென்பது இதுகாறும் சொல்லியவற்றால் விகசிதமாயிற்றன்றோ? வியஞ்சனமானது சுட்டை வலியுறுத்து விடுதலினால் அன்றோ அதி துளக்கப் பெயரீட்டைத் தருகின்றதோர் சொல் ஆக்கப்படுவதாகும். இனிச் சுட்டை வியஞ்சனத் தால் வலியுறுத்தல் பொது விதியும், அச்சுட்டைத்தான் நீட்டலால் வலியுறுத் தல் சிறப்பு விதியுமாமென்க. அற்றாகலின், "அ" எனும் அண்மைப் பொருட் சுட்டு "ஆ" என நீண்டவிடத்து, அண்மைகொள்ளல் எனும் பொருளுள்ள சொல்லாயிற்று. இது தலையடிச்சொல் மேலொரு வியஞ்சனஞ் சேர்ந்த தால் "ஆ-கு" என வந்து கைவரற் பொருளை உணர்த்திற்று. இது வழி யடிச்சொல். இவ்வாறே "உ" எனும் சேய்மைப் பொருட் சுட்டு "ஊ" என நீண்டவிடத்து சேய்மை கொள்ளலை உணர்த்திற்று. இது தலையடிச் சொல். ஊங்கு. ஊக்குதல் எனும் சொற்களில் இவ்வர்த்தத்தை நுண்ணறிவாற் காண்க. "ஊ" தான் "ஓ" வாகி ஓ-ங்கு என வந்து உயர்தலை உயர்த்திற்று. இது வழியடிச்சொல். உயிர் மாற்று விதிகள் பின் தெளிவிக்கப்படும்.

அடிச்சொல்லாக்கத்தில் துணைபுரியும் ஆதி வியஞ்சனத்தின்பின். மேலும் வந்துறுகின்ற வியஞ்சனமென யாம் இதுகாறும் காட்டியது உகரம் ஊர்ந்த ககரம் மாத்திரையேயாயினும். உகரமூர்ந்த பிற மெய்களும் வரும். எங்ஙனம்?

சு. ஞ்சு. டு. ண்டு.

து. ந்து. பு. ம்பு.

மு. லு. ரு. (ர்) து. வு.

என வரும். இம்மேலுறும் வியஞ்சனங்கள் இங்ஙனம் பெருகி விரிந்தமை. பெரும்பான்மை நாடோடி உச்சாரண பேதத்தால் ஒன்று மற்றொன்றாய் மாறினமை பற்றியாம் என்பது வேறோரிடத்தில் விளக்கப்படும். ஆயின். சிறுபான்மை. மேலுறும் வியஞ்சன பேதம் அர்த்த விகற்பத்தின் பொருட்டே எழுந்தது. ககரம் சகரமாயினமைக்குக் காட்டுப் பின்வருவது:-

இற-ங்கு= கீழ்நோக்கிச் செல்

இறை-ஞ்சு= கீழ்நோக்கி வளை. கும்பிடு

ககரம் வேறு பல மெய்களாயினமைக்குக் காட்டாகத் திருகு எனும் ஒரு வழிச்சொல்லைத் தருகுதும்: இது உண்மையில் துருகு எனும் உருவந் தாங்குதற்பாற்று. யாம் முதலதிகாரத்திற் காட்டிய துழ என்பது இதற்கு வழி யடியும். உழ-ல் <உள் என்பன தலையடியுமாம். துழ என்பதை "துரு" என்றாகி துரு-கு. திரு-கு என மேலுறும் வியஞ்சனம் பெற்றுவரும். ஈண்டு "துரு" வின் முதலுகரம் இகரமாயிற்று. இனி:

திரு-கு= உழற்று. முறுக்கு

திரு-டு= சூழ்ந்தெடு. சூறையாடு

திரு-ந்து= சுற்றிவா, நெறிப்படு

திரு-ம்பு= சுழன்றுவா. மீள்

திரு-மு= சுழன்றுவா. மீள்

துரு-வு= சுழற்று. கடை. தேடிச்செல்

இச்சொல்லனைத்திலும் வந்த மேலுறும் வியஞ்சன மாற்றம் அர்த்த வேறு பாட்டின் பொருட்டாயிற்று. இங்கு வாராத அர்த்த விகற்ப பூர்வமான மேலு றும் வியஞ்சன மாற்றங்கட்குக் காட்டுக்களைப் பின்னால் வந்துழிக் காண்க.

ஈண்டு வந்துற்ற வியஞ்சனங்கள் யாவும் உகரவுயிரூர்ந்த மெய்களா யின அன்றோ? வேறோர் உயிர் இன்றி உகரமே என்றும் இச்சொற்களில் வரக் காரணம் யாது? எனில், அதனையும் அனுமானித்துக் கூறுதும்.

இதுவரை தெரித்த வழிச்சொல்லாக்கக் கட்டளைகளில் வினைச் சொற்களை மட்டும் உதாரணங்களாகத் தந்துள்ளோம். எற்றுக்கெனில், அக்கட்டளைகளை வினைச்சொற்களால் விளக்குதல் எளிதாயினமை யாலாம்.

பெயர்ச்சொற்களில் மேலுறும் வியஞ்சனங்கள்போற் தோன்றும் கடை நிலைகளுமுள. ஆயின் இவை முதனிலைச் சொல்லோடு அடுக்கப் பெற்ற பிறிதொரு சொல்லின் சிதைவேயன்றி வேறல்ல. இவற்றை “விகுதி” என வகுப்பர் இலக்கண நூலோர். உதாரணம்:

| | | |
|---|---|---|
| படி-ப்பு | பகர்-நர் | |
| கவி-கை | தா-ழம் | |
| உறு-தி | கட-வுள் | |
| அரி-யல் | குமி-ழ் | |
| வா-யில் | ஞா-யிறு- | ஆதியன. |

இச்சொற்களிற் பு. கை, அல், இல், நர், அம், உள், இழ், இறு எனும் கடை நிலைகள் எல்லாம் ஆதித் தமிழ்த் தனிச்சொற்களின் விகாரங்களே என் பது மேல்வரும் எட்டாவது கட்டளையுட் தெளிவாக்கப்படும். பெயர்ச் சொற்களின் “விகுதி” களைப் போலன்றி, வினைச்சொற்களின் மேலுறும் வியஞ்சனங்களெல்லாம் உகரவுயிரூர்ந்த மெய்கள் ஆகின்றமையை நோக் கும்போது, அவ்வுகரம் வினைப்பொருள் மயமாய் இருத்தல் புலனாகும். அது எவ்வாறு? உகரச்சுட்டு சேய்மையை விளக்குவதன்றோ? சேய் மையை நாடத் தூண்டுதல் முகத்தால் அவ் உகரத்துக்கு வினையர்த்தம் பொருந்திற்றுப் போலும். எங்ஙனம்? இழு-கு= விழுத்துதலைச் செய், இழ-கு= கைவிடுதலைச் செய் என்றபடி. பிற காட்டுக்களையும் உய்த்துணர்க.

## 4ஆம் கட்டளை

## வியஞ்சனம் இரட்டலும் மெல்லொற்று அணைதலும்

சொல்லமைப்பின்கண் விளங்கும் அடிப்படையான நியமம் யாதெ னில், புதுப்புது மனக்குறிப்புக்களை வெளியாக்குதல் வேண்டப்படுந்

தோறும். முன்னிருந்த சொற்களை வலியுறுத்து உச்சரித்து வேறுபுதுச் சொற்களை ஆக்கிக் கொள்வதாம். முன்னர் யாம் தந்த கட்டளைகளிலும், பின்வருவனவற்றிலும் இந்த நியமமே சொலித்தலைச் சிங்கநோக்காய்க் காண்க. முந்திய சொற்களைப் பலவேறுவகையில் வலியுறுத்துப் புதுச் சொல்லாக்குதலே யாண்டும் பெருவழக்காகின்றது. இனி நான்காங் கட்டளை, தன்வினைச் சொற்களில் வரும் முதலாம் அன்றேல் இரண்டாம் வியஞ்சனத்தை இரட்டித்தலினால் அவற்றைப் பிறவினை ஆக்குதலாம். வியஞ்சனத்தை மெலித்தலால் பிறவினை தன்வினை ஆகுதலுங்கொள்க. உதாகரணம்:

| | |
|---|---|
| ஆ-கு | ஆ-க்கு |
| இள-கு | இள-க்கு |
| இற-ங்கு | இற-க்கு |
| ஓ-ங்கு | ஊ-க்கு, ஓ-ச்சு. இங்கு. ககரம் சகரமாயினமைக்கு 4ஆம் அதிகாரம் காண்க. |
| திரு-ந்து | திரு-த்து |
| திரு-ம்பு | திரு-ப்பு |
| அ-ட்டு | அ-ண்டு |

ஆகு ஆதிய சொற்கள் தன்வினையாயிருப்ப, அவற்றின் வியஞ்சனத்தை இரட்டித்து ஆக்கு ஆதியனவாக உச்சரித்தலினல் பிறவினைகள் உருவான நுட்பம் நோக்கற்பாற்று. யாதோர் செயலை அதன் வினை முதலினின்று பிறிதொன்றிற் சேரச் செலுத்தும்போது மிகுத்த முயற்சி வேண்டப் படுமன்றோ? இம்மீசுர முயற்சியைக் காட்டுதற்கு, தனி வியஞ்சனத்தைக் காட்டில் அதிகக் கடினமான நா முயற்சியை வேண்டி நிற்கின்ற இரட்டித்த வியஞ்சனத்தை வேலை கொள்ளல் சொல்லமைப்பிற்கு எத்துணைப் பொருத்தமாகின்றதென உணர்க.

வியஞ்சனம் இரட்டித்தல் மெலித்தல்கள் பெயர்ச்சொல்லாக்கத்தில் மிகப் பயிலும். உதாகரணம்: ஆகு-ஆக்கம், இளகு-இளக்கம், திருடு-திருட்டு என்பனவாகி வருதலை முன்னர்த் தந்த சொற்களிலும் வைத்துக் காண்க. பிறவுமன்ன. முற்காலம் அடு, உடை, மறை, எரி, அழி, இடி முதலிய சில சொற்கள். ஸ்வர பேதத்தால் தன்வினை பிற வினை என அறியப் பட்டன. தற்காலம் வியஞ்சனம் இரட்டித்தல் மெலித்தல்களினால் அவ் வேறுபாட்டைத் தெரிப்பனவாகின்றமையையும் ஈண்டுக் குறித்துக் கொள்க.

எங்ஙனம்? அ-டு என எடுத்துக்கூறுதல் சேர்தற் பொருளும், அ-டு எனப் படுத்துக்கூறல் சேர்த்தற் பொருளுமாய் நின்றது. இச்சுரபேதம் பின்வந்த வியஞ்சனங்களை இரட்டலாலும் மெலித்தலாலும் விளக்கப்படுவதா யிற்று. உதாகரணம்:

| ***பிறவினை*** | ***தன்வினை*** |
|---|---|
| அடு-அட்டு | அண்டு |
| உடை-உடைத்து | உடைந்து |
| மறை-மறைத்து | மறைந்து-பிறவுமன்ன |

பெயர் உருவங்களில் அட்டல், அண்டல்; உடைத்தல், உடைதல்; உடைப்பு, உடைவு; மறைத்தல், மறைதல்; மறைப்பு, மறைவு எனப் பலவாறாய் வரும். இவற்றுளெல்லாம் சொல்லுறுதி கூடிய உருவம் பிற வினையும், குறைந்த உருவம் தன்வினையுமாய் நிற்றல் கண்கூடு.

OOO

மூன்றாம் அதிகாரம்

# FOUR MORE LAWS

## மேலும் நான்கு கட்டளைகள்

### 5ஆம் கட்டளை

**வலியுறுத்துகின்ற முதனிலை மெய்கள்**

பிரதம சொற்களை உறுத்து உச்சரித்தல் மூலமாய் **வேறு புதுச் சொற்களை ஆக்கிக் கொள்ளற்குச் சிறந்த உபாயமாய் அமைந்தன முதனிலை மெய்களாம்.** இவ்வுபாயத்தினானே தமிழ் வழிச்சொற்களில் பெரும் பங்கானவை உருவாக்கப்பட்டு நிற்கின்றன. உண்மையில், தமிழகராதியின் மெய் வர்க்க முதனிலைச் சொற்கள் யாவும் இவ்வாறுதான் உற்பத்தியாயின. ஆகலின் இக்கட்டளையினைத் தெள்ளுற அறிந்து கொள்ளுதல் சொற்பிறப்பாராய்ச்சிக்கு மிக வேண்டற்பாலது. லியுறுத்தும் முதனிலை மெய்க் கட்டளைக்கு உதாகரணமாய் ஏலவே யாம் எடுத்தாண்ட "உள்" எனும் தலையடியின் விகாரமாகிய "உழ" எனும் அடிச் சொல்லை வழங்குவாம். முதற்கண் அவ் "உழ" சொல், ஏலவே விளக்கப் பெற்ற நான்கு கட்டளைகளாலும் அடையும் திரிபுகளுட் சிலவற்றை ஒருங்கு சூசிப்பித்து அடியிற் காட்டுகின்றனம்:

காட்டுச் சொற்களின் அர்த் தங்களெல்லாம் ஆதி அர்த்தங்களாமென அறிக.

I. வேறுபட்ட உச்சாரண உயிராற் திரிபு

உழ = உட்படு. வருந்து

உழு = உட்செலுத்து. நிலத்தைக் கிளை

உழை = உட்படு. பிரயாசப்படு - ஆதியன.

## II. வேறுபட்ட வியஞ்சனத்தாற் திரிபு

உழ -

உலை = உட்சாய்ந்து சாய்ந்துவா, சுழல்

உற = உட்செலுத்து, கிழி

உறு = உட்பொருந்து, நிலைகொள்

உடு = உட்சாயப் பொருத்து, சூழ்

உடை = உள்விழு, உள்ளழி

உண-ர் = உட்கொள், அறி - ஆதியன

## III. மேல்வந்துறும் வியஞ்சனத்தாற் திரிபு

உழ- உழ-று = சுழல், அளை

உழு உள்-கு = உள்ளுக்கிழு, உள்ளழி

உணர் உண-ங்கு = சுருங்கு - ஆதியன.

## IV. வியஞ்சனம் இரட்டலாற் திரிபு

உழ-று உழ-ற்று

உள்-கு உளு-க்கு, ஓட்டு

உண-ர் உணர்-த்து

முற்சென்ற நான்கு கட்டளைகளானும் "உழ" எனுஞ் சொல் பிறப்பித்த வியுற்பன்னங்களுட் சிலவற்றை ஒருங்குவைத்துக் கண்டாம். இனி ஐந்தாம் கட்டளையினால் அவ் "உழ" சொல்தான், க், ச், த், ந், ப், ம், வ் எனும் மெய்களுள் ஒவ்வொன்றினைத் தலையிற் கொண்டு வலியுறுத்தப் பெற்று, மேலும் வெவ்வேறு சொல்லாகத் திரியும். எங்ஙனம்?

க் + உலை குழை (குலை)= வளை

ச் + உழ சுழ-ல்= சாய்ந்து, சாய்ந்து செல்

த் + உழை துளை= உட்செலுத்து, ஓட்டு

ந் + உழு நுழு- ந்து நுழை= உட்செல்

ப் + உழு பொள்ளு, புள்= ஓட்டையாக்கு

ம் + உழு முழு-கு மூழ்கு= உட்புகு

வ் + உலை வளை= உள்நோக்கிச் செல், சாய்ந்து வா. வகர முதனிலையின் உண்மையியல்பு மேல் விளக்கப்படும்.

இவ்வாறு முதனிலை மெய் வலியுறுத்தற் பேற்றினால் ஆதி அர்த்தத்தைச் சிறிது சிறிது விகற்பிக்கும் வன்மைகொண்டு பிறந்த வழிச் சொற்கள். முந்திய நான்கு கட்டளைகளினும் ஆணையால் வேறுபல சொற்களையும் பிறப்பிக்கும். ஈண்டுக் காட்டாகத் தலைநின்ற "குழை" எனும் வினையினின்று தோன்றும் சில சொற்களை மட்டும் தருகுதும்:-

**குழை = வளை**

**I. குழ—ல்=உட்டுளையுள்ள சுருள் வடிவம்**

குழி= உட்சூழ்ந்தெடுத்தவிடம், பள்ளம்

குழி= (வினை) உட்செல், ஊடறு

குழு= வளையமாய்த் திரண்டது, கூட்டம்

குழை= (பெயர்) சுருண்டது, சங்கு

குழ-ல் எனும் பெயர்ச்சொல்லின் ஈற்று லகரமும் மேல்வரும் சில பெயர்ச்சொற்களில் பொருந்திய ஈற்று மகரம் ழகரமாதியனவும் இச்சொற்களோடு அடுக்குற்ற வேறு ஆதித் தமிழ்ச் சொற்களின் திரிபாமென்பதை எட்டாம் கட்டளையினுட் காண்க. இனி "குழை"ச் சொல் இரண்டாங் கட்டளைக் கொப்ப வியஞ்சன மாற்றங்களால் விகற்பித்தற்கு உதாகரணங்கள் சில வருமாறு:

**குழை = வளை**

**II. குழ—ல் =உட்டுளையுள்ள சுருள் வடிவம்**

குட-ல்= இரைப்பையைச் சார்ந்த குழல் விசேடம்

குர-ல்= குழல்போலும் உறுப்பு, தொண்டை

குர-ல், குழ-ல்= சுருட்டி முடிக்கப்படுவது, கூந்தல்

குட-ம்= வளைந்து திரண்டது, மட்கல விசேடம்

குடி= மேல் வளைந்து (கவிந்து) நிற்பது. சிறு வீடு

குடை= மேல்வளைந்தது. ஆதபத்திரம்

குண-ம்= வளைந்தது. மடிப்பு, சார்பு

குந்து= (வினை) வளை, உடலை மடித்திரு

குனி= (வினை) வளை, வணங்கு

குனை= வளைந்து ஒடுங்கியது, கூர்

குல-ம்= வளையமாய்ச் சேர்ந்தது, குழு

குற-டு= வளைந்தது, இடுக்குவது

குறு, குறை= (வினை) உட்கோடச்செய், சுருக்கு

இவ்வாறு இன்னும் பலவுள. அவற்றுள் முக்கியமானவையை அநுபந்தத்துட் காண்க. இன்னணம் விரிந்த சொற்றொகுதி இதுவரை அன்று. அப்பால் மேல்வந்துறும் வியஞ்சனத்திரிபு எனும் மூன்றுவது கட்டளையை அநுசரித்துப் பலவாகப் பல்கும். காட்டாகச் சிறிது காட்டுதும்.

**குழை=வளை**

**III. குழ—லு= சுருள்**

குட-ங்கு= வளை, குறண்டு

குண-ங்கு= வளை, சோர்

குர-ங்கு= வளை, தாழ், குறை

குல-வு= வளை, குவி, உலவு (சுழல்)

குற-ண்டு= வளை, சுருள், வலிப்புக்கொள்

குற-ழ் (குற-மு)= வளை, குனி

பிறவற்றை அநுபந்தத்துட் காண்க. நான்காங் கட்டளையால் மேல்வரும் புதுப்புதுச் சொற்களையும் உய்த்துணர்தல் எளிதாகலின், ஈண்டு அவற்றை எடுத்தோதாது விடுகின்றனம்.

இதுகாறும் காட்டியவை உழ எனுஞ் சொல்லின் தலையில், வலியுறுத்தலின்கண், ககர மெய் வந்துற்றமையால் பிறந்த வழிச்சொற்கள் அன்றே? மற்று ச், த், ந், ப், ம், வ் எனும் மெய்கள் தலைப்பெய்யுமிடத்து வேறுவேறு சொற்கள் சிறிதுசிறிது அர்த்த விகற்பத்தோடு தோன்றும். இவற்றுட் சகர மெய் ககரத்தை ஒத்ததாகலின், இவை இரண்டு தலைப்பெய்த சொற்களில் அர்த்த வேறுபாடு அதிகமாகாது. சொல்லமைப்பின்கண் ஆதியிற் சகரமின்றி ககரம் மாத்திரையே முதனிலை மெய்யாகி நின்றிருத்தல் சாலும் என்பதூஉமொன்று. இதற்கு சகரம் தலைப்பெய்த

தமிழ்ச்சொற்கள் தமிழின் பாகதமாகிய கன்னடத்தில் ககர மெய்முதலாய் நிற்றல் ஒரு சான்றாகலாம். சகரமின்றிக் ககரமே ஒருகால் தமிழிற் பயின்றி ருந்ததனாற்போலும் ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் "சகரக் கிளவி" சொற்கு முதலாய் வாராது நின்றது. (தொல்காப். எழுத்.61-2) இனி தகர பகரங்கள் முதனிலையாம்போது. ககர மெய்முதல் பெற்ற சொற் களின் அர்த்தத்தைக் காட்டில் அதி வலியுறுத்தப்பெற்ற புது அர்த்தங் களைப் பெரும்பாலும் தருதலை நுண்ணுணர்வால் அறிக. குழைத்தலா னது வளைத்தலாகிய எளிதிற் பெறப்படும் தொழிலாகும். ஆயின் துளைத் தலும் பொள்ளுதலும் அதிகாடின்னியமான முயற்சியை வேண்டி நிற்றல் பிரசித்தம். வல்லின மெய் தலைப்பெய்த சொற்கள் இங்ஙனம் தம்முட் தாரதம்மியமான கடின முயற்சியைக் குறிக்குமாப்போல். மெல்லின மெய்க ளாம் நகர மகரங்களையும் மகரத்துக்கினமான வகரத்தையும் தலையிடத் துக்கொண்ட சொற்கள் மென்மையான முயற்சியை விளக்குவனவாகும். துளைத்தலோடு நுழைதலையும். வளைதலையும்; பொள்ளுதலோடு முழு குதலையும் ஒப்பிட்டு இதனைக் காண்க. துளைத்தல் பெருமுயற்சியோடு உட்செல்லல். நுழைதல். மெல்லென உட்செல்லல். வளைதலும் சிறுமுயற் சியே எனலாம். மீட்டும். நுழைத்தலும் சிறு துவாரத்துட் செலுத்துதலைக் காட்டுமன்றோ? நுண்மையும் நூலும் இச்சிறு துவார உட்பாட்டுக் கருத் தோடு சம்பந்தங் கொண்டன. தோண்டுதல். நோண்டுதல் எனும் இரண்டு வினையையும் ஒப்புநோக்குமிடத்து. இவ்வுண்மை மேலும் தெளிவாகும். தோண்டுதல்=வலிய ஆயுதத்தால் வெட்டிப் பிளந்து உள்ளிடங்காணல்; நோண்டுதல்=நகம் முதலியவற்றால் மெல்லென உள்ளிடத்தைக் கிளைத்த லாம் அன்றோ? பொள்ளுதல் முழுகுதல்கட்கும் இவ்வித ஏற்றத்தாழ்ச்சி யுண்டு. கடினமான பரப்பை வலிந்து துளையாக்குதல் பொள்ளுதலாகு மிடத்து. நீரைப்போலும் நொய்மையான பரப்பினுள் மெல்லெனப் புகுதல் முழுகுதலாகுமன்றோ. இத்தாரதம்மியம் இஞ்ஞான்று எல்லாச் சொற்களுள் ளும் புலமாகாதபோதும். ஆதிநாளில் வல்லின மெல்லின வேறுபாடானது காரணமின்றி ஏழுந்ததொன்றன்று என முடிக்கச் சில ஏதுக்கள் உள்ளன.

இவ்விடத்து வகரமெனும் இடையின மெய். பல சொற்களில், பிறி தொரு மெய்யாகவன்று உகரத்தின் வலியுறுத்த திரிபாகவே வருதலை எடுத்துக் கூறிவிடல் நன்று. உகரம் "இதழ்குவிந்தியலும்" என்பது தொல் காப்பியம் (எழுத்.87). வகரமும் அவ்வழியே பிறந்ததென்பது பிற பண்டை மொழிகளின் ஒப்புமையாற் பெறப்படும். ஆங்கிலத்தில் இன்றைக்கும்

"உவ" என்றுச்சரிக்கப்படும் W ஆகிய வகரம் உளது. இவ் W ஒலியோடு தொடங்கும் ஐரோப்பைய பாஷைச் சொற்களுட் பெரும்பங்கு எமது "உள்" அடியிற் பிறந்தனவே. பழந்தமிழோடு மிக ஒற்றுமைபூண்ட மொழியாகிய சிங்களத்தில் இஞ்ஞான்றும் வகரமெல்லாம் "உவ" எனும் உச்சரிப்பே பெறும். இங்ஙனம் தமிழிலும் உகர முதலாய் நின்ற சில அடிச்சொற்களில், வழிச்சொல்லாதற்கு வேண்டிய வலியுறுத்தலை நோக்கி முதனிலை உகரம் "வு" என்றாகி, பின் சொல்லுதற்கு எளிதாதற்பொருட்டு "வி" எனவும் "வ" எனவும் வந்ததுபோலும். உதாரணம்:

அடிச்சொல்-உள், உழு (உள்ளு)= உட்செல்

வலியுறுத்த உருவம்- விழு (வுழு)= திடீரென உட்செல்
விழு-ங்கு= உட்செலுத்திக்கொள்.

அடிச்சொல்-உலை= சுழன்று வா

வலியுறுத்த உருவம்-வளை= உட்சாய்ந்து வா

தொல்காப்பியர் காலத்தில் எச்சொல்லையாதல் வுகரமுதலாய் உச்சரித்தல் வழக்கறுந்து நின்றமைக்கு "உ ஊ ஒ ஓ என்னு நான்குயிர் வ என்னெழுத் தொடு வருதலில்லை" என்ற சூத்திரம் சான்று (எழுத் 63). ஆயினும் இழி சனர் வழக்கில் வீடு என்பதை வூடு எனச் சொல்லலையும் ஆங்காங்கு செவியுறுகின்றனம். செந்தமிழினுக்கு அது அடாதென்றே கொள்க. வு, வூ வொ, வோ எனும் நான்கும் தணந்தொதுக்குற்றமையினால் வகரம் எவ் விடத்தும் இதழ் குவிந்தியலாது "பல்லிதழியைய வகாரம் பிறக்கும்" எனும் கட்டளைக்குட்படலாயிற்று என்க. (தொல். எழுத். 98)

## 6ஆம் கட்டளை

### அடிச்சொல்லை நீட்டலும் மடக்கலும்

அப்பால், **சொல்லடிகளை நீட்டலானும் மடக்கலானும் புதுச் சொல்லினங்கள் சிறிது சிறிது வேறான பொருளைத் தெரிப் பனவாய் ஆக்கப்படும்.** இது ஆறாங்கட்டளையாம். சொற்களை ஓரோர் வகையில் வலியுறுத்து விடுதலே புதுச்சொல் ஆக்கத்தின்கண் பயிலுகின்ற பொதுச் சூழ்ச்சியன்றோ? குற்றுயிரை நெட்டுயிராய் உச்சரித் தலும் வலியுறுத்தலின் பாற்பட்டதன்றோ? ஆகலின் குற்றுயிரோடு இயன்ற ஆதி அடிகள் நெட்டுயிர் கொள்ளுங்கால், அவை உறுதிபெற்றனவாகித் தாம் முன்கொண்ட கருத்திற்கு ஒரு சிறிது வேறுபட்ட புதுக்கருத்தினைத்

தந்து நிற்கும் எனக் காண்க. இங்கு யாம் குறிக்கின்ற நீட்டல், "செய்யுள் வேண்டுழி" வருகின்றதென வியாகரண நூலோர் கூறும் நீட்டலின் வேறு என்பதுதானே போதரும். சொல்லாக்கத்தின்கண் வரும் நீட்டலிற்கு உதாகரணம்:

| **தலையடி** | **வழிச்சொல்** |
|---|---|
| அய்= நெருங்கியது | ஆய் (வினை)= சுருங்கு, நுணுகு |
| உறு= நிலைகொள் | ஊ (ன்) று= நாட்டு |
| இரி= விழு | ஈர்= இழுத்துச் செல் |
| எழு= கிளம்பு | ஏறு= மேற்படு |

| **வழியடி** | **வழிச்சொல்** |
|---|---|
| பர= விரிந்துசெல் | பார்= நோக்கு |
| கொடு(கு)= வளைந்து சுருங்கு | கோடு= வளை |
| தொடு= ஓட்டையாக்கு | தோள், தோ(ண்)டு= குழியாக்கு |
| நுள்ளு(நுழை)= கிள்ளு | நோ(ண்)டு= உட்செலுத்திக் கிளை |
| தெளி= வெளிச்சமாகு | தேர். தேறு= அறிவுதலைப்படு |
| பிரி= வெவ்வேறாக்கு | பேர்= புரட்டிவை |

இவை வினைச்சொல்லாக்கத்தின்கண் வரும் நீட்டலாம். வினைகளினின்று பெயர்களும் பல நீட்டலாற் பெறப்படும், எங்ஙனம்?

| **வினை** | **பெயர்** |
|---|---|
| இடு= கீழேவை, சமர்ப்பி | ஈடு= சமர்ப்பித்தது, பிணை |
| கடு(கு)= நெருங்கு | காடு= நெருங்கிய மரத்தொகுதி |
| மின்(னு)= ஒளிகாலு | மீன்= ஒளிர்வது, உடு |
| திரி= உருள், உலவு | தேர்= உருள்வது |

அடியை நீட்டலின்கண் குற்றுயிர் நெட்டுயிராதலோடு இகர உகரங்கள் முறையே தம்மினமாகிய எகர ஏகாரங்களும் ஒகர ஓகாரங்களுமாதலைக் குறித்துக்கொள்க. அகல். ஆல் எனவும்; பகல், பால் எனவும் வந்ததுபோல விகாரத்தால் இரட்டைகளாகி வெவ்வேறு பொருள் தரும் சில சொற்களை ஈண்டு சுட்டுதல் வேண்டப்படாது, இவற்றிற் தோன்றும் நீட்டல், எளிதில்

உச்சரித்து முடிக்கும் பொருட்டு இடைநின்ற ஒற்றை விடுத்து (இது ஒற்று நீக்கம் எனும் செய்தி) இரு குற்றுயிர்களை ஒருங்கே உச்சரிக்கும் முகத் தால் எழுந்தது. எங்ஙனம்? அ(க்)அல்= ஆல். ப(க்)அல்= பால். ஆகலின், இவ்வித விகாரம் எமது நீட்டல் கட்டளையுள் அடங்காது. அங்ஙனமா யினும், ஒருசொல்லே உச்சரிப்புப் பேதத்தால் இரு சொல்லாயினபின், அவ் இரண்டும் வெவ்வேறு பொருள் குறிக்குமாறு வைக்கப்படுதலும் இயல்பே. இவ்வாறாக, அய > அக-வு எனும் வரலாறுடைய அகல் எனும் சொல்தான் ஆல் என வந்தவிடத்து, முந்தியது ஒரு சிறிது மாற்றத்தோடு அகழ் என உச்சரித்து விசாலமாய்ப் பொறித்த கிடங்கினுக்குப் பெயராக்கப் படுவதாயிற்று. பிந்தியது விசாலமாய்ப் பரந்த மரவிசேடத்தைச் சுட்டுவ தாயிற்று. இவ் அகல் எனுஞ் சொல்லே அடியாய்ப் பிறந்த பகல் எனுஞ் சொல் பிரித்தற் பொருள் கொண்டது. அதுதான் பால் எனவும் நின்று இரட் டையாயதற்பின், அவ்விரட்டைச் சொற்களுள் முந்தியது இருட்காலத்தின் வேறாகப் பிரித்த ஒளிக்காலத்தின் பெயரும், பிந்தியது ஆண், பெண், அலியென்ற பிரிவிற்குப் பெயருமாயிற்று. பகுத்தல் பாத்தல் என வருதலும் சொற்சிதைவால் எய்திய திரிபன்றி எமது கட்டளைக்குட்பட்டதோர் மாற்ற மன்றெனவறிக. சொற்சிதைவால் எழும் இத்தகைய விகாரங்கள் பல நான் காம் அதிகாரத்தினுள் விளக்கப்படும்.

இனி அடிச்சொல்லை மடக்கல் எனும் விதியால் புதுச்சொற்கள் ஆமாறு கூறுதும். மடக்குதலின்கண் அடியின் நெட்டுயிர்கள் பின்வரும் முறைப்படி வளைத்து உச்சரிக்கப்படும்.

ஆகாரம்- அய, அவ, அக, அல, அர, அள என மடங்கும்

ஊகார ஓகாரங்கள்- உவ, உக என மடங்கும்

ஈகார ஏகாரங்கள்- இய, இவ, இக, இள, எவ என மடங்கும்

சிறுபாண்மை அடிச்சொற் குற்றுயிர்கள் மடங்கி வருதலும் கொள்க.

இக்கட்டளைக்கு உதாகரணமாய்ச் சில எடுத்தோதி அச்சொற்கள் அப்பால் அடையும் விகாரங்கட்குக் காட்டாக அவற்றுள் ஒரு சொல்லை விரித்து விளக்குதும்:

தாழ்,- தவழ், தவல், தளர்

சூளை,- (பெயர்)-சுவாலை (இது ஆரியம்)

தோய்,- துவை

நேர்,- நிகர், நிமிர், நிவ

நீள்,- நெகிழ்

ஏறு,- இவர்

நொய்,- நுகை

வெளி,- விளர், மிளிர்

தெளி,- திகழ்

அடி மடக்குறுதலால் நிகழும் அர்த்தபேதத்தை ஆராய்ந்தறிதற்குக் காட்டாக தலையிடத்து நின்ற தாழ் எனுஞ் சொல்லை ஒரு சிறிது விளக்குதும். தாழ்தல், ஆழ்தலினின்று 5ஆம் கட்டளையாற் பிறந்தது. ஆழ்தல், அகழ்தலின் மரூஉ. இனி தாழ்தலின் அர்த்தம் இறங்குதல், வீழ்தலாம். 6ஆம் கட்டளையினால் தாழ்தல், தவழ்தல் என மடங்கி வருமிடத்து படிதல், ஊர்தல், தத்துதல் எனும் பொருள் பெறப்படும். இதனானே தத்துதலைப் புறப்பாடான செய்தியாக்கொண்ட செந்து தவளை எனப்பட்டது. தவழ்வது=தவளை. தாழ்தலே தவலல் என்றாகி, இறங்குதல் விசேடமாகிய குறைதலைக் காட்டும். தவல்=குறைவு. தவ=குன்ற எனவும் வரும். அப்பால் தவலுதல்தான் தபுதலும், தப்புதலும், தவறுதலும், தவிர்தலும் என வந்தமையை நுனித்துக் காண்க. ஈற்றில் தளர்தலும் தாழ்தலாகிய இறங்குதற் பொருளை வேறொரு விதத்திற் தருதலை "மார்பிற்றளர் முலை" (கலித்தொகை 22) ஆதிய மேற்கோள்களான் அறிக. இறங்குதற் பொருளினின்றே தளர்தற் சொல்லினுக்கு, பலவீனப்படல், சேர்தல், சோம்பல், வருத்தம் ஆதிய பொருள்கள் படிமுறையாய் வந்துற்றன என ஆராய்ந்தறிக.

## 7ஆம் கட்டளை

### வேறுபடும் அடி உயிர்கள்

அடிகளை நீட்டலும் மடக்கலும் எனும் கட்டளையால் அடிகளின் வியஞ்சனங்களல்ல முன்னின்ற சுட்டுயிர்களே நீட்டவும் மடக்கவும் பெற்று விகாரமடைந்தன. இவ்விகாரம் இனந்தழுவியதொன்று; ஆகலின் முறைப்படி நிகழ்வது. எங்ஙனம்? நீட்டலில், அகரம் ஆகாரம் ஆவதூஉம்; உகரம், ஊகார ஒகர ஓகாரங்களாவதூஉம்; இகரமும் எகரமும் ஈகார ஏகாரங்களாவதூஉம் இனந்தழுவிய, முறைமையான விகாரமாம். மடக்கலில்,

அகர உகர இகர எகரங்களோடு பின்னொரு அகரஞ்சேர்ந்துழி அய உவ இய ஆதிய உருங்களும் ஒலிமாற்றப் பொது விதிகட்கொப்பவே நிகழ் வன. ஆயின் **அடியுயிர்களில் இவ்வாறு நிகழும் விதி பூர்வமான விகாரத்தையன்றி, விதி தணந்த ஒரு விகாரமும் உளது.** அதுதான் ஏழாம் கட்டளையாகும். உதாகரணம்: எல் எனும் பெயர் எழுகின்றதாகிய சூரியனையும் அதன் வெளிச்சத்தையும் காட்டுகின்ற ஓர் வழிச்சொல். இது முறைப்படி இல-கு என்றாகி "பிரகாசி" எனும் அர்த்தத்தையும், ஏல என் றாகி "வெளிச்சத்தோடு" எனும் அர்த்தத்தையும் தரும். இவை இரண்டு மாற்றங்களும் முறையே 3ஆம் 6ஆம் கட்டளைகளாற் பெறப்படுகின்ற மேல்வந்துறும் வியஞ்சனத் திரிபும் அடிச்சொல் நீட்டலுமேயாம். ஆயின் எல் எனுஞ் சொல் மேலும் சொற்பெருக்கம் நோக்கி ஒலி என, ஒளி என தன் எகரத்தினை ஒகரமாக்கி நிற்றலும், வால் என ஆகாரமாக்கி நிற்றலும் முறை தவறிய விகாரமாம். ஒலித்தல்= வெண்மையாக்கல்; ஒளி= வெளிச் சம்; வால்=வெண்மை. இவ்வெளிச்ச, வெண்மைச் சொற்களும் எல் சொல் லினின்றே "வலியுறுத்துகின்ற முதனிலை மெய்ப்பேறு" எனும் 5ஆம் கட்டளையால் பிறந்தன ஆதலின், எல், ஒலி, ஒளி, வால், வெளிச்சம், வெண்மை என்பன ஆறு சொற்களும் ஒரு சிறிது பேதப்பட்ட கருத்தை விளக்குவான் ஒரே அடிவாயிலாய் எழுந்தனவே எனக் காண்க. விளக்கு தல் என யாம் இப்போது எடுத்தாண்ட சொல்லும் வெளிச்சம் எனுஞ் சொல்லின் மரூஉவாய் நிற்பது. எல் > இலகு > இலங்கு > விளங்கு > விளக்கு என்பது அதன் வரன்முறை. அப்பால் "எல்" ஒலி, ஒளி எனவும் வந்ததன்றோ? அவ் ஒலி, ஒளி என்னும் சொற்கள் உலர் என, உணர் என, சொலி என, சுடு என, சூடு என, துல-ங்கு என, துளங்கு எனப் பலபல சொற்களாய் விரிந்து விரிந்து பரந்து பரந்து வருதலை எமது சொற் பிறப்ப கராதி வெளிப்படுங்காலையிற் கண்டு மகிழ்க. எல்லெனும் அடித்தாயின் நல்ல மகாரிற் சில்லோரை எம் "தமிழமைப்புற்ற வரலாறு" நூலிலுங் காண லாம். (பக்-88-104)

## 8ஆம் கட்டளை

## பிறிதொரு ஆதிச்சொல்லோடு கூட்டுணல்

இக்கட்டளைத் தொடர் சொற்களைச் சார்ந்ததன்று. தமிழில் இரு சொல் ஒட்டி இயலும் தொடர்கள் பலவுள. அணிந்துரை, ஆண்டகை, உண்கலம், கொடுவரி, புழைக்கை, பொதுமகள், மண்ணுணி இவைபோல் வன தொடர் சொற்களாம். வியாகாரணம் எடுத்தோதுகின்ற வேற்றுமை,

அல்வழித் தொகைகளெல்லாம் தொடர் சொற்களே. இவற்றை ஒழித்து, பெயரின் ஐ, ஆல் முதலிய உருபுகளும், வினையின் காலம் இடம் பால்களைக் காட்டும் இடைநிலை விகுதிகளும் ஒவ்வொர் சொல்லின் சிதைவே என்றது இதுகாலம் நன்றாக நிச்சயிக்கப்பட்ட உண்மையாம் (தமிழமைப்புற்ற வரலாறு பக். 47-54; 64-76 காண்க). தொடர் சொற்களை வெவ்வேறு பிரித்துக் காணல் எளிது. உருபுகள் விகுதிகளும் இலக்கண விற்பன்னர்களாற் சொற்களின் வேறாகப் பிரித்து நோக்கப்படுவன. இவையல்ல 8ஆம் கட்டளையாற் சுட்டப்படுகின்ற ஆதிச்சொற்கள். அவை, **தாம் கூட்டுண்ட சொற்களோடு மருவிச் சேர்ந்து நிற்றலால், இப் பிந்தியவையை கூட்டுறாத் தனிச்சொல்லே போலத் தோன்ற வைப்பன.** தொகையிறந்த சொற்கள், இஞ்ஞான்று தனிச்சொற்களே எனக் கொள்ளப்படுகின்றவை, இவ்வாறு இரு சொல் அடுக்குதலாற் பிறந்தனவாம். இனி, புதுச் சொல்லாக்கத்திற்கு உதவியாய்க் கூட்டுண்ட ஆதிச் சொற்களைப் பின்வருமாறு வகுத்து உதாரணமுங் காட்டுதும்:-

### அது

அது-அண்மைச் சுட்டாகும் அகரமும் தகர வியஞ்சனமுஞ் சேர்ந்து உச்சாரண உகரம் பெற்று நிற்கின்ற இச்சொல் தற்காலம் "இது" என்றதற்கு எதிராய்த் தூரத்திலுள்ளதனைக் குறிக்கின்ற சுட்டுப் பெயராய் வழங்கினும், பண்டைநாளில், சொல்லமைப்பின்கண், தூரத் தார தம்மியத்தைக் காட்டாது பொருளைப் பிரித்துணர்த்துதலையே தொழிலாகக் கொண்டியன்றது எனல் ஆராய்ச்சியால் நிச்சயிக்கப்படும். இச்சொல் ஆங்கிலத்தில் the என்றும், சர்மனியத்தில் der என்றும், அராபியத்தில் அல் என்றும் வழங்குகின்ற சுட்டுறுப்புக்களை ஒத்தது. ஆயின் ஆங்கிலமாதிய ஐரோப்பைய மொழிகளுள் the, der ஆதியன பெயர்ச் சொல்லோடு ஒட்டுண்ணாது அதன்முன் தனித்து நிற்பன. அராபியத்தில் அல் எனும் சுட்டுறுப்பு பெயரின் தலையில் ஒட்டுண்டு திரிபின்றி நிற்பது. இவற்றிற்கெதிராய், தமிழில் அது எனுஞ் சுட்டுறுப்பு சொல்லீற்றில் ஒட்டுண்டு பெரும்பாலும் திரிபுபட்டதாய் நிற்கும். அது எனுஞ் சொல்லின் திரிபுகள் அடு, அறு, அல், அம், அன், அர், அழ், அள், அண் என வரும். அப்பால் ஈற்றுமெய் கெட்டு "அ" என மலையாளம் ஆதிய பாகதங்களிலும், இவ் "அ" தான் ஐ என மெலிந்து தமிழிலும் வரும். நிலைச் சொல்லின் ஈற்றுகர இகரங்களின் முன், அது எனும் உருவத்தின் தலை அகரங் கெடுதலுமொன்று. இத் திரிபுகள் வாயிலாய்த் தமிழில் அர்த்த பேதத்தோடு கூடிய சொற்பெருக்கமும் நனி பெறப்படும். இவற்றை இனி உதாரணங்களால் விளக்குதும்:

இழு-து= இழு(படும்)அது -நெய், கொழுப்பு, குழம்பு, ஈண்டு நிலைச் சொல்லது ஈற்றுகரத்தின் முன் அது என்பதன் தலை அகரங்கெட்டது. இழு+(அ)து=இழுது. அது எனுஞ்சொல் திரிபின்றி நிற்றற்குப் பெயர்ச்சொல் எடுத்துக்காட்டுக்கள் அரியனவாம். செய்தது என்ற வாய்ப்பாட்டுக் காலங் காட்டும் தொழிற் பெயர்களில் மட்டும் அதனை விளக்கமாய்க் காணலாம். செய்த+அது எனப் பிரிக்க. செய்தது எனும் உருவம் இருந்தபடியேயிராது செய்தல் என வந்திட்டமையில் அது எனும் சொல் அல்லெனத் திரிந்தமை யையும் கண்டுகொள்க.

குற-டு= வளைந்த (வட்டித்த) அது-சிறுமலை. ஈண்டு, “அது” அடு என்றாயிற்று. குறு+அது= குறடு. குன்று எனுஞ் சொல்லும் மேல் ஒரு விகா ரமாம்.

கிண-று=கிண்டிய அது.-ஈண்டு “அது” அறு என்றாயிற்று.

குட-ல்=குழைந்த (திரண்டு உட்டுளையுள்ள) அது-ஈண்டு “அது” அல், என்றாயிற்று. “அது”வினின்று அல் என மாறிய இவ்விறுதிச் சொல் முற் கூறியாங்கு தொழிற் பெயர்களில் மிகப்பயிலும். உதாகரணம்: செய்த+அது = செய்தல். அப்பால் இவ் “அல்” ஓசை நயமும் உறுதிப்பாட்டாற் பொருள் விகற்பமும் நோக்கி கல், சல், தல், பல், மல், வல், என முதனிலை மெய் பெற்று வருதலுங்கொள்க. உதாகரணம்: நடக்-கல்= நடத்தல்; எரிச்-சல்= எரித்தல்; வரு-தல்= வரல்; திரும்-பல்= திருமல்; செய்யா-மல்=செய்யாது; இர-வல்= இரத்தல்.

ஆழ-ம்= அகன்ற அது-ஈண்டு “அது” அம் என்றாயிற்று.

கட-ன்= கட்டுவதாகிய அது.-ஈண்டு “அது” அன் என்றாயிற்று இதற் குத்தலையடி “அடு.” அடுத்தல்= நெருங்க வைத்தல். கட்டுதல் - இறுகப் பிணைத்தல்.

சுட-ர்= சுடுகின்ற அது-ஈண்டு “அது” அர் என்றாயிற்று. “சுடர்” சொல்லின் வரன்முறை எல் > ஒலி > சொலி > சுடு > சுடர் என்பது.

உற-ழ்= உறுகின்ற அது, இடையீடு.-ஈண்டு “அது” அழ் என ஆயிற்று. உள்ளாய் நிற்றல் உறுதலாம். உளு என வரல் வேண்டியவிடத்து உறு உன்றாயிற்று. ஊன்று என்பதூஉம் இதன் வலியுறுத்த வேறோர் உருவம்.

பாந்-தள்= பாய்கின்ற அது, பாம்பு.-ஈண்டு "அது" அள் என ஆயிற்று. இது அய= அண்மையிலுள்ளது > அய-க்கு > பர > பாய் > பாய்த்து என வரும். பாம்பு எனும் உருவமும் இவ்வடியிற் பிறந்தது.

இடுக்-கண்=இடுக்குகின்ற அது.-ஈண்டு "அது" அண் என்றாயிற்று.

அது எனுஞ் சொல் கடைக்குறையால் அ என நின்று ஐ என மெலிந் ததற்கு உதாகரணம்: இலை=கீழே தூங்கும் அது. இச்சொல் மலையாளத் தில் இல என நிற்கும். இழி > இழ= கீழ்நோக்கு. செய்தது (செய்தல்) எனும் வாய்ப்பாட்டுத் தொழிற் பெயர்கள் பல அது அல் என்பனவற்றை அ (ஐ) என மாற்றுதலோடு, காலங்காட்டும் இடைநிலையையும் திரித்து வேற்றுரு வும் பொருளும் கொள்ளும். உதாகரணம்: செய்கை. ஈண்டு (செய்தது) செய்தல் எனும் ஆதி உருவம் செய்தை என்று வராது செய்கை என்றா யிற்று. செய்தையாக வேண்டியவிடத்து செய்தி என வருதல் மேல்வரும் "இல்" சொல்லின் திரிபெனப் பின்னர்க் காண்க. ஐ எனும் சிதை சொல் கை என வந்தவாறுபோல் சை, தை, பை, மை, வை என வருதலுங்கொள்க. உதாகரணம்: வரி-சை=வரும் அது, வரல்; குடந்தை=குழையும் அது, வளைவு; இடும்-பை=இடுக்கம் அது, இடுக்கல், இடுக்கண்; பொறு-மை= பொறுக்கும் அது, பொறுத்தல்; நட-வை=நடக்கும் அது, நடத்தல். இவ்வுரு வங்களின் அர்த்த பேதங்களைக் குறித்துக்கொள்க. யாமும் ஒருசில காட் டாகக் காட்டுதும்:

இழு-து- நெய்

இழு-வல்- காலதாமசம்

இழு-வை- இழுக்கும் வடம்

இழு-மை- இனிமை-"தொண்டைக்குள் நிற்றல்"

"நீடுதோன்றினியர்" (நற்றிணை 1) என்ற மேற்கோளில் இனியர் என்றதற்கு "நீடுதோன்று" என அடை கொடுத்திருத்தல் காண்க.

குட-ல்- இரைப்பையைச் சார்ந்த குழல்

குட-ம்- கலயம்

குடை- கவிகை

ஆழ-ம்- அகலம், தாழ்வு

ஆழ-ல்- அகழும்செந்து, கறையான்

கட-ன்- இறுக்கவேண்டியது

கட-ம்- கயிறு

கட-மை- செயற்பாலது

கட-வை-ஏணி

பிறவற்றையும் ஆராய்ந்து காண்க. இச்சொற்பகுதிகள்தாம் மேல் வரும் உள், இல் எனும் சுட்டுறுப்புக்களின் கூட்டுறவால் பின்னும் வேறுபட்ட கருத்தோடு வேற்றுருவம் அடைதலையும் சிங்கநோக்காய்க் கவனிக்குக.

**உள்**

மறைந்ததை (சேய்மையை)க் காட்டுவதாகின்ற உகரச் சுட்டோடு ளகர வியஞ்சனஞ் சேர்ந்து ஆன உள் எனுஞ் சொல், நிலைச் சொல்லினுக்குத் துணையாய் வருங்கால், "பொருந்துவது" "உடைமையாக்கொண்டது" "தன்னகத்தே வைத்திருப்பது" எனும் அர்த்தத்தைத் தெரிக்கும். இவ் உள் சொல்லும் உல், ஊழ், உறு (இறு) எனப் பரிணமித்தலோடு, கடைக்குறைந்து பெரும்பாலும் "உ" எனவும் நிற்கும். அப்பால் "உள்"ளின் கடைக்குறைந்த "உ" எனும் உருவம், பொருள் வேறுபாட்டைத் தருகின்ற உறுதிப்பாட்டின் பொருட்டு, முதனிலை மெய் பெற்று கு, சு, டு, து, பு, று எனவும் வரும். இவையிற்றிற்கு உதாகரணம்:-

இய - வுள் = இயக்குதலைப் பொருந்தியது, தலைவன், இறைவன் - தலையடி இழி = இறங்கு. இது இய - ங்கு = செல், இய - க்கு = செலுத்து, தலைமை பெறு என வரும்.

அல் - குல் = சாய்தலை உடையது, இடுப்பு. - ஈண்டு "உள்" உல் என்றாயிற்று. தலையடி: அஃகு = அண்மையை நாடு, படிப்படியாய்க் குறை, சாய்.

என் - றூழ் = வெப்பத்தை அகத்தே கொண்டது, பொருந்தியது, பகலோன், கோடைக்காலம். - ஈண்டு "உள்" ஊழ் என்றாயிற்று. தலைச்சொல் எல் = எழுவது, சூரியன், அதன் வெப்பம். "எல்" கடைக்குறையான "உள்" எனுந் துணைச்சொல் பெற்று எல்லு என நின்று, ஒலிச்சிறப்பு நோக்கி என்று எனவாயிற்று. எந்தமிழில் லகர ளகரங்கள் றகரமாகின்றமையும், னகர ஒற்றை முன்பெறுகின்றமையும் பெருவழக்கு. "கால்" (ஊதை) காற்று எனவும்; "நால்" (கயிறு) நான்று எனவும்; நாள் ஞான்று எனவும் வருதல் காண்க.

ஞா - யிறு = நாளைக் காட்டுதலைப் பொருந்தியது, சூரியன். - ஈண்டு "உள்" உறு என்றாகி, நாவுக்கெளிதாதற் பொருட்டு இறு என மெலிந்தது. தலையடி: அகல் = அண்மையின் நீங்கு, நீண்டிரு. வழியடி. நாள் = நீண்டது. "ஒருநீட்டு" அன்றேல் ஒரு காலப்பகுப்பு. நாள் உறு = ஞாயிறு என்றாயிற்று. கால - ம். நான்று. ஞால - ம் எனுஞ் சொற்களும் அகல் எனும் தலையடியி னின்று 5ஆம் கட்டளையாற் பிறந்து நீளத்தை, விசாலத்தையே காட்டு வன. காலம் = (கால் - அது) நீட்சியைப் புறப்பாடாகக் கொண்டது, நேரம். நான்று, (நால்) நீட்டைப் புறப்பாடாகக் கொண்டது, கயிறு. நாண், ஞாண் என்பன "நால்" சொல்லின் வேற்றுருவங்கள். ஞாலம் = (நால் - அது) அகன்ற தாகிய பூமி. நகரம் ஞகரமாதல் தமிழ் வழக்கு. காலம் என நின்று நீண்ட நேரப்பகுதியைக் குறிக்கின்றகால் எனுஞ் சொல் தானே, நடத்தலுறுப்பாகிய நீண்ட அவயவத்துக்கும் பெயராதலை நோக்குக. இவ்வாறு அடிச்சொல் லும் வழிச்சொற்களும் சார்புச்சொற்களும் பொருந்தியதாய் நிற்கின்ற "காலம்" எனுஞ் சொல் ஆதித்தமிழ்ச் சொல்லேயன்றி ஆரியச் சொல்லன் றெனக் கொள்க. வெளிவரப் போகின்ற எமது சொற்பிறப்பகராதியைப் படிப்போர், இதனைப்போலும் பன்னூற்றுச் சொற்கள் தமிழினுக்கும் ஆரி யத்தினுக்கும் பொதுவாய் நிலைபெறுதலைக் கண்டு மகிழ்வர்.

"உள்" கடைக்குறைந்து "உ" என நிற்புழி, பல நிலைச் சொற்கட்குத் துணையாவது. உதாகரணம் அடை-வு = சமீபத்தலைப் பொருந்தியது முறை. தலையடி: அடை=அண்மைகொள். ஈண்டு கடைக்குறைந்த உள் எனுந் துணையோடு இயன்ற இச்சொல், அடைதல் அடையல், அடைகை என "அது" எனுந் துணையின் பேதங்களோடு இயலுங்கால், கொள்ளும் அர்த்த விகற்பத்தை நுனித்துக் காண்க. அடை-வு எனுஞ் சொல்லில் "உ" எனுஞ் சிதைசொல் தனித்து நின்றது; வகரம் உடம்படுமெய், இனி, முத னிலை மெய்கள்பெற்று வரும் "உ" எனுந்துணைச் சொல்லினுக்கு உதாகர ணம் வருமாறு:-

கடு - கு = காரத்தைப் பொருந்தியது. - தலையடி: அடு

கொலு-சு = வளைதலைப் பொருந்தியது. - தலையடி : உழல்

கவ-டு = பிரிதலைக் கொண்டது, கொப்பு. - வழிபடி; கவி, அகவு = நெருங்கிச் செல்லத் தேடு, பிரி.

கொழு-ந்து = இளமையைப் பொருந்தியது. இலை, - வழியடி: குழ= குறுகியது. இளமையானது.

குறு-ம்பு = வளைந்த மதிலுள்ளது. அரண். வலிமை. - வழியடி: குறு

கொடி-று = வளைந்து இடுக்குவது, குறடு.-வழியடி: குட.

## இல்

கீழுறுதலைக் குறிக்கின்ற இகரச் சுட்டோடு லகர வியஞ்சனஞ் சேர்ந்து இயல்கின்ற இல் எனுஞ் சொல், நிலைச் சொல்லினுக்குத் துணை யாய் வருங்கால், "இருப்பது" "இருக்கும் இடம்" எனும் பொருளைத் தரும். இவ் "இல்" இழ் என இர் என வருதலோடு. கடைக்குறைந்து "இ" எனவும் நிற்கும். முந்திய "உ" எனுஞ் சிதை சொல்லே போல இதுவும் ககர மாதிய முதனிலைமெய் பெற்று வருதலுங் கொள்க. உதாகரணம்.

வெ-யில்=வெம்மையாயிருப்பது.-தலையடி: எல், வெள் > வேதல் > வெம் > வெயில் என வரும்.

உவ-ரி=உவர் (உப்பு) இருக்குமிடம், கடல்.-தலையடி:உவ=உயர், பொருமு.

கொளு-க்கி= வளைவாயிருப்பது. கொக்கை.

கொடி-ச்சி= வளைவாயிருப்பது. தேருறுப்பு.

இவை இரண்டு நிலைச்சொல்லும் குழ (தலையடி:உழல்) எனும் அடியாய்ப் பிறந்து. பொருள் விகற்பம் நோக்கி "இல்" சொல்லின் வெவ்வேறு உரு வத்தைத் துணையாய்ப் பெற்றன.

செய்-தி= செய்யப் பெற்றதாயிருப்பது. தலையடி: எய்.

குடு-ம்பி= திரட்சியாயிருப்பது, மயிர்முடிச்சு. வழியடி: குட

## வேறு சில இறுதி நிலைகள்

இவையிற்றையன்றி வேறு சொற்களும் பெரும்பான்மை சிதைந்தும், சிறுபான்மை சிதையாதும் பிற்காலத் தமிழ்ச் சொற்கட்கு இறுதி நிலையா வன. அவற்றுள் முக்கியமானவையை ஈண்டுக் குறிப்பிடுகின்றனம்.

| கடைநிலை | ஆதியுருவம் | உதாகரணம் |
|---|---|---|
| அனை | அண்ணு(தல்) | சிறுப்பனை |
| அனம் | " | செவ்வனம் |
| அணம் | " | தூங்கணம் |
| அனவு | " | திண்ணனவு |

| | | |
|---|---|---|
| எனவு | ” | சிக்கெனவு |
| அக்கம் | ஆக்கம் | திண்ணக்கம் |
| அகம் | அகம் | உருவகம் |
| அளம் | அள் (அடு) | சீதளம் |
| அலம் | ” | மண்டலம் |
| அரவு | உரவு (உறு) | கூட்டரவு |
| ஆங்கு | ஆகு(தல்) | பொல்லாங்கு |
| ஆப்பு | ” | பொல்லாப்பு |
| ஆம்பு | ” | சுண்ணாம்பு |
| ஆம்பரம் | ஆம்பு+அரவு | துலாம்பரம். |
| அம்பரம் | ” | விளம்பரம் |
| ஆடு | அடு(த்தல்) | சிறுவாடு |
| ஆரம் | அரவு (உறுதல்) | ஒய்யாரம் |
| அரி | ” | திடாரி |
| அரம் | ” | துணிகரம் |
| இயல் | இய(லுதல்) | அவ்வியம், ஊழியம் |
| இகை | ” | சண்டிகை |
| இதம் | ” | தப்பிதம் |
| இதி | ” | வாரிதி |
| உணி | உண்ணி | தூக்குணி |
| உரவு | உறு(தல்) | துப்புரவு |
| ஏனம் | என்பது? | அஃகேனம் |
| கண் | கண்(அண்டு) | இடுக்கண் |
| கம் | கல்(அல்) | சேதகம் |
| கை | ” | திகிரிகை |
| காடு | படு(தல்) | சாக்காடு |
| தலை | தலை | சேர்ந்தலை |
| மானம் | ஆனது | சேர்மானம் |
| வானம் | ” | சில்வானம் |

இவற்றுட் சில ஆரியத்துக்கும் தமிழுக்கும்பொதுவென உணர்க.

## நாலாம் அதிகாரம்

# DIALECTAL CORRUPTION

### சொற்சிதைவு

இதுகாறும் தமிழ்மொழியின் ஆதிச் சொல்லுறுப்புக்களாகும் தலையடிகளும், அவற்றினின்றும் பிறக்கும் வழியடிகளும், அப்பால், இருதிறத்தனவற்றினின்றும் எழும் வியுற்பன்னங்களும் முறைப்படி ஆக்கப்பெற்று இங்ஙனே சொற்தொகை விரிந்து பல்கும் ஆற்றினை விளக்கினாம். இனி, ஒருகால் முறைப்படி ஆக்குண்டு நிலைபெற்ற சொற்களானவை, காலச் செலவில், சொல்வோரின் இயற்கையான சோம்புத்தனத்தினால், நாப்பயிற்சிக் குறைபாட்டினால், சிதைவுற்று வேற்றுருவங்கொண்டு பெரும்பாலும் வேறுபட்ட பொருளையுங் குறிப்பனவாய் வந்துற்ற பான்மையை எடுத்தோதுவாம். இச்சிதைவு ஒலித்திரிபாலும் உருத்திரிபாலும் நிகழும். அவற்றுள் முந்திய ஒலித்திரிபு மேல்வருவது.

### உயிர்மாற்றும் மெய்ம்மாற்றும்

சொற்சிதைவு இயற்கையைச் சார்ந்து நிகழுவதொரு செய்தியாகலின், உயிர்மாற்றின் கண்ணும் மெய் மாற்றின் கண்ணும், அவ்வுயிரும் மெய்யும் பிறந்த முறையானே ஒலித்திரிபாற் சிதைவும் நிகழும். இனி அ, இ, உ எனும் மூன்றுமே ஆதி உயிர்களாம். அகரம் அங்காப்பு மாத்திரையாற் பிறக்கின்ற பேச்சொலி, இகரம் அங்காப்பிழிதலினாலும், உகரம் இதழ் குவிதலினாலும் வருவன. அப்பால் இவ் ஆதி உயிர்கள் மூன்றும் ஏனைய உயிர்களினுக்குப் பிறப்பிடமாகும். எங்ஙனம்? ஆ, ஈ, ஊ என்பன இவற்றின் நீட்டித்த ஒலிகளாம். எ, ஒ என்பன முறையே அ + இ, அ + உ எனும் சேர்க்கையாற் பிறப்பன. இவை தாம் ஆ + இ, ஆ + உ என வருமிடத்து, ஐ, ஔ எனச் சந்தியக்கரங்களாகும். மற்று ஊ, ஓ என்பன உகர ஒகரங்களின் நெடில்களாமென்பது சொல்லாமலே அமையும். இவ்வாறாகலின், அகர ஆகாரவொலி தலையிற் கொண்ட சொற்கள், எகர ஏகார ஒலிபெற்றுச் சிதைவுறும், எதிர் நிரலாய், பின்னவை முன்னவையாதலுங் கொள்க.

உதாரணம்:

| | |
|---|---|
| கல்லல் | கெல்லல் |
| சாம்பல் | செம்பல் (வாடியபூ) |
| ஏவன். எவன் | யாவன் |
| செருக்கு | தருக்கு |
| கேளல் | களிது |

அப்பால். அகர ஆகாரச் சொற்கள் இனந்தழுவி ஒகர ஓகாரச் சொற்களாதலும். எதிர் நிரலாய். பின்னவை முன்னவையாதலுங் கொள்க. உதாரணம்:

| | |
|---|---|
| கறித்தல் | கொறித்தல் |
| ஆம் | ஓம் |
| கவாலம் | கபோலம் (ஆரியம்) |
| கோடகம் | கேடகம் |
| குவி | கவி |
| குழறு | கழறு |
| கூம்பல் | சாம்பல் (வாடிய பூ) |

இகரம் எகரமாதலும் உகரம் ஒகரமாதலும் சொல்லாக்கத்தின்கண் பயிலும் பிறழா முறையாகலின், அதனைச் சிதைவின்பால் எடுத்தோதல் வேண்டப்படாது. ஆயின் இதழ் குவிந்தியலும் உகரம் சொல்லற்குக் கடினமாதல் காரணமாய், அதனை அங்காப்பு இழிதலாற் பிறந்த அதற்கும் அகரத்துக்கும் இடைநின்ற இகரமாய் மாற்றியமை சிதைவே என்க. சிறுபான்மை இகரச் சொற்கள், பொருள் வேறுபாட்டை நோக்கி, உகரச் சொற்களாய் மாறியமையுங் கொள்க. உதாரணம்:

| | |
|---|---|
| புழை (ஓட்டை) | பிழை |
| புலம் | பிலம் |
| குழுமு | கெழுமு |
| குறும்பு | இறும்பு (சிறுமலை) |
| பிணை | புணை (பிணைத்தது) |

அய்யன் - ஐயன், கசப்பு - கைப்பு என்பனவற்றிற்போல அகர ஆகா ரங்கள் ஐகாரமாதலும், சீயெனல் - சையெனல் என்பதிற்போல இகர ஈகா ரங்கள் ஐகாரமாதலும், மீட்டும் அவ்வை - ஔவை; பவ்வம் - பௌவம் என அகரம் ஔகாரமாதலும் எடுத்தோதல் வேண்டா மாற்றங்களாம். ஈற்று ஐகாரம் ஆய் என வருதலும் ஒன்று உதாகரணம்:

| | |
|---|---|
| குழை | குழாய் |
| கழை | கழாய் |
| உரை-தல் | உராய்-தல் |

இனி, மெய்கள் இனம்பற்றி ஒன்று மற்றொன்றாய்ச் சிதைதலை நோக் குதும். ககரத்தினின்று சகரம் பிறத்தலின், அது இதுவாகும். தமிழ்க் குலத் தைச் சார்ந்த பிராகூயி மொழியில் ககரம் தகரமாவதுபோல சிறுபான்மைத் தமிழிலும் நிகழும். இம்மாற்றம் சகரத்தினூடு பெறப்படுவதுபோலும்.

| | |
|---|---|
| கவரி | சவரி |
| தூங்கல் | துஞ்சல் |
| தங்கல் | தஞ்சம் |
| விளக்கம் | வெளிச்சம் |
| கிவி (கன்னடம்) | செவி |
| கேடகம் (வட்டமானது) | சேமம் |
| கொப்பூழ் | தொப்புள் |
| குமுலம் | துமுலம் (ஆரியம்) |

கேடகச் சொல்லின் ஆதியுருவம் கோடகம் ஆதல் வேண்டும், என ஆராய்ந்து உணர்ந்துகொள்க. கோடகம் வளைந்தது, வட்டுறுப்பானது. வழியடி: குட. இனி கோடகம் கேடகமென்றாயதற்பின், அதுதான் கடகம், கரகம், சிகரம், கோரம், சகடம், சகடு, சட்டி, சாகாடு, சாகை எனப் பலவா றாக மாறிய விநோதத்தை உய்த்துணர்க. "கரகமுங் கோரமும் வள்ளமும் சகடமும், சிகரமுஞ் சாகையும் வட்டிற் பெயரே" என்பது பிங்கலந்தை. கட கம் ஆதியன குட எனும் அடியாய்ப் பிறந்தமைபோல, வள்ளமும் வட்டி லும் வளை (உள்) எனும் அடியாய் வரும் எனக் காண்க. இம்மாற்றங்கள் ஈண்டு முன்னும் பின்னும் வரும் விதிகட்கு ஏற்ற காட்டுக்களாகின்றன.

கடகம் சகடமாயினமை மேல்வரும் "நிலை மாற்று" எனுஞ் சிதைவுக்கும் உதாரணமாகும்.

அப்பால் சகரத்தினின்று யகரமும். அதன்மேல் யகரத்தினின்று ஞகர நகரங்களும் முறையே பிறத்தலின். சகர யகர ஞகர நகரங்கள் தம்முட் பிறழ்ந்து நிற்கும். உதாரணம்:

| | |
|---|---|
| நேயம் | நேசம் |
| வாயில் | வாசல் |
| உயா | உசா |
| யான் | நான். ஞான் (மலையாளம்) |
| உராய்தல் | உராஞ்சல் |
| நனவு | ஞானம் (ஆரியம்) |
| நண்டு | ஞெண்டு |
| நாலம் | ஞாலம் |

சகரமும் தகரமும் ஒத்த பிறப்புடையனவாகலின் இவை தம்முள் மாறுபடும். வடசொற்களைத் தமிழிற் தற்பவம் ஆக்குங்கால் ஸகரம் தகரமாதல் பெருவழக்கு. உதாரணம்:

| | |
|---|---|
| முசலி | முதலை |
| தேறல் | சேறு(கள்ளு) |
| கொசுகு | கொதுகு |
| பெரிது | பெரிசு |
| ஐந்து | அஞ்சு |
| ரஸம் | இரதம் |

ககரம் வகரமும் பகரமுமாதல் ஒத்த பிறப்புடைமையினாலன்று. பிறிதோர்வகை இனம்பற்றியாம். தமிழ் முதனிலைப் பகரச் சொற்கள். கன்னடத்தில் பெரும்பான்மை ஹகரம் கொண்டியலும். உதாரணம்:

| | |
|---|---|
| பாகல் | பாவல் (வழக்கு) |
| நோக | நோவ |

| | |
|---|---|
| செய்வேன் | செய்கேன் |
| அஃகு | அம்பு |
| இருக்க | இருப்ப |
| பத்து | ஹத்து (கன்னடம்) |
| பாம்பு | காம்பு (மூங்கில்) |
| சிலம்பு | (சுலம்பு)சலங்கை |

பகரம் மகர வகரங்களாகவும், வகரம் மகரமாகவும் சிதைவுறும். உதாகரணம்:

| | |
|---|---|
| என்பர் | என்ம-னார் |
| உண்பான் | உண்மான் |
| பகுப்பு | வகுப்பு, வகை |
| வண்டி | பண்டி |
| வானம் | மானம் (செம்மானம்) |
| சிறுவி | சிறுமி |

மகரம் னகரமாகவும், நகரம் மகரமாகவும் மாறுதலுமொன்று உதா கரணம்:

| | |
|---|---|
| மரம் | மரன் |
| குளம் | கொலனு (தெலுங்கு) |
| நீர் | மீரு (தெலுங்கு) |

லகர ரகரங்களும், லகர, ழகர, நகர, டகரங்களும் பிறழ்ந்து வரும். ழகரம் யகரமாதலும் ஞகரமாதலுங் கொள்க. உதாகரணம்:-

| | |
|---|---|
| குடல் | குடர் |
| நாலி | நாரி (தென்னை) |
| நர்டி | நாழி |
| தெரி | தெளி, தெலியு (தெலுங்கு) |
| மஞ்சல் | மஞ்சள் |
| புழை | பொளி, புரை |

| | |
|---|---|
| வெளிறல் | விடிதல் |
| புழலை | புடலை |
| குழி (வினை) | குயில் |
| உழற்று | உஞற்று. உடற்று |

அவ்வாறே தகர. டகர ளகரங்களும், லகர ழகர, ளகர றகர ணகரங்களும் தம்முள் மாறுபட்டு வரும். உதாகரணம்:-

| | |
|---|---|
| புகுத்தல் | புகட்டல் |
| குறத்தி | கொடிச்சி. |
| கடுப்பு | கறுப்பு |
| அடித்தல் | அறைதல் |
| மலி | வளம் |
| நல் | நறு. நனி |
| முழுகு | முணிகு (கன்னடம்) |
| நள்ளல் | நண்ணல் |
| வள்ளம் | வட்டில் |
| அணில் | அளில் (கன்னடம்) |
| திட்டை | திண்ணை |
| திடம் | திறல் |
| பிணை (பிணவு) | பிடி |
| மணம் | மன்றல் |
| கோடு | குன்று |
| நினக்கு | நிணக்கு (மலையாளம்) |
| அவ் அன்ன | அன்னணம் |
| பெண்டு | பெட்டை, பேடு |

பாகதங்களில் றகரம் ஜகரமும் ந்தகரமும் ஆதலுங் கொள்க. உதாகரணம்:-

| | |
|---|---|
| மூறு (மூன்று) | மூஜி (துளுவம்) |
| நூறு | நூந்து (துளுவம்) |

## மெல்லொற்றும் உடம்படுமெய்யும்

சொல்லாக்கத்தில், முறைபடி மெல்லொற்றுப் பொருந்துதலை ஒழித்து. சிதைவால் பொருந்துதலுமுண்டு. எங்ஙனம்? பகல் எனுஞ்சொல் பக்கம் பாகம் என வருதலோடு பங்கு எனவும் சொல் வேறுபாட்டின் பொருட்டு வரும் அன்றே. இது சொல்லாக்கத்தின் பாற்பட்டது. சொற்சிதைவால் மெல் லொற்றுப் பெற்று வருவனவும் உள அவற்றிற்கு உதாரணம்:

| | |
|---|---|
| அருகு | மருங்கு |
| அல்கு, ஒல்கு | அஞ்சு. ஒஞ்சி |
| காய்கை | காங்கை |
| கொய்(குவி) | கொஞ்சு |

இனி ஒரு சொல்லில் ஈருயிர்கள் பொருந்துமிடத்து "அரையுயிர்க" ளான யவ்வும் வவ்வும் வருதலே பொதுக்கட்டளை. இவைதாம் உடம்படுமெய் எனப்படும். ஆயின் ஒலித்திரிபால் இவையிற்றினிடமாய் னவ்வும். ஞவ் வும் ரவ்வும் வரலுறும். உதாரணம்:-

| | |
|---|---|
| இருக்கின்றஅ(வ)ன் | இருக்கின்றனன் |
| என்மார்(என்பார்) | என்மனார் |
| இளைய(வ)ன் | இளைஞன் |
| காவும் | காரும் |

## உருத்திரிபாற் சொற்சிதைவு

காலகதியில் சிதைந்து வேறுபட்ட சொற்களானவை ஒலித்திரிபா லன்றி உருத்திரிபாலும் சிதைவை எய்தின. ஒலித்திரிபு ஒரோர் எழுத்து மற் றொன்றாகப் பரிணமித்தமையாம். உருத்திரிபு ஒவ்வொரு சொல்லே: (1) கடை நிலைக்கேடு, (2) இடைநிலைக்கேடு (3) முதனிலைக்கேடு, (4) இருதலைச் சுருக்கம், (5) தலையொற்று நீக்கம். (6) நிலைமாற்றம், (7) ஒப்புமைச் சொல் லாக்கம் எனும் எழுவகையானும் பெற்றுள்ள மாற்றமாம். ஈண்டு இவ் எழு வகைத் திரிபையும் எடுத்து விளக்குதும்.

## 1. கடைநிலைக் கேடு

தமிழிற் பல சொற்கள், இலக்கியங்களில் ஏறுமுன்னரே சிதைவுற்றன. ஈரசை மூவசையாய்ப் பண்டைநாள் இயன்றன, ஈற்றுப்பகுதியை இழந்து, இன்று ஓரசைச் சொற்களாய் நிற்கின்றன. ஒரு சில உதாரணங்கள்

அவற்றின் படிப்படியான திரிபோடு மேல்வருவன:

| | | |
|---|---|---|
| உவ-கை | ஓகை | ஓ |
| பொத்-தி | போது | பூ |
| கவ-வு | காவல் | கா (காவல் செய்) |
| இழி | இடு | ஈ (கொடு) |

இவற்றுள் கடைச்சொல்லின் வரலாறு வெளிப்படை. முற்பட்ட மூன்று சொல்லும் விரிந்து சிதைந்து வந்தவாறு யாதெனில்: (1) உய், உய-ர், என் பன முந்திய சொல்லினுக்குத் தலையடியாம். உய்-தல் சேய்மை (மறை விடம்) யினின்றும் வெளிப்படுகை. உயர்-தல் = பொரு முதல், மேற்படல். உவ-ப்பும், உவ-கையும், படிமுறையாய், உயர்தலை (பொருமுதலை) மனம் நிறைதலை, உள்ளப்பூரிப்பைக் காட்டும். "உவர்"ச் சொல்லும் அது. இவ் உவ கையே, மேல் விளக்கப்படும் இடைநிலைக் குறையால், ஓகை என்றாகிப் பின் "கை" என்னும் கடைநிலையையுமிழந்து ஓ என்றாயிற்று. (2) பொத்தி எனும் சொல் பொள் எனும் வழியாய் (தலையடி; உள்) புதை, போர் என வந்து, மூடியிருப்பது எனுங் கருத்தில் விரியாத மலரைக் குறிக்கும். பொத் தியே போது எனத் தலை நீண்டு வேற்றுருவந் தாங்கியது. போ-திகை எனும் ஆரியச் சொல்லுங் காண்க. "போது" பூ வென்றாயிற்று. பூவினை விளக்கும் "போது" வேறு; பொழுது (தலையடி: ஒள < எல்) என்னுஞ் சொல்லின் சிதைவாகிய "போது" (நேரம்) வேறு. போது எனும் உருவத் தினுக்கு இரு தோற்றுவாய் உண்மையை அறியாதோர், சில பண்டிதர்கள், பூக்கள் மலருதல் ஒவ்வொரு நேரத்திலாதலின் போது எனும் பூப்பெயர் தான் நேரத்திற்காயிற்று என மயங்குவர். அற்றன்று. நேரத்தைக் காட்டு கின்ற "போது" பொழுதினின்றும், மலரைக் காட்டுகின்ற "போது" பொத்தி யினின்றும், சிதைந்து வருமென உணர்க. (3) கவவுதல் கவிதலினின்று பிறப்பது. "கவிதல்" குவிதலின்மரூஉ. குவிதல் <கூம்பு < கொடு-கு < குட < குழ < உழ-ல் < உள் என வரும். "கவிதல்" யாதொன்றை நோக்கிச் சாய்தல் எனும் பொருள் உள்ளது. கவவுதலும் முதற்கண் அப்பொருளே கொண்டது. இதனின்று கிளைத்தெழும் கவர், கவலை, கவனம் எனும் உருவங்கள் விருப்பை, யாதொன்றின் மேற்செல்லும் சிறந்த விழைவைக் குறிக்கும். கவர், கவைச் சொற்களினுக்கு பிரித்தற்பொருள் வந்துற்றமை யும் இவ்வாயிலாகவேயாம். இனிச் சிறந்த விழைவையும் அதனால் யாதொன்றைக் கைவிடாது பற்றிக் கொள்ளும் சார்பையும் விளக்குகின்ற

தாய்க் கவவுச் சொல்லினின்று தலை நீண்டு பிறந்தது. காவல் எனுஞ் சொல். காவல்=கைவிடாது பற்றுதல், தன்னடைக்கலத்தில் வைத்துக் கோடல். அதுதான் கடைக் குறைந்து கா, காத்தல் என வந்திட்டது என்க. இவற்றை அநுபந்தத்திற் பரக்கக்காண்க.

## 2. இடைநிலைக் கேடு

மூவசை நாலசைச் சொற்களை உச்சரிப்பதைக் காட்டில் ஓரசை ஈரசைச் சொற்களை விளம்புதல் சுலபம் அன்றோ. இயல்பாகச் சொல்லைச் சுருக்கும் சார்புள்ளோராகிய மக்கள் பல்லசைச் சொற்களைச் சுருக்கி உரைக்கவே தலைப்படுவர். இதனானே கடைநிலைக்கேடுபோல் இடைநிலைக்கேடும் நிகழ்வதாயிற்று. இதன்கண், ஒழித்த இடைநிலையினிடமாய் அடியுயிர் நீட்டப்படுதலை நோக்குக. உதாரணம்:-

| | |
|---|---|
| பொழுது | போது |
| சிவப்பு | சேப்பு, செம்பு, சம்பு |
| பகல் | பால் |
| உணர் | ஓர் |

## 3. முதனிலைக் கேடு

செய்யுட் தமிழில் தாமரையை மரை என்றதுபோல சில சொற்கள் தலைக்குறைந்து நிற்றல் உண்மையாயினும், உரைநடையில் முதனிலை கெட்டு நிற்பன காண்டல் அரிது. இவ்வரிய உதாரணங்களுள் ஒன்று, தெரியாமை எனுஞ் சொல் தலைக்குறைந்து எய்யாமை என நிற்றல் என்ப. "எய்யாமையே அறியாமையே" எனுந் தொல்காப்பியச் சூத்திரத்தினுக்கு உரை கூறுமிடத்துச் சேனாவரையர்: "அறிதற் பொருட்டாய் எய்தல் என்றாயினும் எய்த்தல் என்றாயினும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின் எய்யாமையென்பது எதிர்மறையன்மை அறிக" என்பர். இதனை மறைச்சொல் என்பர் நச்சினார்க்கினியர் (< மொழி நூல் பக். 142-3 காண்க). தெரிதல் எனுஞ் சொல்லே எய்யாமைக்கு உடன்பாட்டுச் சொல்லன்றி, மற்றன்று. 'தெரிதல்' தெளிதலின்மரூஉ. தெளிதல் "எல்" எனும் தலையடியினின்று முதனிலைமெய் பெற்றுப் (5ஆம் கட்.) பிறந்தது. எல்> எழி-ல்> தெளி என வரும். தெளிதல் எனுஞ் சொல் வேறுபடும் வியஞ்சனக் கட்டளையால் (2) தெரிதல் என ஆயிற்று. தெரிதலே தேர்தல், தேறுதல், தெளித்தல், தேறல் (தேன், கள்) சேறு, தேன் எனப் பல உருவந்தாங்கிப் பலபொருள்

தருவது. தெரிதலின் மறையாகிய "தெரியாமை" முதனிலைக்கேட்டால் எய்யாமை என மருவிற்றெனக் காண்க.

முதனிலைக்கேடு தமிழிலன்று. அதன் பாகதங்களிலும் ஆரிய மொழிகளிலுமே மிக்குப் பயில்வது. இதற்கு காரணம்: தென்னாட்டுத் தமிழர், பதமையாய்ப் பேசுவோர். அடிச்சொற்களை விழுங்கிவிடாது உச்சரித்துக் கொண்டிருப்ப. வடநாட்டார், சடபிடவெனத் துரிதமாய்ப் பேசுவோர், அடியுயிர்களைச் சாப்பிட்டுக்கொண்டு அறைகுறையாக உச்சரித்தமையே போலும். நா முதலிய பேச்சுறுப்புக்களின் வன்மையில் இயற்கையாயமைந்த தாரதம்மியமும் இதற்கு ஓர் ஏதுவாகலாம். ஒரு சில உதாகரணங்கள் தருகுதும்:-

| | |
|---|---|
| ஆகாது | காது (தெலுங்கு) |
| இலது | லாது (துளுவம்) |
| வெளிச்சம் | லிஷ்ட் (சர்மனியம்) |
| இலகு | லங்க்ஹு (ஆரியம்) |
| எழுத்து | லித்தெற (லத்தீன்) |
| உருவம் | ரூப (ஆரியம்) |

இவ்வாறு சின்னூற்றுச் சொற்களுள. விரிப்பிற் பெருகும்.

## 4. இருதலைச் சுருக்கம்

ஒருசில உருவங்கள். தனிச்சொற்போற் தோன்றுமவை. உண்மையில் இரு சொல், பல சொல் ஒன்றாகச் சேர்ந்து சுருங்கியவையாம். உதாகரணம்:-

| | |
|---|---|
| இஃது + ஞான்று | இன்று |
| அரு(ம்) வந்த | அருமந்த |
| வரை + ஆடு | வருடை |
| புழைக் + கை | பூட்கை = யானை, வலி |
| கொண்டு + வரல் | கொணரல் |
| நிரல் + நாள் | நெருநல், நேற்று |

இவற்றுள் இன்று என்பது இரு சொல்லல்ல நாற்சொல் அடுக்கித் தோன்றியதாம். இ + அஃது + நாள் + அது. கடைச்சொல் இரண்டும் நாற்று என.

ஞான்று என வந்தன. இ + அஃது எனும் இருசொல்லும் இது என்றாக, பின் கடைக்குறைவால் இஞ்ஞான்றாகி நின்று, மேலும் சுருங்கி இன்று எனவாயிற்று. அருமந்த எனும் இருதலைச் சுருக்கச்சொல்லை அருமருந்தன்ன என்பதன் மரூஉ என்பர் சில்லோர். ஆயின் வெருவந்த (கலித்தொகை 100, 2) மடவந்த (குறுந். 100) என்பவற்றிற் போல இதனையும் அருவந்த அருமந்த எனக்கொள்ளலே சிறப்புடையது என்க. (யாழ்ப்பாணம் குமாரசுவாமிப் புலவர் இயற்றிய வினைப் பகுபத விளக்கம் காண்க)

## 5. தலையொற்று நீக்கம்

இச்சிதைவு பெரும்பான்மை ஆரியத்தினின்று மேற்கொண்ட சொற்களிலும், மிகச் சிறுபான்மையே தான்றோன்றித் தமிழ்ச் சொற்களிலும் நிகழ்வது: உதாரணம்:-

| | |
|---|---|
| தொன்பது | ஒன்பது |
| வாவி | ஆவி |
| சமயம் | அமயம் |
| சபை | அவை |
| சமர் | அமர் |
| சமணர் | அமணர் |
| யுகம் | உகம் |

## 6. நிலைமாற்றம்

இது ஒலி நிலை மாற்றமும் சொல் நிலைமாற்றமுமென இரு திறத்ததாகும். நிலை மாற்றத்தை ஆராய்ந்தறிதல் எளிதன்று. பொருள் வேறுபாட்டுக் கட்டளைகளையும் சொற்கள் உகங்களினூடு படிப்படியாய் வந்த செய்தியையும் திறவுகோல்களெனக் கொண்டே இவ்வாராய்ச்சி நிரம்பற்பாற்று. ஒலிநிலை மாற்றத்தினுக்கு உதாரணம்:-

| | |
|---|---|
| கடகம் (கோடகம்) | சகடம் |
| தசை | சதை |
| பகடு (பிளப்பது) | படகு |
| கவுதாரி | கதுவாலி |
| கொடிறு | குறடு |

இனி, சொல் நிலைமாறுதற்கு உதாகரணம் மேல்வருவன:

இல்முன் முன்றில்

கைக்காணி காணிக்கை

## 7. ஒப்புமைச் சொல்லாக்கம்

இச்சிதைவினுக்கு முன்னரே எடுத்தோதப்பெற்ற எய்த்தல் (எய்தல்) எனுஞ் சொல் சிறந்த காட்டாகும். எய்த்தல் என ஒரு சொல் சான்றோர் செய் யுட்கண்வாரா என உரையாசிரியர் சேனாவரையர் குறித்தமையே எமக்கு நற்சான்று. தெரியாமை எனுஞ் சொல் மருவி எய்யாமை என நிற்றலைக் கண்டோம். அச்செய்தியின் உண்மைத் தோற்றுவாயை உணராமே.

அறிதல் அறியாமை

(எய்தல்) எய்யாமை

என. எதிர்மறையாய் நிற்பான் போன்று எய்யாமைக்கும் ஓர் உடன்பாட்டு உருவத்தினை ஆக்கிப்போந்தார். இன்னணமே புழை. புரை, போழ்தல். பொள்ளல் என வரும் "உள்" தலையடியின் வியுற்பன்னத்தினை. பொள்ளா (பொல்லா)ப் பிள்ளையார் எனுந் தொடரின்கண் உற்பத்தியர்த்தம் தவறாது வழங்கியிருப்ப. பொள்ளா (பொல்லா) எனும் அடையினுக்குத் துளையாத; குற்றமில்லாத என்றிருக்கும் உண்மை அர்த்தத்தைக் கொடுத்தோதி யிருப்ப. பொள்ளாதது. (பொல்லாதது) எனும் அவ்வுருவத்தினுக்கே தீய மனச்சார்பு எனும் அர்த்தம் ஒன்று வந்தடைந்துள்ளதைக் காண்கின்றனம். குற்றமுள்ளது எனும் பொருளுள்ள பொள் (புழை) எனுஞ் சொல் பலப்பல கிளைச்சொற்களாகத் திரிந்து நின்றும் பூர்வ அர்த்தத்தோடு இயைபுடைய பொருளே என்றும் கொள்வதாகும். அச்சொல் எதிர்மறை உருவந் தாங்குவ துண்டாயின். நல்லது. சிறந்தது என்றே பொருள் தரும். ஆகலின் இதற் கெதிரான பொருளை மேற்கொண்ட பொல்லாத (பொள்ளாத) எனும் இவ்வுருவம், கூடாத (நல்லோர் வகுப்பிற் சேராத) ஆதிய சொற்களின் ஒப்புமையானே ஆக்கப்பட்டது எனக் கோடலாம்போலும். ஆயின். பொல்லாத எனுஞ்சொல் "புழை" எனும் அடியினின்றன்று ஒல்-லல் எனும் அடியினின்று வலியுறுத்தலின்கண் முதனிலை மெய் (5) பெற்றுவந்த தூஉம் ஆகலாம். ஒல்லாத பொல்லாத= பொருந்தாத. அங்ஙனமாயின் இச்சொல் ஒப்புமைச் சொல்லாக்கத்தினுக்கு ஒரு காட்டாக மாட்டாதென அறிக.

## ஐந்தாம் அதிகாரம்

# SEMANTIC CHANGES

### பொருள் வேறுபாட்டு முறை

சொற்களின் பிறப்பாராய்ச்சி செவ்வனே நடைபெறல் வேண்டுமாயின். அவை தலையடிகளினின்றும் திரிந்து வழியடிகளும் வழிச்சொற்களும் ஆயின முறையைத் தெரிந்துகொள்ளுதலும்; ஒலித்திரிபாலும் உருத்திரிபாலும் அன்னவை அடையும் மாற்றங்களைக் குறித்துக் கொள்ளுதலும் போதா; சொற்களின் பொருள் படிமுறையாய் விரிந்து வருதலையும் நோக்குதல் வேண்டும். ஒரு சொல் எத்தனை மாற்றத்தை அடைந்து கொண்டு, தன் ஆதி உருவத்தினோடு ஓர் எழுத்திலாயினும் ஒப்புமையின்றி நிற்குமிடத்தும். அச்சொல் ஆதிச்சொல்லின் பொருளோடியைந்த ஓர் பொருளையே தருமாயின். அன்னதன் தோற்றுவாயைத் துருவி அறிதற்கு அப்பொருள் ஒப்புமை போதியதோர் எழிலாகும். சாகை எனுஞ் சொல்லினுக்கும் கடகம் எனுஞ் சொல்லினுக்கும் உருவத்தளவில் யாதோர் ஒப்புமையுமின்று அன்றோ? ஆயின் சாகைக்கு வட்டிற்பொருள் உண்மையை ஆதாரமாகக்கொண்டு, உள் எனும் தலையடியினின்று பிறந்த குட எனும் வழியடியானது, கடகச் சொல்லினுக்குப் பிறப்பிடமாயதுபோல இச் சொல்லினுக்கும் பிறப்பிடமாயினமையை வழிச்சொல்லாக்கக் கட்டளைகளும் ஒலித்திரிபு உருத்திரிபு முறைகளும் துணைச் செய்யக் கண்டு கொள்கின்றனம். கோடகம் கடகமாகி (ஒலித்திரிபு); கடகம் சகடமாகி (நிலைமாற்று); சகடம் சாகாடாகி (நீட்டல்); சாகாடு சாகையாயிற்று (கடைநிலைக்கேடு). கடகத்தினுக்கும் சாகைக்கும் உள்ள பொருள் இயைபை ஆராய்ந்திலமாயின். இரண்டும் ஒத்த பிறப்புடையன எனும் உண்மை வெளிப்பட்டிராது அன்றோ.

அப்பால் உருவத்தில் ஒன்றேயான இரு சொற்கள் வெவ்வேறு அடிகளினின்று பிறந்திருத்தலை அவற்றின் பொருள் வேற்றுமையே காட்டுவ

தாகும். போது எனுஞ் சொல் பூவையும். அதனொடு எவ்வாற்றானும் பொருளியைபில்லாத நேரத்தையும் குறிக்கின்றதாகலின். அது இரு வேறு அடிகளினின்று பிறந்து உரு ஒத்திருத்தல் வேண்டுமென்னும் ஊகத்துக்கு இடனுண்டாம். உள்ளபடி பூப்பொருளுள்ள "போது" எனுஞ் சொல் பொத்தி < பொள் < உள் எனும் வரலாறும். நேரப்பொருளுள்ள "போது" எனுஞ் சொல் பொழுது < ஒளி < எல் எனும் வேறொரு வரலாறும் உள்ள வையாமென்றல் முன்னர் தெரிக்கப்பட்டதன்றோ இவ்வாறே கெழுமுதல் எனுஞ் சொல்லினுக்குக் கூடுதல். நிறைதல் எனும் பொருளும். அப்பொரு ளோடு ஒரு சிறிதும் சார்பில்லாத பிரகாசம். நிறம் எனும் பொருளும் வழங் கலால். உருவத்திலொன்றான அச்சொல் பிறப்பால் இருவேறு அடிகளை உடையது என நிச்சயிக்கப்படும். எங்ஙனம்? குழை (வளை) எனும் வழி யடி குழு-மு என்றாகி (3 கட்.) அப்பால் கெழு-மு என நின்று (ஒலித்திரிபு) கூடுதற் பொருள் தந்தது. எழு (எல்) எனும் தலையடி எழில் என நின்று. கெழு-மு என வந்து (5. 3 கட்.) பிரகாசப்பொருள் தந்தது. ஒரு சொல்லி னுக்கு ஈரடியன்றிப் பலவடி உண்டாதலும் காணப்படும். இதனாலே பல பொருள் ஒரு சொல் எனும் பாகுபாடு தமிழ்ச் சொற்களினுக்கு எழுந்த தென்க. இவற்றால் முடிந்த முடிபு யாதெனின். சொற் பிறப்பாராய்ச்சிக்கு சொல்லுருவப் பரிசோதனையோடு பொருள் விசாரணையும் மிக வேண் டற்பாலது என்பதாம்.

## *1. சொற்களின் அடிப் பொருள்*

தமிழ்ச்சொற்கள் யாவற்றினுக்கும் அடிப்படையான அர்த்தம் அண்மை. சேய்மை, கீழுறல், மேலுறல் எனும் இந் நால்வகை இடச் சார்புகளுள் ஒவ் வொன்றைப் பற்றியதே என்பது ஊன்றி நோக்கற்பாலது. இதனை வேறொரு வகையாய் விளம்பவேண்டுமாயின், மக்கள் ஆதியில் ஐம்பொறிகட்கு மெட்டிய் பொருள் செயல்கட்குப் பெயரிட்டு, அதன் பின்னரே, இயைபு பற்றி. மனோ சம்பந்தமான பிறபொருட்களினுக்கும் பெயரிடலானார் என்க. இதுதான் எண்ணங்கள் உருவாகி விரியும் முறையுமாம். நமக்கு அறிவெல் லாம் முதற்கண் ஐம்பொறி வாயிலாக வருவது. மெய், வாய், கண், மூக்கு. செவி என்னும் பொறிகளைந்தினும், நடுநின்ற கண்ணே சிறந்தது. கண் ணால் சனிக்கும் பொருள் பற்றிய அறிவெல்லாம் தொடக்கத்தில். சமீபத்தி லுள்ளது. தூரத்திலுள்ளது. கீழுள்ளது. மேலுள்ளது எனும் இடச்சார்பையே துணையாகக் கொண்டுவரும். செயல்பற்றிய அறிவெல்லாம். அண்மை கொள்வது. சேய்மை கொள்வது. இறங்குவது. ஏறுவது எனும் இடச்

சார்பைத் துணைக் கொள்ளும். இஃதினும் வேறாய்க் கட்புலனால் யாதையும் அறியுமாறில்லையென நுனித்துக் காண்க. கட்புலனால் பெறும் அறிவை ஆரியர் ரூப (உருவம்) என்பர். உருவம் எனும்போது அகலம், நீளம், தாழ்வு, உயர்வு எனும் இடச்சார்பை உட்கொள்ளல்தான் கருதப்படும். நாம் கண்ணாற் காண்பன யாவும் அகலம், நீளம், தாழ்வு, உயர்வு என்னும் நால்வகை அளவில் உணர்வை நம் உள்ளத்திற் புகுத்தி, அதனானே நாம் தம்மை அறியச் செய்வன. மென்மை, கடுமை, இளக்கம், இறுக்கம் எனுங் குணங்களும் அளவின் விகற்பமேயாம். இந்நால் வகை அளவும் அண்மை, சேய்மை, கீழுறல், மேலுறல் எனும் இடச்சார்பும் ஒன்றாய்த் திகழ்தலை நுண்ணறிவாற் காண்க. கண் எனும் விசேடித்த பொறியால் பெறப்படும் உருவ அறிவு இடச்சார்பு பற்றியதாம் எனில், ஏனைச் சுவை, ஊறு, ஓசை, மணம் எனும் அறிவுகள் எத்தகையன? அவை தாமும் இடச்சார்பு பற்றியனவே எனல் சிறிது ஆழ்ந்து நோக்குங்கால் வெள்ளிடை விளங்கலாகும். சுவையிலும் ஓசையிலும் விளங்குகின்ற இனிப்பு உறைப்பு என்பனவும், ஊற்றிலும் மணத்திலும் தோன்றுகின்ற மென்மை கடுமை என்பனவும் இளகிய இறுகிய தன்மைகளின் குறிப்பேயன்றோ? இனி இளகுதலும் இறுகுதலும் எனும் தன்மை யாது? அண்மையாதலும் (அணுகுதலும்) சேய்மையாதலு (அகலுதலு) மேயன்றோ. இங்ஙனம் அறிவெல்லாம் நால்வகை அளவு மயமான இடச்சார்பால் தோன்றுவதாகலின், அவ்விடச் சார்பை மட்டும் காட்டி நிற்கின்றவைதாம் முதற்சொற்களாம். எச்சொல்லினுக்கும் இடச்சார்பு பற்றிய பொருளே ஆதி அர்த்தமாய் நிற்ப, பிற அர்த்தங்கள் யாவும் (2) சிறப்பியல்பு சுட்டலால், (3) சார்புபற்றி விரிதலால், (4) இனந்தழுவலால், (5) இயைபுடைமையால், (6) எதிர்நிலையால், (7) வழக்காறிழிதலால் ஒன்றன்பின்னொன்றாய் மேவின எனவறிக. இவ்வாராய்ச்சி தமிழ் அறிஞர்களால் இதுகாறும் முறைப்படி செய்யப்படாமையின், அகராதிகளுள் சொல்லர்த்தங்கள் படிக்கிரமமின்றித் தாறுமாறாய்க் கிடக்கின்றன. கிரேக்கம் ஆதிய சில மொழிகட்கு அகராதி வகுத்திருக்கும் ஐரோப்பிய அறிஞர்கள், முதற்கண் சொற்களது அடிப்பொருளையும் அப்பால் அவ்வடிப் பொருளோடு இயைபுடையனவாய் விரிந்த பிறபொருட்களையும் செவ்விதாய்க் குறித்திருத்தலைக் காண்கின்றோம். தமிழிலும் சொற்பிறப்பாராய்ச்சி நிறைவுறுங்கால் சொல்லர்த்தங்களை வரன்முறையானே தெரிந்துணர்த்தும் அழகு தமிழகராதிகளிலும் அமைவதாகும்.

## 2. சிறப்பியல்பு சுட்டல்

சொற்களின் அடிப்பொருளின் மேல் சிறப்பியல்பு சுட்டும் பொருள் பொருந்துவதாகும். அடிப்பொருள் கொண்டன அடிச்சொற்கள். இவ்வடிச் சொற்கள் காட்டும் பொருள் எல்லாம் அணுகிவரல் தூரச் செல்லல் மறைந் திருத்தல். இறங்கல் ஏறல். குறுத்திருத்தல் நெடுத்திருத்தல் உள்வாங்கி (வளைந்து) வரல். கீழ்ப்படுதல் மேற்படுதல் எனும் ஆதி உள்ளக் குறிப்புக் களையும் இவற்றுள் அடங்கி நிற்கும் பிற குறிப்புக்களையும் சார்ந்த வையே. இவ்வடிப்படையான குறிப்புக்களைக் கைம் முதலாக் கொண்டு. பொருட்கள் செயல்கட்குப் பெயரிட நேருந்தோறும் அப்பொருள் செயல் களில் இக்குறிப்புக்கட்கினமாய்ப் புறப்பாடாய்த் தோன்றும் குணங்கள் வாயிலாய் ஒவ்வோரு பெயரை உருவாக்கி வைத்தனர் எம்முன்னோர். **புறப்பாடாய்த் தோன்றும் குணங்களையே** சிறப்பியல்பு என்றனம். இஃது ஒரு எடுத்துக்காட்டால் விளக்கமாகும். துழ எனும் வழியடி இதுவரை யில் எமக்கு மிக அறிமுகமாய்ப் பொருந்தியதொன்றன்றோ? “துழ-த்தல்” உழ-லல் எனும் தலையடியினின்று வருவது; உழன்றுவரச் செய்தல் எனும் பொருளுள்ளது. இனி துழ எனும் அடியால் விளக்கப்பெறும் உழன்றுவரல் எனும் உள்ளக்குறிப்பு சிறிது மாறி. உள்வாங்கிவரல் அன்றேல் வளைந்து வரல். கூடல் எனும் பொருளையுந் தரும். இவ்வளைந்துவரலைப் புறப்பா டான குணமாய். அன்றேல் சிறப்பியல்பாய்க் கொண்ட பல பொருள் செயல் கட்கு துழ எனும் அடியைக் கைம்முதலாக் கொண்டு புதுப்புதுப் பெயர்கள் உருவாக்கப்பட்டன. எங்ஙனம்? சூழ்ந்துவரல் **துழத்தல்** எனப்பட்டது. கூடிவருதல் **தொழுதி**யாயிற்று. அச்சொல்தான் கூட்டம். திறள் இனம் எனும் குறிப்புக்களையும் உணர்த்தும். வேறோரு வகைக் கூட்டம் **தோடு** எனப் பெயர் பெற்றது. இத் தோடு எனுஞ் சொல்லினின்றே **தொகுதி, தொகை, தொகுத்தல்** எனும் உருவங்கள் 6ஆம் கட்டளையாற் பிறந் தன போலும். அப்பால் சூழவந்து நிற்கும் பசுக் கூட்டம் தொழு என. பின். இனம் பற்றி. அவை நிற்குமிடம் **தொழுவம்** என. **தொறு** என வந்தது. பசுக் கூட்டத்தோடு நெருங்கிய இயைபுடையோன் தொறுவன் என. அவன் இல்லாள் **தொறுவி. தொறுத்தி** என வந்திட்டனர். ஆயின் வளைத்து உழுவோர் **தொழுவர்** ஆயினர். உழவு செய்தல் **தொழுப்பு** ஆயிற்று. உழவே சிறந்த முயற்சியாதலின் முயற்சி எல்லாம் **தொழில்** எனும் பெயர் அடைந்தது. இங்ஙனமே உழவினின்று ஊழியமும் வருமெனக் காண்க. மேல். உழவு ஆதியன தொழில்கள் இழிதகைவு பெற்ற காலத்திற்போலும்.

**தொழும்பு** எனும் குறியீடு எவ்வெத் தொழிலினுக்கும் பொதுப் பெயராய் வரலுற்று, தொழில் செய்வோர் **தொழும்பர்** (அடிமைகள்) என அடக்கி யாளப் பெற்றனர். இத்தொழும்பருக்கே, அன்னோர் மேலும் நெருக்குண்ட காலத்திற் போலும். **தொறு** எனத் **தொறுவு** என உயர்திணைப் பெயர் விகுதியில்லா நாமகரணஞ் செய்யப்பட்டது. இந்நாள் தமிழ் மக்களுள் மிக இழிந்தோராய்க் கிடக்கும் **துரும்பர்** தொறும்பரே போலும். தொழில். தொழும்பு எனும் உருவங்களோடு இயைந்த **தொண்டு** எனும் உருவமும் அடிமைகள் ஆற்றும் ஊழியத்துக்குப் பெயராகி இழிவுற்றதாயினும். தொண்டர் எனும் உருவம் கடவுளைச் சேவிப்போர்க்கு உரியதாகி உயர் வுற்றது. **தொழுதல்**, வளைதல் எனும் அர்த்தத்தில் வணங்குதல் எனும் பொருளடைந்தது. கடவுளைத் தொழுமளவில் இச்சொல் உயர்வு பெற்று நிற்பினும். "தொழுதூண்" ஆதிய பிரயோகங்களில் இழிவுபெற்று வருத லையும் நோக்குக. இங்ஙனமே இடம் பற்றியனவான ஆதி மனக்குறிப்புக் களை மட்டுங் காட்டி நின்ற அடிச்சொற்களைக் கொண்டு பலவேறு பொருள் செயல்கட்குப் பெயரீடு செய்யப்பட்டது. பொருளின், செயலின் சிறப்பியல் பைச் சுட்டலே பெயரீட்டிற்கு வாயிலாயிற்று.

ஆயின் பொருள் செயல்களின் சிறப்பியல்புகள் பலராற் பலவகை யாயும். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதமாயும் நோக்குறலாம். ஆத லால் ஒரோர் பொருட்கு ஒரோர் செயலினுக்குப் பல பெயர்கள் இடப்படு தலுமாயிற்று. இதனானே ஒரு பெர்ருட் பல சொல் எனும் தமிழ்ச்சொற் பாகுபாடும் எழுந்தது என்க. உதாகரணம்: பன்றிக்குக் கேழல் எனவும் பெயர் உண்டன்றோ. **பன்றி**ப் பெயர் புறப்பட்ட பல்லினின்றும். **கேழற்** பெயர் நிலத்தைக் கிளைத்தலினின்றும் வருவன. அறிவானது உணர்வு எனவும், காட்சி எனவும் பெயர் பெறுமன்றோ. பிரித்துக் காண்பது **அறிவு**; உள்ளத்திற் கொள்வது **உணர்வு**; நோக்கித் தெளிவது **காட்சி**யாம். இனி ஒரே பொருளினுக்கு வெவ்வேறு நோக்கால் உண்டான பல பெயர்கள், சிறிது சிறிது வேறுபட்ட பொருள் விசேடத்தை விளக்குதலுங் கொள்க. இன்னணமே அறிவு பொதுவில் உண்மை கைவரலையும். உணர்வு அவ் அறிவின் முதிர்ச்சியையும். காட்சி அதுதான் ஆராய்ந்து காணப் பெற்றமை யையும் தெரிக்கும் என்க.

### 3. சார்புபற்றி விரிதல்

சிறப்பியல்பு சுட்டி எழுந்த பெயரீடுகள். அப்பால். அதுவது குறிக் கும் பொருளினோடு சார்பு பூண்ட வேறு பொருட்கட்கும் பொருந்து

வனவாயின. உதாகரணம்: வேலி எனுஞ் சொல் தலையிடத்து **எல்லை** யைக் குறித்தது. மேல் அவ்வெல்லையைக் காட்டி நிற்கும் **மதிலை**, அம் மதிலால் உறுங் **காவலை**, அக்காவலினுள் அடங்கியுள்ள ஊரை, அவ் வூரின் பகுப்பாகிய **நிலத்தை** முறைமையிற் குறித்தலாயிற்று. இது தான் சார்புபற்றி விரிதலாம். இப்பொருள் வேறுபாட்டு முறையை உளத்திற் தரித்துக்கொள்ளல் சொற்பிறப்பாராய்ச்சியினுக்கு மிக வேண்டற் பாலது. யாதிற்கெனின், சார்புபற்றி விரிந்த சொற்களுள் தலையாய் நிற்பதை ஆராய்ந்து கண்டுகொள்ளாவிடின் சொற்பிறப்பு நிச்சயம் நிறைவேறாது என்றமையாலாம். என்னை? ஈண்டு யாம் உதாகரித்த சொல்லின் பொருள் வரிசையில், வேலி எனும் சொல்லைக் கடைநின்ற நிலப் பொருளோடு மட் டும் நோக்குவோர்க்கு அவ் வேலிச் சொல்லின் உண்மைத் தோற்றரவை ஆராய்ந்து காணல் அரிதாகும். அன்னோர் நிலம் எனும் அர்த்தங் கொண்ட வேலிச்சொல் எவ்வாறு எழுந்தது எனும் வினாவிற்கு விடை காண்டல் எளிதன்று. ஆயின் நிலப்பொருள் காவலினின்றும், காவற் பொருள் மதிலினின்றும், மதில் எல்லையினின்றும் தோற்றியதைத் துருவி அறியுங்கால், வேலிச்சொல்லும் எல்லைச் சொல்லும் ஒன்றேயெனத் தெளியலாம். எல்லைச்சொல்லின் வரலாறு இது:- **எல்** எனும் சொல் எழுகின்ற சிறப்பியல்புள்ளவனாகிய சூரியனையும், அப்பால் சார்பு பற்றிய விரிவால் அச்சூரியனின் வெளிச்சத்தையும் சுட்டுவது. இதினின்று தோன் றும் **எல்லு** எனும் உருவம், சூரிய ஒளி நிலை பெறும் காலமாகிய நாளைச் சுட்டும். **எல்லை** எனும் உருவம் வெளிச்சக் காலத்தின் முடிவாகிய வரம்பைச் சுட்டும். எல்லை எனும் சொல்லே உறுதிப்பாட்டின்கண் **வேளை** எனவும் **வேலி** எனவும் இரு உருவந்தாங்கி, முறையே வரையறுத்த கால மாகிய நேரத்தையும், வரையறுத்த இடமாகிய மதில் ஆதியனவையும் குறிக்கும் என உய்த்துணர்க.

சொற்பொருட்கள் தாந்தாம் சார்புபற்றி விரிந்த முறையானே அகராதி களுள் நிறுவிக் காட்டப்படுதலே தலைசிறந்த ஒழுங்காம் என முன்னருங் கூறினோம். தமிழ்ச்சொற்கள் யாவற்றினும் உண்மைத் தோற்று வாய்களா கும் அடிகள் ஒருகால் வரையறுத்து வைக்கப்பட்டனவாயின், அகராதி நூலாசிரியர்கள் அவ்வச் சொல்லின் பல பொருட்களையும் அவ்வவற்றின் வரன்முறை பிறழாது எழுதிவிடுவர். கற்பாரும் பாடின்றிச் சொல் அர்த்தங் களை நினைவிற் பதித்துக் கொள்வர் அன்றோ.

## 4. இனந்தழுவல்

ஒரு சொல் தான் சுட்டும் பொருள் ஒன்றினோடு சார்புள்ள பிற பொருட்களையும் படிமுறையாய்ச் சுட்டுவதனைக் கண்டாம். இனி ஒரு சொல், தான் குறிக்கும் பொருளைச் சார்ந்திராவிடினும், அதனோடு யாதோர் சிறப்பியல்பளவில் இனம் பூண்டனவாயுள்ள வேறு பொருட்களையும் குறித்தல் இனந்தழுவல் எனப்படும், எங்ஙனம்? புல் எனுஞ் சொல் பூண்டு விசேடத்தினுக்கன்றி மூங்கிலுக்கும், பனைக்கும், சிங்களத்தில் தென்னைக் கும் பெயராகும் அன்றோ? தென்னையைப் பனையைப் புல்லெனக் கூறலா மெனின், புல் எனுஞ் சொல்லின் உற்பத்தி யாது? அவ்வுற்பத்தியைப் பூண்டு விசேடத்திலும் மூங்கிலிலும் வைத்துக் காண்டல் எளிது. புல் எனும் உரு வம் புழை > பொள் எனும் வழியடிகளினின்று வருவது. இவை உள் எனும் தலையடியாற் பிறந்தன. ஆகவே துளையுள்ளது எது அது புல்லாம். பூண்டு விசேடமும் மூங்கிலும் உட்டுளையுடைமையால் புல் என்றழைக்கப்பட் டன. அதனானே வெளியே வயிரமும் உள்ளே மென்மையுங் கொண்டு. உட்குங்கால் துளையுடையனவாகின்ற பனை, தென்னைகளும் அப்பெயர் அடைந்தன. இதனை விளக்கி "புறக்காழனவே புல்லென மொழிப" என் றார் ஒல்காப்புகழ்த் தொல்காப்பியனாரும். புறக்காழ் = வெளியே வயிரம்.

உள் எனும் தலையடியினின்று பிறந்து, தொள் > தோள் > தோம் எனும் வழியாய்த் தூம்பு என வரும் சொல்லினையும் நோக்குக. தூம்புச் சொல் லும் தான் உருமாறாதிருந்து, துளையுடைமையாகிய சிறப்பியல்புப் பொது மைகொண்ட பல வேறு பொருட்களை உணர்த்தும். எங்ஙனம்? தூம்பு **உட்டுளை**யாம். "தூம்புடைத்தடக்கை" என்றதிற்போல. இதுதான் "தும் பிக்கை"யிற் **தும்பி**யென நிற்கும். தும்பி, மேல்வரும் இயையுடைமை எனும் வாயிலாய், **யானை**க்கும் பெயராகி, பின் இனந்தழுவலால் **வண் டு**க்கு, **சுரை**க்குப் பெயராகும். அப்பால், தூம்புதான் துளையுடைச் சிறப் பியல்பை நோக்கி, ***சலதாரை, மடை, மரக்கலம், மூங்கில், வாயில், அருநெறி, வழி*** எனும் இவற்றையும் குறிப்பதாகும். சிறப்பியல்பு சுட்டலிற் கும் இனந்தழுவலினுக்கும் வேற்றுமை யாதோ எனின், முந்தியதில் சொல் உருத்திரிந்து வெவ்வேறு பொருளை உணர்த்தும்; பிந்தியதில் ஓர் உரு வமே பல பொருள் உணர்த்தும் எனவறிக.

## 5. இயைபுடைமை

இப்பொருள் வேறுபாட்டை வியாகரண ஆசிரியர்கள் ஆகுபெயர் என்ப. இஃது சிறப்பியல்பு ஒன்றனைச் சுட்டும் குறியீடு யாதேனும் ஒரு

சொல்லில் அமைந்திருத்தலினால் அன்று. சொல்வோர் தம் உள்ளத்தில் வலிந்துகொண்ட பிறிதொரு இயைபுடைமையினால் வருவது. உதாகரணம்:- தோகை எனுஞ் சொல்லைப் பெண்ணின் பெயரென வழங்குவது. "தோகை"யது சொற்பொருளில் பெண்ணைச் சுட்டும் குறியீடு யாதுமின்று. என்னை? "தோகை" தொங்கு < தூங்கு < துழ < உழல் எனும் வரலாறுடையதோர் சொல். அச்சொல்தான் தோகை என்றாகி வால் எனும் பொருள் கொண்டது. தூங்கும் அது = தோகை. இத்தோகைச்சொல் வாலை; கொய்சகத்தை; சிறப்பு நோக்கி. மயிலின் வாலை; சார்பு பற்றி, அம்மயிலைக் குறித்தது. அப்பால் கவிவாணர் கொண்டதோர் உள்ளக்கிடக்கையால் மயில்போலும் சாயலுடையாளெனப்படும் பெண்ணுக்கும் பெயராயிற்று. இதுதான் இயைபுடைமையாம்.

### 6. எதிர்நிலை

முற்சென்ற பொருள்கோள் முறைகளைக்காட்டில் இப்பொருள்கோள் வந்தவாறு அரிதுணர்தற்பாலது. ஒரு சொல் தான் குறித்த பொருளினுக்குச் சாலவும் எதிரானதொரு பொருளைக் குறித்தலாயினமை எவ்வாறென ஆராயவேண்டின். அச்சொல் இலக்கியங்களூட் பயப்பய அடைந்துகொண்ட மாற்றங்களையெல்லாம் துருவி அறிதல் இன்றியமையாதது. இதற்கு ஒரு காட்டைத் தருகுதும்:- நக்கல் எனுஞ்சொல் தீண்டுதல். சிரித்தல் எனும் ஒன்றற்கொன்று சார்பில்லாப் பொருளோடு. கெடுத்தல். சுடுதல் எனும் எதிர்ப்பொருளையுந் தருமென அகராதிகள் தெரிக்கின்றனவே. இஃது எவ்வாறு? சிரித்தற் பொருள் படைத்த அச்சொல்லே கெடுத்தற் பொருளையுந் தரல் ஒக்குமா? ஒக்குமென்றல் அச்சொல்லது பொருள் விரிந்து விரிந்து திரிந்த முறையை ஆராயுங்கால் இனிது பெறப்படும். நக்கல் எனுஞ் சொல் நக்கு. நகு எனும் முந்திய உருவங்களை உடையது. இவ் இரு உருவங்களும் அஃகு எனும் தலையடியினின்றும் முதனிலை மெய்பெற்றுப் பிறந்து. மிக அண்மை கொள்ளலையும் படிப்படியாய் அகலுதலையும் உணர்த்தும். அடு. அத்து என்பன அஃகு எனும் சொல்லினுக்கும், நடு, நண்ணு, நத்து, நச்சு என்பன நக்கு எனுஞ் சொல்லினுக்கும் இனமானவை. அகல். பகு என்பன நகுச் சொல்லினுக்கு இனமானவை. "நகு" சொல்லினுக்கேயும் ஆதியில் நண்ணுதற் பொருளிருந்தமை நகைவர் (நண்பர், அண்மையிலுள்ளோர்) என அதற்கோர் வியுற்பன்னம் உண்மையாற் பெறப்படும். படுதலின். நக்கு என்பதன் மறு உருவமே "நகு" எனக் கொள்க. இனி. நக்குதல். மிக அண்மை கொள்ளல் அன்றேல் நண்ணுதற் பொருளில் தீண்டுதலை

உணர்த்தும் "வான் நக்கிநின்று நுடங்குங்கொடி" என்றதிற்போல (சிந்தாமணி). நாவினாற் தீண்டுதலும் நக்குதலாம். இனி, நிலத்தைத் தீண்டித் தீண்டிச் செல்லல் அன்றேல் ஊர்ந்துபோதல் **நகர்**-தல் ஆயிற்று. இவ்வாறு செல்லும் பிராணிகள் சில இச்சொல்லாற் பெயரீடு பெற்றன. எங்ஙனம்? ***நாகம்*** = ஊர்ந்து செல்வது. பாம்பு; ***நகுலம்*** = ஊர்ந்து செல்வது. கீரி ***நக்கரம்*** = ஊர்ந்து செல்வது, முதலை. இவ்வாறே ***நத்தை, நந்து, ஞெண்டு*** ஆதியனவும் நத்துதல் எனும் இணையுருவத்தினின்று பிறந்தன காண்க. அப்பால், நக்குச் சொல்லினுக்கு ஊர்ந்துசெல்லற் பொருளின்மேல் பரத்தல், விரிதற்பொருள் பொருந்துவதாயிற்று: "நக்கலர் துழாஅய்" (பரிபாடல்) என்றதிற்போல. விரிதற்பொருளில் நகு எனும் உருவமே பெருவழக்குடைத்து. நகுதல் = விரிதல், மலர்தல். அதற்பின், முகம் மலர்தலாகும் மகிழ்ச்சி, சிரித்தல் எனும் பொருள் வந்துற்றது. சிரித்தற்பொருள் பரிகசித்தலினுக்கும் வாயிலாயிற்று. இக்கருத்தில் ***நங்குதல், நசை*** எனும் உருவங்களும் வழங்கும். நங்குதல்=பழித்தல். நகுதல்=விரிதலாகவே. நகை=விரிந்ததாகிய பூவினுக்கு, அழகினுக்கு, அழகு செய்யும் மணி வகைகட்கு சார்பு பற்றிப் பெயராயிற்று. நகுதல் = விரிதலென வந்திட்ட இவ்வவதரத்தில் விரிகின்ற அன்றேல் வளர்கின்றமையைப் புறப்பாடான குணமாக் கொண்ட சில பொருட்கள் இவ்வடியாய்ப் பெயர் அடைந்தன. எங்ஙனம்? ***நகம்*** = உகிர், மலை, மரம். இது இனந்தழுவல். ***நகிலம்*** = வளர்ந்து பொருமுவது, ஸ்தனம். முலை எனுஞ்சொல் முளைத்தலைனின்று வருதலையும் ஒப்பிடுக. இனி, இவ்வாறு "தீண்டுதல்" பற்றிப் பற்றிச் செல்லலாயும் பிரிந்து பரத்தலாயும் வந்துற்றபின், முற்றாக அகன்றுவிடல், அகற்றிவிடல், கெடுத்தல் எனும் பொருளும் உண்டாயிற்று: "பால் நக்கதீஞ்சொல்" (சிந்தா.) "நனந்தலைப் பேரூர் எரியுநக்க" (புறநா.) எனும் மேற்கோள்களிற் போல. இன்னணமே நக்கலோடு ஒத்த இணைச் சொல்லாகும் நத்துதலும் வளர்தல், கெடுத்தல் எனும் எதிர் அர்த்தங்களைப் பொருந்துதலைக் குறித்துக்கொள்க. "நசை" விருப்பு, அன்பு ஆதலும் "நஞ்சு" கொல்லும் விடமாதலும் இவ்வாறே நோக்கத்தக்கன.

## 7. வழக்காறிழிதல்

சொல்லாட்சியில் நேர் எதிரான பொருட்கள் காலகதியில் பொருந்துதல் போல, முன்னொருகால் சிறந்த அர்த்தங் கொண்டன பின் இழிந்த கருத்துக்கொள்ளலும் ஒன்று. அகலுதல், அகழ்தல் எனும் அடிகட்கினமான ஆள் (வினைசெய்) எனும் வழியடியாய்ப் பிறந்த ஆண்டவன் எனுஞ்

சொல், ஆண்டை என நின்று எசமானைக் குறித்ததாகும். அச்சொல்லே ஆண்டி என மருவிய ஞான்று இரவல் கொள்கின்ற ஓர் வகுப்புச் சைவ ரையும், பரவை வழக்கில், யாருமற்ற பரதேசியையும் குறிக்கும். ஆண்ட வனின் பெயரீடு பரதேசிக்காயினமை வழக்காறிழிதலாம். இவ்வாறே அவன் (அவ் ஆண்) அவள் (அவ் ஆள்) எனும் சாலச்சிறந்த உயர் திணைச் சுட்டுப்பெயர்கள் இக்காலம் சிறப்பில் குறியீடுகளாயின. பிறவுங் காண்க.

OOO

## ஆறாம் அதிகாரம்

# FORMATION OF DERIVATIVES IN SANSKRIT &c

### ஆரிய மொழிகளில் வழிச்சொல்லாக்கம்

இதுகாறும் நாம் நடாத்திய ஆராய்ச்சியால் தமிழ்ச் சொற்களானவை அனைத்தும் ஒருசில ஆதி அடிச்சொற்களினின்றும் நியதமான கட்டளை கட்கேற்பப் பிறந்தும், சிதைந்தும், பலவேறு வகையிற் பொருள்கோள் பெற்றும் திரிந்து விரிந்து வந்து தமிழ் மொழியென்னும் பெரும் தொகுதி யாய் நிற்றலைக் கண்டுகொண்டனம். இனி ஆரிய மொழிகளுள் முக்கிய மானவை என நோக்கப்படுகின்ற சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீனியம், பழஞ்சர்மனியம், பழம் ஆங்கிலம் எனும் இவைகளின் சொற்றொகுதி களும், தமிழ்ச் சொற்கள் எவ்வடிகளினின்று பரிணமித்துப் பிறந்தனவோ அம்முதற் சொற்களினின்றுதான் படிக்கிரமமாய்த் தோன்றியுள்ளன எனும் எங்கொள்கையைச் சுட்டிச் சில சொல்வாம்.

### அடிப்படையிற் சொல்லொற்றுமை

மக்கள் பேசும் பல மொழிகளையும் குலங் குலமாகப் பிரித்துள்ள மேனாட்டு மொழி நூல் வல்லுநர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு வம், மலையாளம் ஆதிய மொழிகளைத் திராவிட குலமெனவும், சமஸ்கிரு தம், கிரேக்கம், லத்தீனியம், சர்மனியம், ஆங்கிலம் ஆகியனவற்றை ஆரிய குலம் எனவும் வகுத்திடுவர். அன்னோர் அவ்வம் மொழியின் சொற்க ளுள் வெளிப்படத் தோன்றுகின்ற உருவ ஒற்றுமையையும் இலக்கண இயைபுகளின் ஒற்றுமையையும் நோக்கியே இம்மொழி இன்ன குலம் எனப் பிரித்துக் கூறுவர். ஆயின், வெளிப்பாடான சொற்சாயல் ஒற்றுமை யின் வேறாய் ஆதி அடிச்சொற்களில் ஒற்றுமையொன்று மலிந்திருப்ப, அவ்வொற்றுமையினைத் துருவியாராய்ந்து காட்டுவோர் இல்லாமையால் அதுதான் மேனாட்டு மேதாவிகட்கு மறைந்திருத்தலும் சாலுமன்றோ?

இலக்கணத்தைச் சார்ந்த திரிபுகள் இருமொழி குலங்களுள்ளும் எழுதற்கு முன்னரே, அவையிரண்டும் ஒன்றாய் ஒரே அடிச் சொற் றொகுதியினைக் கொண்டனவாய் நிலை பெற்றமையும் கூடுமன்றோ? திராவிட மொழிக் குலத்தையும் ஆரிய மொழிக் குலத்தையும் பொறுத்த உண்மைநிலை இஃதே என்பது எமது நெடுநாட்பட்ட ஆராய்ச்சியால் வெளியாகின்றது. அடிப்படையில் ஆதிச்சொற்கள் இருமொழிக் குலத்துக்கும் ஒன்றாயிருத் தல், அன்னவைதாம் இஞ்ஞான்று வெவ்வேறு குலமாய் வகுக்கப்பட்டு நிற்றலினுக்கு எவ்வாற்றானும் மறுதலையன்று எனக் கொள்ளல் வேண் டும். தொடக்கத்தில் இரு குலங்கட்கும் ஒரு சொற்றொகுதியே அடிப்படை யாயிருத்தல் ஒன்று; காலச்செலவில் அவை தம்முட் பிரிவுபட்டு வேறு வேறு வகையில் வழிச்சொற்களாய் விரிந்தமையும், வேறுவேறு வகை யில் இலக்கணத் திரிபுகளை அடைந்தமையும் பிறிதொன்று. அடிச் சொல் லொற்றுமை மொழிக் குலப் பிரிவைத் தாக்கிடாது. குலம் வேறாயினும் பிறப்பொன்றே என்ற உண்மையளவில் வலியுறுத்தப்படும் எனக் காண்க.

“ஆயின் மேனாட்டு மொழி நூலாளர் திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் ஒரே அடித் தொகுதியினின்று பிறந்திருத்தலை ஒப்பாதிருக் கின்றனர் அன்றோ? நீவிர் அன்னோர்க்கு மாறாய். இருமொழிக் குலங்கட் கும் அடியொற்றுமையொன்று பேசுதல்தான் யாங்ஙனம்?” எனில், கூறுதும். மேனாட்டார் இதுகாறும் சமஸ்கிருதம் எனும் வடமொழியை ஆராய்ந்து. அதனோடு தம் முக்கிய மொழிகள் சொல்லுருவத்திலும் இலக்கண இயை புகளிலும் மிக ஒத்திருத்தலை உணர்ந்துகொண்டதனால், தம்மொழிகளும் வடமொழியும் ஒரு குலமே என முடிப்போராயினர். வடமொழியின் தாதுக் களோ பெரும்பான்மை தலையடிகளல்ல. வழியடிகளின் பண்டை உருவங் களுமல்ல. தலையடிகளும் தன்னுருவத்தோடு விளங்குகின்ற வழியடிக ளும் தமிழிலே முத்துப்போற் தெள்ளத்தெளிய இருத்தல் மேனாட்டார்க் குப் புலமாகாமற் போயிற்று. இவ் ஆராய்ச்சி எம் நாட்டிலும் இப்போதே புதுமுகனையாய் எம்மாற் செய்யப்படுகின்றதன்றோ? தமிழிற் பளிங்கென விளங்குகின்ற அடிச்சொற்களை யாம் கண்டுபிடித்த பின்னரே, ஆரிய மொழிச் சொற்களெல்லாம் இவ்வடிகளினின்று, ஒருகாலம் பிறந்து இற்றை ஞான்று உருத்திரிந்து நிற்கின்ற உண்மையை யாமும் ஊகித்து அறியலா யினோம்.

### தமிழும் ஆரியமும்

தமிழ்தான் ஆரிய மொழிகட்குப் பிறப்பிடமென்பது எமது கொள் கையா? அற்றன்று. ஆயின் தமிழ்ச் சொற்கள் எவ் ஆதி அடிகளினின்றும்

ஒருவகையிற் சிறிது சிறிதாய்த் திரிந்து உருவாயின, அவ்வடிகளினின்றே ஆரிய மொழிச் சொற்களும் பிறிதொருவகையிற் திரிந்து உருவாயின என் பதுதான் எம்மதம். மக்கள் பேசிய ஆதிப்பாஷை ஓரசை ஈரசையளவிற் கொண்டனவும், நாம் இங்கு அடிச்சொற்கள் எனச் சிறப்பிப்பனவுமான சொற்பகுதிகளின் தொகுதியேயாயிற்று. அத்தொகுதி பிற்றைஞான்று சொற்கள் விரிந்து வேறுபட்டமையினால் பொருந்திய மீசுவரமான விள்க்க மும் பொலிவுமில்லாது, முக்கியமான எண்ணங்களைத் தெரித்தல் மட்டில் வன்மையுள்ளதாய் நிலைபெற்றது. ஆதிப்பாஷை எழுபது எண்பது அன் றேல் ஒருவேளை நூறு இருநூறு சொற்கட்குமேற் கொண்டதன்று. அத னையே ஆதி மானுடர் பயின்றிருப்பர். பின்பு மக்கள் தம்முட் பிரிவுபட்டு வேறுவேறு பிரதேசங்களிற் குடியேறினோராய் வந்த காலையில், தாம் ஆதிநாளில் ஒருங்கிருந்து வழங்கிய அவ் ஆதிச்சொற்களைக் கைம்முத லாக் கொண்டு புதுப்புதுச் சொற்களையாக்கத் தலைப்பட்டார். படுதலும், பாஷைகள் வேறாகத் தொடங்கின. திராவிட மொழிக் குலத்தார் ஒரு இரீதியாய்ப் புதுச்சொல் ஆக்கிட, ஆரிய மொழிக் குலத்தார் வேறொரு இரீதியாய் ஆக்கினர். இவ்விருகுல மக்களும் தம்முட் பிரிவுபட்டு வெவ் வேறாய்க் குடியேறிய பிற்றை ஞான்றில் அவ்வக் குல மொழி தம்முள்ளும் விகற்பங்கள் ஏறுவனவாகி, பொதுச்சாயல்கள் சில மீந்திருப்ப, சிறப்பு வேறுபாடுகள் பல உண்டாயின. சரித்திர வரையறைக்கெட்டிய காலத்தி னுள்ளே தமிழானது தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆதிய னவாய்ப் பிரிந்தமையும், லத்தீனியமானது இத்தாலியம், பிராஞ்சியம், போத்துக்கேயம், ஸ்பானியம் ஆதியனவாய்ப் பிரிந்தமையும் போன்று, சரித்திரத்துக்கு எட்டாக் காலத்திலும், திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் ஒரு தாய் வயிற் பிறந்து வெவ்வேறு பாஷைகளாயின என ஆராய்ந்தறிக.

திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் தற்காலம் வெளிப் பார் வைக்கு சொல்லுருவிலும் இலக்கணப் போக்கிலும் தம்முள் ஒரு சிறிதும் ஒப்புமையில்லாதனவெனத் தோன்றுகின்றன. ஆயின் இரண்டிற்கும் அடிப்படையானதோர் ஒற்றுமை நயம் உண்டெனபர் கால்டுவெல் பண்டி தர். அது யாதெனின், திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் ஒருங் கொப்ப, உபசருக்கமும் விகுதியுமென நிற்கும் ஆதிச் சொற்களை ஒட்டுத லால் சொல் விகற்பங்களை ஆக்கிக் கொண்டமையாம். தமிழில் உபசருக் கமன்று விகுதியே ஒட்டுச் சொற்களின்கண் மிகப் பயிலும். இவையிற்றை

வழிச்சொல்லாக்கத்து 8ஆம் கட்டளையாகத் தந்துள்ளோம். ஆரியத்தில் உபசருக்கமும் மிகப் பயிலும். உதாகரணம்:- நி-கட; சம்-பவம்; இவற்றில் நி, சம் என்பன உபசருக்கம். வர-தம், சரோ-ருகம் இவற்றில் தம், ருகம் என்பன விகுதி. இருமொழித் தொகுதிகளும் இங்ஙனே அடிச்சொற்களை வேறு சொற்களோடு ஒட்டிப் புதுச் சொல்லாக்குகின்றமையால் இரண்டும் தம்முள் மிக இனங்கொண்டன என்பது அப்பண்டிதரது கருத்து. (Comp. Gram. of Dravid. Lang. p.19I.) தமிழ்ப் புலவர்கள் வட மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என அதிசய உத்தியாய்க் கூறுவர்.

வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும் இலக்கணமொன்றே யென்றே யெண்ணுக என இலக்கணக் கொத்துடையாரும்;

சாற்றருந் தெய்வப் புலவோர் மொழிக்குந் தமிழ் மொழிக்கும்
வேற்றுமை கூறில், திணைபால் உணர்த்தும் வினை, விகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை; பேர்க்கெழுவாய் உருவும்
தேற்றிய லிங்கம் ஒருமூன்றும் இல்லை செழுந்தமிழ்க்கே.

என பிரயோக விவேக நூலுடையாரும் எடுத்திசைப்பர். இரு மொழிக்கும் இலக்கண வேறுபாடு இவையளவில் அன்று, இன்னும் பலவுள. தென் மொழியிலக்கணம் தற்காலத்து வையாகரணர்களால் வடமொழி இலக் கணத்தின் சாயலாய் மிகத் திருத்தப்பட்டுள்ளது. மலையாள, தெலுங்கு இலக்கணங்கள் மேலும் வடமொழி இலக்கண மயமாய் நிற்பன. அதனால் ஒற்றுமை நயமும் மீசுரமாம். ஆயின் லத்தீனியம் ஆதிய பிற ஆரிய மொழியிலக்கணங்கள் தமிழ் இலக்கணத்தினுக்கு மிக வேறுபாடானவை. சொல்லுருவங்களிலும் சிலர் சிலர் திராவிட சொற்கள் பல வடமொழியுள் ஏறிவிட்டன எனச் சாற்றி அவற்றை எடுத்தோதியிருப்பினும், இவற்றை யொழிந்த தனி வடசொற்களினுக்கும் தனித் தமிழ்ச் சொற்களினுக்கும் அடிச்சொற்கள் ஒன்றே என இதுவரையில் யாராதல் ஆராய்ந்து கண்டாரலலர். காலஞ்சென்ற சுவாமிநாதய்யரைப் போலும் மொழியறிஞர்கள், வட சொற்கள் பலவற்றினுக்கும் தமிழ்ச் சொற்களினுக்கும் இடையேயுள்ள உருவ ஒற்றுமையைக் கவனித்தோர், அவ்வடசொற்களே தமிழ்ச் சொற் கட்குப் பிறப்பிடமாயின எனக் கூறிப்போந்தார். இன்னோருள் ஒருவரே னும் சொற்களின் ஆதியுருவங்களைத் துருவியறிந்து இவைதாம் தலை யடிகள், இவை வழியடிகள் எனக் காண முயலாமையால் உண்மை வெளிப்படாதிருந்தது. தமிழின் தலையடிகளை யாம், நெடுநாள் முயன்று,

முறைப்படி ஆராய்து கண்டுகொண்டபின் அவ்வடிகளே தமிழ்ச் சொற்களினுக்கும் வடசொற்களினுக்கும், அவ்வாறு சகல ஆரிய மொழிச் சொற்களினுக்கும். தனித்தனி பிறப்பிடமாயின என்றது விளக்கமாயிற்று. வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் உருவத்திலும் பொருளிலும் ஒரு பெற்றியனவாய் நிற்பவும் தமிழன்று வடமொழியே முந்தியதாதல் வேண்டுமென எழுந்தபடி அறுதியிட்டுக் கூறுவோர் யாது பற்றி அங்ஙனம் துணிகின்றார்? எங்காலவரையில் எட்டியிருக்கின்ற தமிழ் நூல்களைக்காட்டில் வடமொழி நூல்கள் அதிக பழைமையுடையன என்பது முடிந்த முடிபாகலான் அன்றோ வடசொற்களே முற்பட்ட காலத்தன எனக் கூறிவிட்டார்? இவ்வாறு நியாயித்தல் பொருந்தாது. என்னை? இலக்கியங்களில் ஏறிக்கொண்ட சொல்லுருவங்கள்தாம் முற்பட்டவை என முடிக்குமாறில்லை. தமிழ்ப் பாகதங்களாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, பிராகூயி எனும் மொழிகளுள் தமிழே இலக்கிய இலக்கண வரையறைப்படுதலில் முந்தியது என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. தெலுங்கு ஆதியவற்றின் இலக்கியங்கள் எழுதற்குப் பல நூறாண்டுகளின் முன்னரே தமிழ் பலப்பல இலக்கியங்களுள்ளதாய்த் திகழ்ந்தது. ஆயினும் பிற்பட இலக்கிய இலக்கண வரையறைப்பட்டனவான தெலுங்காதிகளின் பல சொல்லுருவங்கள் தமிழ் உருவங்கட்கு முற்பட்டன என்பதில் மயக்கமின்று. உதாரணம்: பேச்சொலிப் பிறப்பில் ககர மெய் சகர மெய்க்கு முற்பட்டது என்றல் நாம் முன்னரும் எடுத்தோதியதொரு துறை. ஆகவே கெய் எனுஞ்சொல் செய் எனுஞ் சொல்லினுக்கு முற்பட்டதாதல் வேண்டும். கெம்பு எனுஞ் சொல் செம்புச் சொல்லிற்கு முற்பட்டதாதல் வேண்டும். கன்னடம் துளு எனும் மொழிகளில் இவ்வாறே நம் சகர முதனிலைச் சொற்கள் பல ககர முதனிலையோடு நிற்கின்றன. தமிழிலும் ஈண்டு காட்டிய இரு சொல்லும் ஆதியுருவத்தோடு ஒவ்வொரு சிறப்புப் பொருளில் மட்டும் நிலைத்திருத்தலும் நோக்கற்பாலது. கை என்பது செய்தல் எனும் பொருளில் "கையறுநிலை" ஆதிய பழைய வழக்குகளில் வருதல் காண்க. "கையறியாமை" எனவும் வருகின்றது (குறள் 925). கெம்புச் சொல்லும் பதுமராகப் பொருளில் சிவப்பு எனும் அர்த்தத்தைக் காட்டுவது. காயா, காவி, காஞ்சனம், கொவ்வை, குவளை எனும் சொற்களிலும் ஆதிக் ககர முதனிலையுருவம் காப்பாற்றப் பட்டதாகின்றது. ஆயின் தமிழில் செப்பு, சேப்பு, சிவப்பு, சே ஆதிய சகர முதனிலைச் சொற்களே மிகுதியாயின. தமிழ், இலக்கியப் பொலிவில் முற்பட்டதாயினும், சிற்சில சொற்கள் அளவில் அதன் பாகதங்களே

பழைமையான உருவங்களைக் காத்து வைத்திருக்கின்றன. இவ்வாறுதான் வடமொழி நூற்கள் முந்தியவையாயினும், தமிழ் தனக்கும் அதற்கும் பொதுவான பழைய சொல்லுருவங்களைக் காப்பாற்றிக்கொண்டிருத்தலில் எவ்வாற்றானும் இழுக்கில்லை என்க.

## வடமொழிச் சொல்லாக்கச் சிறப்பு விதிகள்

ஆதியடிகளினின்று தமிழ்ச் சொற்களும் ஆரியச் சொற்களும் வேறு வேறு ஒலிமாற்று விதிகளையும் சொல்லாக்க விதிகளையும் துணைக் கொண்டு பிறந்தமையால், இருதிறச் சொற்களும் புறக்காட்சியில் வேறாய் நிற்பன. முன்னர் யாம் தமிழ்வழிச் சொற்களின் ஆக்கக் கட்டளைகளை ஆராய்ந்து நிறுவியவாறு ஆரிய வழிச் சொல்லாக்கக் கட்டளைகளையும் எடுத்தோதுவோமாயின் இரு சொற்கூட்டங்களும் உடன் பிறந்தாரென்னும் இனங்கொண்டு விளங்குதல் தெற்றெனப் புலப்படும் அன்றோ. ஆகலின் ஆரியத்தின் வழிச் சொல்லாக்கக் கட்டளைகளுள் முக்கியமானவற்றையும் தெரிந்து கூறுதும். தமிழ்ப் பாராயணர்கட்கு லத்தீனியம் ஆதிய பிற ஆரிய மொழிகளைக் குறித்துப் பேசுதல் விளக்கமாகாதாதலின், அன்னோருட் பலர் சிறிதேனும் அறிந்திருத்தற் பாலதான வடமொழியை மட்டும் ஈண்டு எடுத்தாளுவாம். தமிழ் அரிவரியிலில்லா வடசொற் சப்தங்களை நாம் எழுதிக்கொள்ளும் முறையை இந்நூல் அநுபந்தத்தின் தலைப்பிற் காண்க.

தமிழ் வழிச்சொல்லாக்கத்திற் பயிலும் கட்டளைகள் எட்டும், வட மொழியிலும் சிறிதும் பெரிதுமாய்ப் பயில்வன. அவற்றை ஒழிந்த வேறு சில கட்டளைகள், ஆரிய மொழிகட்குச் சிறப்பாயமைந்தன, மேல் வருவன.

### 1. ஒலிமாற்று

வழிச் சொல்லாக்கக் கட்டளைகளுள் ஏழாவதில் நாம் கண்டு கொண்டவாறு, தமிழின்கண் அடியுயிர்களும் வியஞ்சனங்களும் சொல் விகற்பத்தின் பொருட்டு மாறிவரும். சொற் சிதைவாலும் இவை திரிவு படுதலை நாலாம் அதிகாரத்தினுட் கண்டாம். வடமொழியில் சொல்விகற் பம் நோக்கி நிகழும் உயிர்மாற்றும் மெய்ம்மாற்றும் தமிழிற் போலவே பொது விதியினுள்ளடங்கும். அதற்குச் சிறப்பாயுள்ளன, தமிழ்ச்சொற் சிதைவோடொப்ப, அவ்வடமொழியாளர் ஆதிச்சொற்களைத் தம் பேச்சு றுப்புக்கள் திரித்துச் செலுத்தியவழி விகற்பித்து உச்சரித்தமையினால் எழுந்தனவாம். அன்னோர் உயிரொலிகளைச் சுருக்கியும் மெய்யொலி களை மிக உறுத்துக் கனைத்தும் சொல்லுகின்ற இயல்புடையோராயினமை

வடமொழி ஒலிமாற்று ஆராய்ச்சியால் வெளியாகின்றது. கண்டத்தினைத் துணைக்கொண்டு வலிந்து பிறப்பிக்கும் மெய்கள் தாம் அவர்க்கு மிக விருப்பைக் கொடுத்தன போலும்.

இங்ஙனமே அவர் அ, இ, உ, எ, ஒ எனும் ஐந்து குற்றுயிர்களுள்ளும் பிந்திய இரண்டையும் நீக்கிவிட்டனர். வடமொழியில் எகர ஒகரங்கள் இடம்பெறாமை பிரசித்தம். இதனானே, அடிச்சொற்களுள் எகர ஒகரங்களை முதனிலையாக் கொண்டு வருவன வடமொழியில் தம்முட் கலந்து மாறுற்றன. இருவகைச் சொற்களும் மேலும் சுருக்கத்தை நோக்கி அகர முதனிலை கொண்டியங்கின. உதாரணம்:

| **தமிழ்** | **வடமொழி** | |
|---|---|---|
| செம் | சோ ண | எகரம் ஓகாரமாதல் |
| பொறு | ம்ப்ஹ ற-தி | ஒகரம் அகரமாதல் |
| எரி | அர்ச் | எகரம் அகரமாதல் |
| சிறை | சற | இகரம் அகரமாதல் |
| உறை | அறற | உகரம் அகரமாதல் |
| பின் | புனர் | இகரம் உகரமாதல் |

தமிழிலும் அதன் பாகதங்களுள்ளும் சொற் சிதைவால் நிகழ்கின்ற உயிர் மாற்றுக்களையும் வடமொழியினுக்கு உரைத்துக்கொள்க. தமிழில் உகர முதனிலை கொண்ட சொற்கள் வடமொழில் வகர முதனிலை கொள்ளல் பெருவழக்கு. தமிழின்கண்ணும் வகரம் பெற்று வருகின்ற உகர முதனிலைச் சொற்கள் சில முன்னர் எடுத்தோதப்பட்டன. வடமொழியில் இத்திரிபுக்கு உதாரணம்:-

| **தமிழ்** | **வடமொழி** |
|---|---|
| உழல், வாங்கு | வ க், வ க்ற, வ ங்க், வ ஞ்ச் |
| ஊதை | வா த |
| ஊக்கு | வா ஜ ஸ், உ ங்க் ற, ஓ ஜ ஸ் |
| உமிழ் | வ ம் (வ ம தி, வ மி தி) |
| உழு, உழுவை | வ்று, வ றா க |
| ஒலி, உற்கை | வ ற்ச் (வ ற்ச தே) |

இனி மெய்ம்மாற்றில் வடமொழிக்குச் சிறப்பாயுரியனவற்றுள் முக்கியமானவை வருமாறு: தமிழ் டகர ழகரங்கள் வடமொழியில் ஷகர க்ஷகரங்களாகும். கிழ, குழ, கழ, கட என்பனவும் க்ஷகரமாகும். தனிக்ககரம் க்ஷகரமாவதும் உண்டு.

| **தமிழ்** | **வடமொழி** |
|---|---|
| கட்டை (காடு) | கா ஷ்ட |
| முழி (விழி) | மி ஷ் |
| விழி | வீ க்ஷ் |
| ஒழுகு | உ க்ஷ் |
| கழுவு | க்ஷ ல் |
| கழி | க்ஷி |
| கிழான் | க்ஷி த் |
| கூழ் | க்ஷு |
| கூர் | க்ஷு ர் |
| குள்ளம் | க்ஷு ல் ல |

டகராதி மெய்கள் தமிழ் முறைப்படி தம்மோடு பிறப்பொத்த மெய்களாய்த் திரியுங்கால் வடமொழியில் ஓரோவிடத்து றகரத்தையும் உடன்பெறும். வடமொழித் "தேகம்" தமிழில் திரேகம் என இழிசனர் வழக்கில் வருமாறு போல். எங்ஙனம்?

| **தமிழ்** | **வடமொழி** |
|---|---|
| பல்லவம் | ப த்ற |
| மெல், மெது | ம்று து |
| புள்ளை (பிள்ளை) | பு த் ற |
| தோணி | ந்த்றோ ணி |
| துளை | ந்த்று |
| வாழ் | வ ற்த் |
| மழை | வ்று ஷ் |
| தமிழ் | ந்த்ற மி ள, ந்த்றா வி ட |

இம்முறை சில தமிழ்ப் பாகதங்களிலும் காணப்படும்:

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| துள்ளு | த்றுள்ளு |
| கக்கு | க்றக்கு |
| தோல் | தோலு, த்றோலு |

வாயை இறுகப் பிடித்துத் தொண்டைத் தொனியை மிகச்செய்யும் பான் மையினாற்போலும் வடமொழியாளர் என்றும் றகர ஒலியில் அதிவிழைவு காட்டினோராகின்றனர். தமிழ்க் ககரம் பலகால் சகரமாதலும், இது வட மொழியில் (ஶ) கரமாய் நிற்றலும் பிரசித்தம் அன்றோ? வடமொழியாளர் அடிச்சொற்களில் சகரத்தின்பின் ளகராதிகள் வருந்தோறும் அவ்விரு ஒலிகட்கும் இடைநின்ற உயிரை விழுங்கிவிட்டு ஸ்ரீ என்றே உச்சரித்துப் போயினர்:-

| தமிழ் | வடமொழி |
|---|---|
| சலி, சரி | ஶ்று |
| செழிப்பு, செறிவு | ஸ்ரீ |
| சிலாவு (சுலவு) | ஸ்ரீ (ஸ்ரீ ணா தி) |
| கேள் | (ஶ்) று |

அப்பால் கண்டத்தொனியை மிகத் துணைக்கொண்டு பேசுகின்ற இவ் இயல்பினால், வடமொழியாளர் ஒவ்வொரு வர்க்கமேயான க, ச, ட, த, ப எனுமொலிகளைத் தனித்தனி நான்காக்கி வைத்தனர் என்னக் கிடக்கின் றது. அவை க, க்ஹ, ங்க, ங்க்ஹ என வரும். இவற்றுள் ஒவ்வொரு வருக்கத்தினும் மூன்றாவதான ங்க ஆதியன சிறிது பதமையையும் குறிக் கின்றன. மேலும், அடித்தொண்டையால் உறுத்துப்பேசும் வன்மையினால், யா என்பதை க்ய எனவும், உய் என்பதை க்யிவ் எனவும் உச்சரித்தனராக லாம் என்பது யா-து, யா-வன் எனும் தமிழ் உருவங்கள் அன்னவர் மொழி யில் கஸ், (பழம் ஆங்கிலம் ஹ்வா, லத்தீனியம் குயிஸ்) என நிற்றலாலும்; உய், உயிர் எனும் தமிழ் உருவம், அதில் ஜிவ், ஜீவ, (பழம் ஆங்கிலம் குயிக், லத்தீனியம் உவீவுஸ்) என நிற்றலாலும் பெறப்படும்.

## 2. முதனிலை உயிர் நீக்கம்

சொற்களெல்லாம் நால்வகைச் சுட்டான உயிர்களை முதனிலையாக் கொண்டு பிறந்தன என்றால் இந்நூலினுள் இதுகாறும் நிரம்பக் கூறிய

வற்றால் கைவந்ததோர் உண்மையாமன்றோ? தமிழில் விளங்கும் மெய் முதனிலை எல்லாம் வலியுறுத்தும் முதனிலை எனும் வகையிற் சித்தித் தன. ஆயின் வடமொழியில் சொன்முதலாகும் பெற்றியில்லாதனவான டகர ரகராதி மெய்களும் பல சொற்களினுக்கு முதனிலையாதல் எங்ஙனம்? இக்கடாவுக்கு விடை யாதெனில்: வலியுறுத்தும் மெய்களெனச் சொன்முத லில் வருந் தகைமையற்றனவான டகராதிகளைக் கொண்ட வட சொற்க ளெல்லாம், கேவலம் ஒலிக்குறிப்புச் சொற்களாகாவிடத்து, பெரும்பான்மை முதனிலை உயிர்களை இழந்து நிற்பனவாமெனக் கொள்க. சிறுபான்மை சொன் முதலாகுந் தகைமைபெற்ற வேறு மெய்கள் திரிந்து டகராதிகளாய் நிற்றலுமொன்று. இங்ஙனமே டாகினி எனுஞ்சொல் சாகினிச் சொல்லின் திரிபாம். லிஹ் எனுஞ் சொல் நக்கு (நஸ்) எனுஞ் சொல்லின் விகாரமாம். (ஈண்டு அடி அகரம் இகரமாயினமை உயிர் மாற்று.) இவ் இரு சொல்லின் கண்ணும் டகரமும் லகரமும் சகர நகரங்களெனும் பிற மெய்களின் திரி பாய் வந்தன. இனி, முதனிலை உயிர் கெட்டு நிற்றலினுக்கு உதாகரணம்:-

| **தமிழ்** | **வடமொழி** |
|---|---|
| அரற்று | ர ட் |
| இழு | லி ஹ் |
| இலகு, இலேசு | ல ங்க்ஹு |
| உருள் | லு ல் |
| உலகு | லோ க |
| எரி | ற வ்வி |

ஆயின் "அரற்று" ரட் என வராது, ர ட் எனும் சொல்லே அரற்று ஆயிற் றென உரைத்தல் கூடாதா? "உலகு" லோ க என மாறியதைக் காட்டில் லோ க எனுஞ் சொல்தான் உலக என மாறிற்றென்றலாகாதா? நீவிர் மீட்டும் மீட் டும் காட்டியாங்கு, தமிழ் மக்கள் மெய்களைப் பெரும்பான்மை உயிர் கூட் டியே சொல்லும் வழக்குடையவர்; ஆரியரது உத்தண்டமும் பரபரப்புமான போக்குக்கு எதிர்நிலையாய் மெத்தென நீட்டி நிமிர்த்தி உச்சரிக்கும் இயல் புடையவர். ஆகலின், ர ட் ஆதிய சொற்களை உயிர் கூட்டாது உச்சரிக்க மாட்டாமையினால் தமிழர் தாம் அரற்று ஆதியனவாய்ச் சொல்லலுற்றார் என்றல் அதிகப் பொருத்தமுடைத்தாகாதா? எனிற் கூறுதும், ஆதி அடிச் சொற்களனைத்தும் உயிர் முதனிலையாயெழுந்தன என்பது அடிச்சொல் லியல்பு எனும் அதிகாரத்தினுள் விளக்கப்பட்டதன்றோ? பேச்சொலிப்

பிறப்பு முறையிலும் உயிர்களே முந்தியவை என்பது ஒருதலை. அப்பால் வழிச்சொற்களுள் மெய் முதனிலை பெறுவனவெல்லாம் வலியுறுத்தற் கண் க. ச. த. ப, ந. (ய. ஞ) ம, (வ) என்பவற்றுள் ஒரோவொன்று பொருந்தி நிற்பன. ஆகலின் இவ்வாறு உயிர் முதனிலையோடும் சுட்டிய மெய் முதனிலையோடும் விளங்குகின்ற சொற்களே சிதைவுறாதனவும், முத னிலை மெய்யாய் வருந்தகைமை சாலாத டகராதிகளைப் பொருந்தி நிற் பன சிதைவுற்றனவுமாமெனக் கொள்ளுதல் வேண்டும். அன்றியும் ர ட ஆதியன வடசொற்கட்குச் செவ்விதாய் அடிச்சொற்கள் காணக் கூடாத படியும், அவற்றைச் சார்ந்து நிற்கும் கிளைச்சொற்கள் இல்லாமலும் நிலை பெறுமிடத்து, தமிழின்கண் அரற்று ஆதியன தமக்கு அடிச்சொல் தெளி வுறக் காட்டற்குரியனவாய், தம்மைச் சூழ்ந்து பலப்பல சார்புச் சொற்கள் நிற்கப்பெற்றனவாய் இருத்தலால், தமிழ் உருவங்களின்கண் யாம் காண் கின்ற உயிர் முதனிலையே ஆதி நிலையாமெனவும். வடசொற்களில் அவ் வுயிர்கள் கெட்டு நிற்றல் சிதைவின்பாற்பட்டதாமெனவும் உய்த்துணர்க.

### 3. ஸகர முதனிலைப்பேறு

வடமொழியில் பல சொற்கள். அவ்வவற்றின் முதனிலை மெய்க்கு முன்னும் ஒரு ஸகரம் பொருத்தி உச்சரிக்கப்படும். இது ஆங்கிலத்தில் plash எனுஞ் சொல் Splash எனவும் வந்திட்டமையையொத்தது. தமிழர் ஸகரத்தை எளிதிற் சொல்லும் வன்மையுடையோரல்லர். தற்காலம் ஆங்கி லம் கற்றோர் சிலர் தமிழ்ச் சகர முதனிலைச் சொற்களை ஸகரப்பட உச்ச ரித்தலைக் காண்கின்றனமே. அது மரபன்று. சோறு எனுஞ் சொல்லை “ச்சோறு”என உரையாது ஸோறு என்றல் தமிழ் முறையன்றாம். வடமொழி யாளரது பேச்சுறுப்பமைதியும் நாப்பயிற்சியும் ஸகரத்தை எளிதல் பிறப் பித்தமையால் அன்னோர் பன்முறை தகரத்தை ஸகரமாக்குதலோடமை யாது, பல முதனிலை மெய்களின் முன் அதனைச் சேர்த்தியும் உச்சரித்த லில் இன்புற்றனர். உதாகரணம்:

| **தமிழ்** | **வடமொழி** |
|---|---|
| நெய். நேயம் | ஸ்நே ஹ |
| மரி (மடி) | ஸ்ம ற |
| குவி | ஸ்கு |
| தரி. தங்கு | ஸ்தா |
| தலை | ஸ்த ல |

| | |
|---|---|
| வேது | ஸ்வே த |
| பர, பார் | ஸ்ப ச் |

வட மொழியறியாத் தமிழ்ப் பா ராயணர்கட்கு இளைப்பையும் உவட்டலையும் கொடாமைப் பொருட்டு திருமொழிக்கும் பொதுவான அடிகளினின்றும் வடசொற்கள் பரிணமித்து வந்த வரலாற்றை மேல்விரித்துக் காட்டாது விடுகின்றனம். யாம் இயற்றி உலகுக்குபகரிக்க விரும்பும் சொற்பிறப்பகராதி வெளிப்படுங்காலையில், அமிழ்தினுமினிய எந்தமிழின் கண்ணே மக்களின் ஆதிச்சொற்கள் மாறுபடாது காக்கப்பட்டுத் திகழும் திறத்தையும், அவ்வாதிச் சொற்களினின்றுதான் வடமொழியுட்பட ஐரோப்பைய ஆரிய மொழிகள் யாவும் விரிந்து நிற்கும் பெற்றியையும் கண்டு மகிழ்ந்த தமிழன்னையைப் போற்றுக; திருவனந்தைச் சுந்தரம் பிள்ளை செப்பிய மேல்வரும் சிறந்த பாவடிகளால் அவளை வாழ்த்துக:-

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே.

தமிழன்னையும் தமிழ் நாடும் தமிழ் மக்களும் நீடுழி வாழ்க! வாழ்க!!

OOO

# அநுபந்தம்

# A SECONDARY ROOT WITH ITS DERIVATIVES

## ஒரு வழியடிச் சொல்லிற் பிறந்தன

சொற்பிறப்பாராய்ச்சிக் கட்டளைகளை நிச்சயம் பண்ணிய யாம், அக்கட்டளைகளைத் தழுவி, ஒரு தமிழ் அடியினின்றும் பல சொற்கள் பிறந்து வரும் ஆற்றினை உதாகரண முறையாய்த் தருதல் நன்று அன்றோ. ஈண்டு உழ-ல் (உள்) எனும் தலையடியினின்றும் பிறந்த குழை (குழ) எனும் வழியடியைச் சார்ந்து வரும் சொற்களுள் முக்கியமானவற்றைக் காட்டுதும். யாம் இனி வளம்பட இயற்றப் போகின்ற சொற்பிறப்பகராதி மேனாட்டார்க்கும் பயன்படுமாறு ஆங்கிலத்தில் புனையப்பெற்று வடமொழி ஆதிய பல பாஷைகளின் பெருந்தொகையான சொற்கட்கு, எந்தமிழடிகளே தாதுவாய் நிற்கும் பெற்றியை விளக்குவதாகும். அப்பெருமுயற்சிக்கு ஒரு தோற்றுவாயாகும் பொருட்டு முதற்கண் தமிழிலேயே வடமொழிச் சொல் ஒப்புமைகளையும் ஒரு சிறிது காட்டி ஒரு சுருங்கிய சொற்பிறப்பகராதி வெளிப்படுத்துவோம். வடமொழியோடு பிறமொழிகளும் அறிந்தோர், நாம் சுட்டும் வடசொற்களுடன் ஒப்புமை கொண்டனவாய் மேதாவிகள் வரையறுத்திருக்கின்ற கிரேக்க, லத்தீனிய, சர்மனிய, ஆங்கிலச் சொற்களையும் உய்த்துணர்ந்து கொள்க. விரிவான சமஸ்கிருத அகராதிகளெல்லாம் வடசொற்களோடு ஒத்த பிறப்புடைய ஐரோப்பைய சொற்களையும் குறித்துப் போகும் அன்றோ.

ஆயின் யாம் மேல்வரும் பாகத்தில் தமிழ்ச்சொல்லும் வடசொல்லும் உருவத்தால் பொருளால் ஒத்திருக்குமாற்றைக் காட்டுமிடத்து தமிழ்ச்சொல் முந்தியதா வடசொல் முந்தியதா எனும் ஆசங்கைக்கு அறுதியிடுதல் எமது நோக்கமுமன்று; அஃது அரிதில் முடித்தற்கமைந்த ஒரு செய்தியும் அன்று. இரு சொற்கட்கும் அடியான ஆதிச்சொல் எமது மொழியில்

உள்ளதென்ற ஒன்றுமே ஆராய்ந்து அறியத் தக்கதாகும். ஒரு சொல் தனது உற்பத்தித்தானமான ஆதிச்சொல்லைத் தமிழிற் கொண்டதாய். தன்னோடு ஒத்த உருவும் பொருளுமுள்ள பலவேறு சொற்கள் அவ் ஆதிச் சொல்லி னின்று பிறந்தனவாய்த் தன்னைப் புடைசூழ்ந்து நிற்கப்பெற்றதாய் விளங் குமாயின், அது தமிழ்ச் சொல்லேயாம். ஆதிச் சொல்லென யாம் குறியீடு செய்வது: எண்ணங்களுக்கெல்லாம் அடிப்படையாயுள்ள இட சம்பந்தக் கருத்தினையே காட்டுகின்றதும், அதற்கப்பால் இனித் துருவித் துருவிச் சென்று வேறோர் அடி காணக்கூடாததாய் நிற்கின்றதுமான ஓரசை ஈரசைச் சொல்லையே என அறிக. இனி ஒரு சொல் வடமொழியில் தனக்கு ஏற்ற பெற்றியான அடி இல்லாததாய், தன்னைப்போன்ற வேறு பல வியுற்பன்னங் களோடு கூடி நில்லாததாய் விளங்குமாயின், அது வடமொழிக்குரிய சொல் லன்று எனவே அறுதியிடுக. அப்பால் ஒரு சொல்லினுக்கு வடமொழித் தாது உள்ளவிடத்தும் அத்தாது வழியடியாய் மட்டில் நிற்ப. அதற்கப்பால் அம்மொழியில் தலையடி இல்லாது ஒழிய; தமிழில் அதற்குத் தலையடி காணப்படுமாயின். இருமொழிக்கும் பொதுவான சொல்லினுக்குத் தமிழே தலையடியைக் காப்பாற்றிக்கொண்டது என முடிக்க. உற்றுநோக்குவார்க்கு தென்மொழியும் வடமொழியும் ஒரே அடியாய்ப்பிறந்து வந்திருத்தல் புல மாகும். இவ் உண்மையை எமக்கு முன்னும் சிலர் மதிவல்லோர் சொல்லா மற் சொல்லிப் போயினர்.

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு
மிருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ

என்றார் சிவஞான யோகியாரும். அவ்வப் பொருளின் சிறப்பியல்பு பற்றிப் பொருள்கட்கு ஒவ்வொரு பெயரைச் சூட்டிப் பாஷையை அமைக்கும் ஆற்றலை இறைவனே மானுடருக்குக் கொடுத்துள்ளமையானும், வட தென்மொழிகள் ஆதி மானுடர் தெரிந்தேற்படுத்திய ஒரே தலையடிச் சொற் கூட்டத்தினின்று பிறந்தமையானும் "இருமொழிக்கங் கண்ணுதலார் முதற்குரவர்" என யோகியார் தம் வழிபடு தெய்வத்தின்மேல் வைத்துக் கூறிய கூற்று ஒக்கும். அவ் இருமொழிக்கும் பிறப்பிடமான தலையடிகளை உருப்பிறழாது காத்து வைத்திருக்கின்ற அருங்கலச்செப்பாய்ப் பிறங்குவது எந்தமிழே எனக்கண்டு கழிபேருவகை அடைகின்றனம். பின்வரும்

மாதிரிச் சொற்பாகத்தைக் கருத்தாய்ப் படிப்போர் தாமும் இவ் உவகையில் ஈடுபடாதிரார்.

இம்மாதிரிப் பாகத்தை அச்சிடுகின்ற இயந்திரசாலையில் கிரந்த அச்செழுத்துக்கள் இல்லாமையால் ஒரு குறை ஏற்பட்டது. அதனை ஒருவாறு நீக்கும்பொருட்டு பின்வருஞ் சூழ்ச்சியைக் கையாடுகின்றனம். எங்ஙனமெனில், தமிழில் உபயோகிக்கப்படுகின்ற இரண்டொரு கிரந்த லிபிகளை மட்டும வழங்கிக் கொண்டு, வடசொற் சிறப்பொலிகளைத் தமிழிலேயே மேல்வருமாறு குறிக்கின்றாம்:-

| **கிரந்தம்** | | **தமிழ்** | **கிரந்தம்** | | **தமிழ்** |
|---|---|---|---|---|---|
| 1 வது | ககரம். | க | 1 வது | ஜகரம் | ஜ |
| 2 வது | ” | க்ஹ | 2 வது | ” | ஜ்ஹ |
| 3 வது | ” | ங்க | 1 வது | டகரம் | ற்ற |
| 4 வது | ” | ங்க்ஹ | 2வது | ” | ற்ற்ஹ |
| 1 வது | சகரம் | ச | 3 வது | ” | ட |
| 2 வது | ” | ச்ஹ | 4 வது | ” | ட்ஹ |
| 1 வது | தகரம் | த | 1 வது | பகரம் | ப |
| 2 வது | ” | த்ஹ | 2 வது | ” | ப்ஹ |
| 3 வது | ” | ந்த | 3 வது | ” | ம்ப |
| 4 வது | ” | ந்த்ஹ | 4 வது | ” | ம்ப்ஹ |

ஏனைய பொது லிபிகளே

## வேறு குறியீடுகள்

| | |
|---|---|
| வி. = வினை | ஒப். = ஒப்புநோக்கத்தகுஞ்சொல் |
| த. வி. =தன்வினை | வட. = வடமொழி |
| பி. வி. = பிறவினை | தெலு. = தெலுங்கு |
| பெ. = பெயர் | கன். = கன்னடம் |
| உரி. = உரிச்சொல் | மலை. = மலையாளம் |
| வினையு. = வினையுரிச்சொல் | துளு. = துளுவம் |

மேற்கோள் தந்த நூற்பெயர்களைச் சென்னைச் சர்வகலாசாலை அகராதியினுட் காண்க. எம் மேற்கோள்கள் பெரும்பான்மை ஆங்குக் கண்டனவேயாம்.

## குழ எனும் வழியடிச்சொல்

### குழை <குழ <உழ–ல் <உள்

குழை த.வி (உள் நோக்கி வரல். உழன்றுவரல்) 1. வளைதல் "திண் சிலை குழைய" (சூளாம. அரசி 319) 2. வாடுதல் (குறள் 90) 3. துவளல் "குழைந்த நுண்ணிடை" (கம்பரா. சித்திர 9) 4. (திரளும் பதமாதல்) இளகுதல் "தொண்டரினங் குழையாத் தொழும்" (பதினொரு பட்டினத் திருவே. 28) 5. நெருங்கி உறவாடல் 6. களைத்தல், தளர்தல் "கோதைசூழ் கொம்பிற் குழைந்து" (பு. வெ. 12, பெண்பாற் 14) 7. வருந்துதல் 8. (பி.வி.) உருண்டு திரளச் செய்தல் "கருனையாற் குழைக்கங்கைகள்" (சீவக. 257) குழை எனும் இச்சொல் உழ-ல் எனும் தலையடியினின்று ககர முதனிலை பெற்று வருவதோர் வழியடி. ஆதியில் குழ என நின்றதாதல் வேண்டும். என்னை? மலையாளத்தில் எமது "பனை" பன என "இலை" இல என நிற்றல் போல. உழ-ல் எனும் தலையடி ககர முதனிலைப் பேற்றால் குழை ஆனவாறு. சகரமாதிய பிற முதனிலைகளும் பெற்று வழியடிகளாகும். எங்ஙனம்? குழை. குலவு. குலாவு. குடை. கோடு. சுழல். சுலவு. சுருள்; துளை. துழாவு. துருவு. திரள். திருமு. திரி; புழை. புழல். புரள்; நுழை. நோண்டு; முழை. முடை. மூழ்கு என வரும். ஒப். வட. ச க்ற: ஈண்டு "குழ" க்ற என நின்று முதனிலை :பிரட்டலால் ச க்ற (=க-க்ற) என்றாயிற்று.

**களை** த. வி. (வாடித் தளர்தல்) 1. இளகுதல் (பிங்.) 2. இளைப்புறுதல். பெயர்ச்சொல்லுருவமும் இது. 3. (பி. வி.) கூட்டி முடித்தல் "குடுமி களைந் தானெங்கோ" (பு. வெ. 9, 21) ஈண்டு குகரம் ககரமாயிற்று.

**குழ–ம்பு**. த. வி. (உள்நோக்கி வரல்) 1. உழன்று வரல் 2. கலங்குதல் ஒப். கலங்கு. வட. க ல ஹ

**குழ–ம்பு**

**குழை**. பெ. (கலக்கிச் சேர்த்தது) 1. நீர்த்தன்மையான காய்கறி, 2. சேறு.

**கூ–ம்பு**. பெ. (முன்னது) சேறு ஈண்டு இடைகெட்டுத் தலை நீண்டது.

**குழை–யல்**. பெ. (கலங்கித் திரளும் பான்மை) குழைந்த சாறு.

**குழை—வு,** பெ. (முன்னது) 1. நெகிழ்ச்சி, 2. இரக்கம்.

**கொழு**. த. வி. (குழம்பாயிருத்தல்) 1. இறுகியதன்மையாதல், 2. உடல் தடித்தல், 3. செழித்தல் (நாலடி. 96).

**கொழு—ப்பு**. (முன்னது) 1. நிணம் (பிங்) 2. குழம்பாயிருக்கை, 3. செழிப்பு, 4. புஷ்டி (பெருங். மகத. 4, 42) ஒப். கொழுங்குருதி (மலை.) தெலு கொ வ் வு, கன். கொ ம்ப் ம்பு, துளு கொ ம் ம ஒப். கொழுந்து, குழந்தை, கொம்மை.

**கோழை**, பெ (முன்னது) 1. சளி (தேவா. 263, 1) 2. உமிழ்நீர், 3. இளக்கம், 4. குறைவுபடுகை "கோழைபடாது" (கொன்றைவே.) 5. மனத் திடமின்மை, கூச்சம் 6. சிறுபிள்ளை (விநாயக பு. 72. 132) ஒப். வட. கோ ச.

**குளம்**1

**குடம்** 1 பெ. (முன்னது) சர்க்கரை, கருப்புக்கட்டி. வட. ங்கு ல.

**குழு—வு**

**குழு—மு** த.வி. (வளைந்து ஒன்று சேர்தல்) 1. கூடுதல். "மள்ளர் குழீ இயவிழவினானும்" (குறுந் 31) 2. கலத்தல் "கொன்றையுந் துளவமுங் குழு மத்தொடுத்த" (சிலப். உரைப். பின் செய். 10) ஒப். கூள். கூடு. வட. கு ல்.

**குழு.**

**குழு—உ.**

**குழா—அல்,**

**குழா—ம்**, பெ. (வளைந்து ஒன்று கூடியது) 1. மக்கள் கூட்டம், 2, மந்தை, 3. தொகுதி. வட. கு ல.

**குழு-மல்,**

**குழு—வல்**, பெ. (வளைந்து திரளல்) 1. கூடுதல், 2. கூட்டம்.

**குள—கம்**, பெ. (குழு) பல பாட்டுக்கள் ஒரே வினைகொள்ளும் அமைதி. இது குழவடியாய்ப் பிறந்த வடசொல்: கு ல க.

**குழை**, பெ. வளைந்த பொருளின் உட்புறம்) 1. குழி, துளை 2. காது 3. குழல் 4. சங்கு. இச்சொல் துளை, புழை, வளை, குழி என்பனவற்றை ஒத்தது. மேல்வருவன காண்க.

**குழி**, பெ. (குழையின் வேறொரு உருவம்) 1. வளைந்து ஆழ்ந்தது. பள்ளம் 2. நீர் நிலை (திவா.) 3. வயிறு (அக. நி.) 4. பாத்தி 5. ஒரு நிலவளவு. இது குவிதல் சொல்லோடும் இனங்கொண்டது. ஒப். வட. கு க்ஷி. கோ ஶ

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்

*குழி*. த. வி. (வளைந்து ஆழ்ந்திருத்தல்) 1. பள்ளமாயிருத்தல் "குழிந் தாழ்ந்தகண்" (நாலடி. 45) 2. (பி. வி.) உள்வளைத்துத் தோண்டுதல் "குழித் துழி நிற்பது நீர்" (நான்மணி. 30).

*குளி*. த.வி. (ஊடறுத்தல்) 1. துளைத்துச் செல்லல் "கூர்ங்கணை குளிப்ப" (பு.வெ. 10. சிறப்பிற். 10 கொளு) 2. உட்புகுதல் (புறநா. 6, 12) 3. மறைதல் (கலித். 98. 23) 4. தோல்வியுறல் (சீவக. 2141) 5. நீராடுதல் (பரிபா. 6, 103) 6. (பிவி.) சிப்பி ஆதியன மூழ்கியெடுத்தல்.

*குடி*. பி.வி. (உட்செலுத்துதல்) 1. பானம்பண்ணுதல் 2. உட்கொள்ளு தல். கன்னட மலையாள அகராதி ஆசிரியர்கள் இச்சொல்லை குடு குடு எனும் ஒலிக்குறிப்பினின்று தோற்றுவிப்பர். அதைக்காட்டில் "கொள்" கொடு என்றாகியமைபோல் "குளி" குடி என்றாகியமையே அதிகப் பொருத்த முள்ளதென்க. தெலுங்கில் கொள்ளுதல் சொல்லின் திரிபாகிய க்றோ லு குடித்தல் அர்த்தத்தில் வருதலையுங் காண்க. ஒப். கன். குற்று=குடித்தல். சோறு ஆதியன உட்கொள்ளல்.

*குயி–ல்*. பெ. (குழியின் மரூஉ) உள்வளைந்ததன் உட்புறம். துளை (பிங்.) ஈண்டு ழகர வியஞ்சனம் யகரமாயிற்று. ஒப். குழி. குழை.

*குயி–ல்*. பி.வி. (உள்வளைத்துத் தோண்டுதல், வளைத்தல்) 1. துளைத்தல் "வரைகுயின்றன்ன" (அகநா 93. 12) 2. பின்னுதல் 3. நெய்தல் "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" (தொல் சொல் 74 உரை) "குயிலுதல்", சார்புபற்றி, யாதொன்றைச் செய்தலுமாம் (பிங்.), உழுதலையே முதற்கண் குறித்த "தொழில்" பின் எவ்வெவ் முயற்சிக்கும் பெயரானதுபோல.

*குழி–வு*. பெ. (குழி) பள்ளமாயிருத்தல்

*குள–ம்*, 2 பெ. (குழிந்தது) நீர்நிலை. குழி காண்க. வட. கூ. ல. 2 (வளைந்தது) நெற்றி "திருக்குள முளைத்த கட்டாமரை" (கல்லா. 31, 9)

*குழி–சி*. பெ. (வளைந்தாழ்ந்தது) 1. பானை "சோறடு குழிசி" (பெரும் பாண். 366, 2. திரண்டது) சக்கரத்தின் குடம் (சீவக 2229).

*குழி–மி*. பெ. (குழாய்த்தன்மையுள்ளது) 1. மதகு 2. பாத்திரத்தின் மூக்கு.

*குழி–யல்*. பெ. (குழியுள்ளது) ஒருவகைப் பாத்திரம்

**குழு—ம்பு**. பெ. (முன்னது) குழி "ஆழ்ந்த குழும்பிற்றிருமணிகிளர" (மதுரைக் 273).

**குழ—ல்** 1.

**குழா—ய்**. பெ. (குழிந்தது) நெடுந்துவாரங் கொண்ட திரள் வடிவப் பொருள். குளிகை காண்க.

**குழ—ல்** 2. பெ. (குழல் விசேடம்) ஒரு வாத்தியக்கருவி.

**குர—ல்** 1. பெ. (குழல் போலும் உறுப்பு) தொண்டை "மணிக்குரல் அறுத்து" (குறுந் 263) மலையாளத்தில் குரல் குறள் இரண்டும் தொண்டைப் பெயர்கள். வட ங்க ல= தொண்டை. ங்க்று= விழுங்குதல். ங்க்றீ வா = கழுத்து.

**களா—ம்**, பெ. (குழலின் திரிபு) கண்டம்."பாடுகளமகளிரும்" (சிலப் 6. 157) ஒப். கழுத்து, கண்டம் வட ங்க ல, ங்க்ஹா ற்ற.

**குர—ல்** 2. பெ. (குழலாதியவற்றிற் பிறப்பது) 1. இசையொலி "இடி குரன் முரசு" (கம்பரா. எழுச் 1) 2. பேச்சொலி "சிறு குரல் கேட்டு" (நளவெண். சுயம்வ. 4) 3. (ஆகுபெயராய்) பேச்சுக் குமாம் "யாவருந் தண் குரல் கேட்ப" (கலித். 142. 9) ஒப். வட. ங்கி ர்=குரல்.

**குர—வை** பெ. (முன்னது) 1. பெண்களின் கூக்குரல், மகிழ்ச்சியொலி 2. பெண்கள் கூத்து வகை. வட. கு ர வ=குழறும் ஒலி. இதனை கு+ரவ எனப் பிரித்தல் வேண்டப்படாது.

**குரை**.

**குலை** த. வி (முன்னது) 1. குழறி ஆரவாரிக்கை (பதிற்றுப். 84, 20) 2. நாயின் குழறுகை. வட. கு ர்.

**குக்—கன்**, பெ. (குரைப்பது) நாய். இது குக்குர எனும் வடசொல்லின் தற்பவம். அவ் வடசொல்லேயும் குர (குரை) எனும் சொல்லை இரட்டித் தலால் குரகுர > குர்க்குர > குக்குர என வந்ததுபோலும். வடசொல்லை இவ்வாறு குரை எனும் அடியினின்றன்றி கு க் (=கொள்) எனும் தாதுவி னின்று பிறப்பித்தல் சிறப்பன்று.

**குக்கு—டம்**. பெ. (குழறுவது) கோழி வட. கு க் குற்ற முந்திய சொல் காண்க. ஒப். கோழி.

**குலை**. த. வி. (குரைத்தலின் மரூஉ)

*குழ—று*.

*குள—று* த. வி. (குழலால் ஒலி செய்தல்) குரலுயர்த்துக் கதறல் "கூகை நன்பகற்குழற" (பட்டினப். 268) வட ங்க்ரூ=அழைத்தல். ங்க ர்ஜ்= ஒலித்தல்.

*கூறு*. பி.வி.(குழறுதலின் மரூஉ) 1. சொல்லல் 2. பிரசித்தம் பண்ணல்.

*கழ—று*. பி. வி. (குழறுதலின் மரூஉ) 1. சொல்லுதல் 2. அவமதித்தல் (சூளா. முத். 16) 2. கோபித்தல் "கடிந்தது மிலையாய் நீ கழறிய வந்ததை" (கலித். 76, 13) 3. (த.வி.) உறுதி சொல்லுதல் (நாலடி. 253) 4. இடித்தல் "கடுஞ்சிலை கழறி" (பதிற்றுப். 81. 40) வட. கல்.

*கோழி*. பெ. (குழறுவது) குக்குடம். ஒப். தெலு. கோடி.

*குட—ல்*.

*குட—ர்*. பெ. (குழல் விசேடம்) இரைப்பையைச் சார்ந்த குழாய் ஈண்டு ழகர வியஞ்சனம் பிறப்பொத்த டகரமாயிற்று.

*குட—லை*. பெ. (முன்னது) 1. குழல் போலும் நெடிய கூடை 2. கதிர்ப் பொத்தி குடலினுக்கும் பெயராம். ஒப். புடலை

*குர—ல்* 3.

*கொர—லி*. பெ. (குழல் போல்வது) கதிர் "வரகினிருங்குரல்" (மதுரை. 272).

*குழ—ல்*. த.வி. (உழலுதல்) சுருளுதல் "கடைகுழன்ற கருங் குழல்கள்" (சிந்தா. 164).

*குழ—ல்* 3. பெ. (சுருளுவது சுருட்டி முடிக்கப்படுவது) பெண் கூந்தல் "குழலுடைச்சிகழிகை" (சிந்தா. 1092).

*கூழை*. பெ. (குழலின் வேறொரு உருவம்) 1. பெண்டிர் தலைமயிர் (தொல். பெ. 262) 2. (சார்புபற்றி) மயிற்றோகை, இறகு 3. வால்

*குரல்* 4.

*கூர—ல்*. பெ. (குழற்சொல்லின் வேறு இரு உருவங்கள்) பெண் கூந்தல் "நல்லார் குரல் நாற்றம்" (கலித் 88. 1).

## குட <குழ <உழ—ல் <உள்

*குட*. உரி (உள்நோக்கிய) வளைந்த திருமுரு. 229 உரையின் கண் "குடவென்பது தடவென்பது போல வளைவையுணர்த்துவதோர் உரிச்

சொல்'' என்பர் நச்சினார்க்கினியர். இது குழவின் வேறோர் உருவம். ஈண்டு ழகரம் பிறப்பொத்த டகரமாயிற்று. வட குற்ற் = வளைதல். இத்தாது நமது உழ-ல் எனும் தலையடியினின்றே பிறந்திருத்தல் வேண்டும். வட மொழியில் இதன் வியுற்பன்னங்கள் பலப்பலவுள.

**குட—வு**, த.வி. (முன்னது) வளைதல் ஒப். குடங்கு, கொடுகு, குறங்கு, குறண்டு, குறழ், குறாவு, குரங்கு.

**குட—ம் 1**, (முன்னது) வளைந்தாடும் கூத்து ஒப். குடந்தம்.

**குட—வு**, பெ. (முன்னது) வளைவு.

**குட—ம்** 2,

**குட—கம்**,

**குட—க்கு**,

**குட—கு**. பெ. (முன்னது) பொழுது வளைந்துபோம் திசை, மேற்கு "குடா அது தொன்று முதிர் பெளவத்தின் குடக்கும்'' (புற. நா. 6. 4) தமிழ கத்தின் மேற்கு எல்லை குடகம் எனப்படும். ஒப். குணம் = கிழக்கு.

கொங்-கணம். (குடகு+அணவு) மேற்கு நாடு. மலை. கொங்கு=குடகு. குடகு+அணம். கொங்கணமாயிற்று.

**கோடை**. பெ. (குடகம்) மேற்கிலெழுங்காற்று. "குடகம்'' நீட்டலால் கோடையென்றாயிற்று.

**குட—ங்கு**, த.வி. (உள்நோக்குதல்) வளைதல். ஒப். குடவு.

**குட—க்கம்**,

**குட—ந்தை**, பெ. (முன்னது) வளைவு "குடந்தையஞ்செவிய கோட் டெலி'' (புற. நா. 32,5).

**குட—ந்தம்**, பெ. (வளைத்தல்) 1. உடலை வளைத்தல் "குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி'' (திருமுரு. 229) ஒப். குடம் 1, குடை, கொட்டி, குணலை, கூத்து. இவ் உருவங்கள் வட்டமாய் ஆடிவருமோர் நடனத் தைக் குறிக்கும் 2. மட்கலம் (பிங்) ஒப். குடம் 3.

**கோடி—யர்**. (வளைந்து ஆடுவோர்) கூத்தர் "முதுவாய்க்கோடியர் முழவில்'' (குறுந். 78, 2) ஒப். குடந்தம்.

**குட—ம்** 3, பெ. (வளைந்தது, திரண்டது) 1. கலயம். ஒப். குடங்கர், குண்டு. குடுகு. குடிகை. வட. குற் ற. குண்ட 2. உண்டை 3. பசு (பிங்)

இவ்வர்த்தம் (வளைந்த) கொம்புடைமையினாற் போலும். வட ங்கோ மலையாளத்தில் கொம்பி, கொம்பிச்சி எனப் பசுவுக்கு பெயரிருத்தலையும் நோக்குக. இச்சொல் சுமேரியத்தில் ங்குட், ங்கு ற் என நிற்கும். இதற்குச் சித்திரலிபி கொம்பு மிக நீண்ட ஓர் எருதாம். "குடஞ்சுட்டு" (கலித். 109.3) என்பதினின்று பசுவினுக்குக் குடம் எனும் பெயர் வந்ததென்றல் பொருந் தாது. குடஞ்சுட்டு= "இன்னதனைக் குடம்பால் போதுமென்று கருதப்படும் பசு" என்பதன்று. குடமெனும் சொல்லாற் சுட்டப்படுவதே எனக்கொள்க.

**கோ, பெ.** (முன்னது) பசு. இது வட சொல்லின் தற்சமம் போலும். அவ் வடசொல்லேயும் எமது குடச்சொல்லோடு ஒற்றுமை பூண்டிருத் தலை நோக்குக. "குடம்" ங்கு ட் என ங்கு எனச் சுமேரியத்திலும் குறுகி நிற் கும். "குடம்" தான் வடமொழியில் ங்கோ என வந்ததாகக் கொள்க. கோ = அரசன். கோலுதலின் கீழ்க்காண்க.

**குட—வன்.** (திரண்டது) ஒற்றை விதைப் பனங்காய்.

**குட—ம்பை.** பெ. (வளைந்து திரண்டது) 1. கூடு "குடம்பை நூறெற்றி" (கல்லா கணப 26) 2. முட்டை "குடம்பை தனித்தொழிய" (குறள் 338) ஒப். கூடு. இதனோடு முட்டையையும் ஒப்பு நோக்குக. முட்டை <முட்டி <மூடு.

**குர—ம்பை.** பெ. (முன்னது) 1. கூடு 2. குடில் "இலைவேய் குரம்பை" (மதுரைக் 310) 3. (ஒப்புமை பற்றி) ஆன்மாவின் கூடாகிய உடல் "பொருந் திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டா" (தேவா. 488).

**குட—ங்கர்.** பெ. (குடம்பைச் சொல்லின் வேறோர் உருவம்) 1. குடம் "குடங்கா கொணர்ந்திடா........நொண்டு கொண்டனர்" (கந்தபு. தேவகி. 24) வட குற்றங்க குற்றங்ங்க க= கூரை. 2. குடில் "குடங்கருட் பாம்பொடு" (குறன் 890).

**குடா.** பெ. (வளைந்தது) 1. வளைவு "குடாவடிக் குருளை" (மலை படு 50) இங்கு குடா+அடி = வளைந்த பாதம் 2. வளைந்தகரை. கோடி காண்க. ஒப். வட. கூல=கரை.

**குடா—ப்பு.** பெ. (வளைந்து திரண்டது) கூடு.

**குடா—ரம்.** பெ. (வளைந்து திரண்டது) 1. தயிர் கடைதாழி. குடைதல் காண்க. 2. கோடாலி. ஒப். கொத்துதல், கோதுதல். இது வடசொற் போலும். கு ற்ற ர.

### குடை <குழை <குழ <உழ–ல் <உள்

**குடை**, பி.வி. (வட்டமாய்க் குளித்தல், துளைத்தல்) 1. கடைதல் ஒப். கொழுது, கொத்து, கொந்து, கோது, இவையெல்லாம் இக்கருத்துள்ளனவே. 2. மூழ்குதல் "புனல் குடைந்தாடினோம்" (சிலப். 24 பாட்டுமடை) ஒப். குளி. வட. குட்=மூழ்குதல். பெ.குடை, ஒரு கூத்து. ஒப். குடந்தம்.

**குட–வு**,

**குடை–வு** பெ. (துளைக்கப்பட்டது) குகை, பிலம்.

**குடா–ரம்**

**குடா–ரி**, பெ. (குடையும் கருவி) கொந்தாலி, கோடாலி "தறுகட் குடாரமும்" (சூளா. சீய. 72) "குடாஅரிக் கோவலர்" (தொல். பொரு. 329 உரை) இவ்வுருவங்கள் தமிழடியாய்ப் பிறந்த வடசொற்கள். கு ற்ஹா ர.

### கொழு–து <குடை <குழை <குழ <உழ–ல் <உள்

**கொழு–து**. (வட்டமாய்க் குளித்தல், துளைத்தல்) 1. குடைதல் "கொழுதிவண்டிமிருந்தார்ன்" (நைட. சுயம்வ. 155) 2. கிழித்தல் "பௌவ நீர்ச்சாய்க் கொழுதி" (கலித். 76. 7).

**கொழு**. பெ. (துளைப்பது) 1. ஏர்க்காறு 2. துளையிடும் பெரியவூசி "கொழுச் சென்றவழித் துன்றூசி யினிது சொல்லும்" (தொல் பாயிர உரை).

**கோது**, பி.வி. (உட்செலுத்திப் பிரித்தல்) 1. தோண்டுதல் 2. மயிர்ச் சிக் கெடுத்தல் (பெருந்தொ. 1323) 3. இறகைக் குடைந்து நேராக்குதல் (தேவா. 1157, 6) 4. சிறிது சிறிதாய்க் குடைந்தெடுத்தல் 5. ஓலை வாருதல்.

**கோது**, பெ. (உட்துளைத்து எடுத்து வெறிதாயது) 1. குற்றம் (சீவக. 233) ஒப். பிழை <புழை <பொய் <பொள்-எல். 2. பழத்தின் உள்ளீடற்ற ஓடு, தோல், சக்கை. 3. பூ முதலியவற்றின் நரம்பு. வட.கோ. த்ஹ 4. பய னின்மை "கோதுசெய்குணக்கோதினுட் கோதனான்" (சீவக. 240) 5. நெறி தவறுகை.

**கோத்–தை**,

**கோத–ம்**, பெ. (முன்னது) 1. பழுது (பரிபா. பக். 175. 5) 2. பொல் லாங்கு (சீவக. 1583) ஒப். சூத்தை. கொத்து. வட. கோ த்ஹ.

**கோதை** 1. பெ. (முன்னது) பூதம் (திருப்பு. 137).

**கொத்து**, பி.வி. (உட்செலுத்திக் கிளைதல்) 1. கிண்டுதல் 2. குத்தியெடுத்தல் 3. வெட்டுதல் வட. குற்ற்

**கொத்து**, பெ. (முன்னது) 1. கிண்டுதல் 2. கொத்துவேலை 3. சிறுமண்வெட்டி 4. குமைந்தெடுத்த அளக்குங்கருவி. குலை எனும் அர்த்தத்தில் குவிதலின்கீழ்க் காண்க.

**கொத்–தை**, பெ. (உட்துளைத்து எடுக்கப்பட்டது) 1. பழுதானது 2. ஈனம் 3. அறைகுறை 4. அஞ்ஞானம் 5. குருடன் (தேவா. 1040, 2) ஒப். சொத்தை வட. கோ த்ஹ.

**குத்–து**, பி.வி. (உட்செலுத்தி ஓட்டையாக்கல்) 1. துளையிடல் 2. கூரியனவற்றால் பீறுதல் 3. தைத்தல் "பூம்புனனுரையும் புரையக்குத்தி" (பெருங். வத்தவ. 12, 48) 4. கிண்டுதல் (திருவிளை. விடை 10) 5. இடித்தல் 6. கொத்தித் தின்னுதல் (பொருந 222) 7. ஊன்றுதல் (முல்லைப் 41) 8. தடைசெய்தல். ஒப். குற்று.

**குற்று**. பி.வி. (முன்னது) 1. ஊடுருவல் 2. இடித்தல் 3. தாக்குதல் (கந்தபு. சிங்கமு. 139).

**கொட்டு**. பி.வி. (முன்னது) 1. குத்துதல் 2. இடித்தல் 3. அடித்தல் 4. குழிந்தவிடத்திற் சொரிதல் 5. அப்புதல் (திருமுரு. 35) 6. உதிர்த்தல்.

**குள–வி**. பெ. (துளைப்பது) 1. கொட்டுமியல்புள்ள ஈ வகை 2. காட்டு மல்லிகை (குறிஞ்சிப். 76) 3. மலை மல்லிகை புறநா 168, 12)

**குட்டு**, பி.வி (கொட்டுதல்) கைமுட்டியால் தலையில் இடித்தல் ஒப். வட குற்ற்.

**கோ**, பி.வி. (குத்திப் பிணைத்தல்) 1. நூலைப் புகுத்தி இணைத்தல் "கோத்தணிந்த வெற்பு மணி" (பெரியபு மானக்கஞ் 22) 2. கைபிணைத்தல் (திவ். திருவாய். 6, 4, 1) 3. ஒன்று சேர்த்தல் 4. ஒழுங்குபடுத்தல் 5. புனைந்துரைத்தல் 6. உடுத்துதல் (தேவா. 509, 2) 7. எதிர்த்தல் (சீவக. 1290) கவிந்து கொள்ளுதல் எனும் அர்த்தத்தில் குவிதலின்கீழ்க் காண்க. வட. ங்க்ற த்ஹ.

**கோப்பு**, பெ. (முன்னது) 1. குத்தியிணைக்கை 2. ஒழுங்கு (விநாயகபு. 62, 15) 3. அமைப்பழகு (திருக்கோ. 161) 4. உபாயம் (விறலிவிடு. 421) 5. (கோத்தெடுக்குஞ்) சுமை (நாலடி. 328) 6. படித்தரம் 7. காய்கறிகள். கவிவு எனும் அர்த்தத்தில் குவிதலின் கீழ்க் காண்க.

**கோ—தை** 2, பெ. (கோத்தது) 1. பூமாலை (பெருங். உஞ்சைக். 48, 77) 2. முத்தாரம் (பதிற்றுப். 88, 31) 3. ஒழுங்கு (பிங்) 4. (கோதி முடிப்பது) பெண்கள் தலைமயிர் 5. (ஆகுபெயராய்) பெண் 6. (?) சேரன். காற்று எனும் அர்த்தத்தில் ஊதை (ஊது)யின்கீழ்க் காண்க.

**குடி <குட <குழ <உழ—ல் <உள்**

**குடி**, பெ. (வளைந்தது) புருவம். இப்பிரயோகத்தில் இது வடசொல். ஒப். சிலை=வில்லு. சில்லின் கம்பு சிலைக்கம்பாதலை நோக்குக. இது சுலவு தலினின்று வருவது சுலவு=குலவு=குழை.

**குடி 2,**

**குடில்**

**கொட்—டில்**, பெ. (கவிந்து நிற்பது) சிறு வீடு. ஒப். கூரை. கோட்டம். வட. கு ற்றி, குற்ற ங் ங்க க. கு ற்று ங் ங்க க. கு ற்றீ ர.

**குடி 3**. பெ. (குடிக்கொள்வோர்) குடும்பம். இது ஆகுபெயர் "ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்" (புறநா. 183. 5) ஒப். குடி 2. வட. கு ல. ங்கோ த்ற. இப் பிந்திய சொல் தமிழ்க் கோட்டத்தையொத்தது. வடமொழியாளர் இதனை ங்கோ + த்ற எனப் பசுச் சம்பந்தமாய்ப் பிரிப்பது அத்துணைச் சிறப்பன்று.

**குடி—கை,**

**குடி—சல்,**

**குடி—சை,**

**குடி—ஞை** 1, பெ. (கவிந்து நிற்பது) 1. கோவில். "முதியாள் குடிகையும்" (மணி. 24, 161) 2. வீடு "உறையுட்குடிகையும்" (மணி. 6, 63) "தூசக் குடிஞையும்" (பெருங்க. இலா, 12, 43) வட. கு ற்றி கா.

**குடி—கை,** பெ. (குவிந்தது) குடுகு. வட. கு ண் டி கா.

**குடி—ஞை** 2, பெ. (வளைந்த உறுப்பையுடையது அன்றேல் வளைந்து செல்வது) 1. கோட்டான் "குடிஞையிரட்டு நெடுமலை யடுக்கத்து" (மலைபடு 141) 2. நதி "கொண் மூவரவொத்துளதக் குடிஞை" (கந்தபு காளிந். 3) ஒப். கோட்டான்.

**குடி—லம்,**

**குடி—லை,** பெ. (வளைவு, புரிபோன்றது) இவை வடசொல். தமிழடியாய்ப் பிறந்தன.

**குளி-கை,** பெ. (குவிந்து திரண்டது) மாத்திரை. இது வடசொல். டகர வியஞ்சனம் ளகரமாயிற்று.

## குடு-கு <குட <குழ <உழ-ல் <உள்

**குடு-கு,**

**குடுக்-கை,** பெ. (வளைந்து திரண்டது) ஓட்டினாலான கலயம். குடிகை காண்க.

**குடு-மி,** பெ. (வளைந்தது, திரண்டது) 1. கிரீடம் "குடுமிகொண்ட மண்ணுமங்கலம்" (தொல். பொ, 68) 2. கோழிச்சூடு, கொண்டை 3. மலையுச்சி "வடவரைக்குடுமி" (கம்பரா. திருவவ. 8) ஒப். கோடு 4. தலையுச்சி "குடுமிக் கூந்தலில் நறு நெய் பெய்து" (இறை. 1. உரை) வட. கி ரீ ட, கூ ற்ற. கு ற்றா ர , கு ற்றீர. சூ டா. சோ ட. பிந்திய வடசொற்களில் ககரம் சகரமானமை ஒலித்திரிபு.

**குடை,** பெ. (குவிந்தது, உட்கோலியது) 1. கவிகை 2. தலை 3. உண்கலம் "இரும்பனங்குடை" (புறநா. 177, 16) 4. ஓர் கூத்து. ஒப். குடந்தம், குடம்).

**குட்-டை,** பெ. (வளைந்தது, கவிந்தது) 1. குளம் 2. சிறுச் சிறுப் பொள்ளல் கொண்டது 3. குறு காண்க.

குண்டு. பெ. (வளைந்து திரண்டது. குவிந்தது) 1. வளையம் 2. உண்டை 3. குளம் "குண்டு நீரிலஞ்சி" (மணி. 8, 8) வட. கு ண் ட=குளம், கலயம். கு ண் ட ல=காதுக் கம்பி

## கொடு <குட <குழ <உழ-ல் <உள்

**கொடு,**

**கொடு-ம்,** உரி. (வளைந்த) கோணலான, மடிந்த. கொடு-மை கொடுங்-கை, கொடு-மரம், கொடு-வரி, கொறுக்-காய் (கொடுக் -காய்) எனும் சமாசங்களிற் காண்க. கொடு எனஞ்சொல் குட வின் விகாரமாம். வட கு ற்ற்

**கொடி,** பெ. (வளைவது, அசைவது) 1. வல்லி "நுடங்கு கொடி மருங்கின்" (பெருங். உஞ். 41, 80) 2. துவசம் "நுடங்குங் கொடிமாடமூதூர்" (சிந்தா. கனக. 310) ஒப். வளை (உழல்) வளைதலினின்றும் வளர்ந்து படர்வதாகிய "கொடி" வட. வ ல் லீச் சொல்லினுக்கு உற்பத்தி எமது வளை எனும் அடியே. குடங்குவது கொடி. வளைவது வ ல் லீ எனக்

காண்க. 3. நீளம் "பழனவெதிரின் கொடிப்பிடிணயலளே" (ஐங்கு 91). 4. வரிசை "கருங்கொடிப்புருவம்" (சிந்தா 658).

**கொடி**. பெ. (மீட்டு வளைந் திசை) கிழக்கு "கொடிக் கொண்ட கோடையால்" (கலித். 150, 15) குடக்கு எனும் மேற்குப் பொருளுள்ள சொல்லினை விகற்பித்து இச்சொல் எழுந்தது. ஒப். குணக்கு = கிழக்கு கோடையும் காண்க.

**கொடி–ச்சி**.

**கொடி–று**.

**கொறு–டு**.

**குற–டு** 1, பெ. (வளைந்தது. இடுக்குவது) இடுக்கி அலகு "கொடிறும் பேதையுங் கொண்டது விடாது" (திருவா. 4, 63) கொடிறு எனுஞ் சொல்லே ஒலிமாற்றால் கொறுடு, குறடு என்றாயிற்று.

**கொடி–ஞ்சி**. பெ. (வள்ளந்தது. வட்டமானது) பூவடிவான ஓர் தேருறுப்பு.

**கொடி–ஞ்சில்**. பெ. (உட்கவிந்தது) மரத்தோண்டி.

**கொடு–கு**. த.வி. (வளைதல்) ஒடுங்கிக் குவிதல் "கொடுகு வெஞ் சிலை வடுகவேடுவர்" (தேவா. 918. 1) இங்கு கொடுகுதல் வளைதலையும் தறுகண்மையையும் ஒருங்கு குறிப்பதாகலாம். ஒப். ஒடுங்கு, ஒதுங்கு, ஒருவு

**கொடு–க்கி**,

**கொளு–க்கி**,

**கொக்–கி**,

**கொக்–கை**, பெ. (முன்னது) 1. கொளுவியிழுப்பது 2. பூட்டுவது. ஒப். குறங்கு = கொளுக்கி.

**கொடு–க்கு**,

**கொடு–ப்பு**,

**கது–ப்பு**, பெ. (வளைந்தது,. குறடுபோன்றது) 1. நண்டின் இடுக்குங்கால் 2. அலகு 3. ஆதலால் கொடுப்பு (=கதுப்பு) கன்னத்துக்குமாயிற்று. ஒப். கொடிறு

**கொடு–க்கன்**. பெ. (கொடுக்குள்ளது) தேள்.

**கொடு–தி**. பெ. (கொளுவிப் பிடிப்பது) மர ஆணி.

**கொடு–மை.**

**கொடு–வை.** பெ. (வளைந்திருத்தல்) 1. வளைவு "எண்ணாட்டிங் களனைய கொடுங்கரை.....சிறு குளம்" (புறநா 118, 2) 2. வன்மை. வட. க்றூ ர இவ்வடியினின்றன்று கடு என்பதினின்று பிறந்தது. அதன்கீழ்க் காண்க.

**கோட–ணை.** பெ. (கொடுமையின் வேறோர் உருவம்) கொடுமை (பிங்.).

**கொடு–ம்பை.** பெ. (திரண்டது, வளைந்தது) 1. மலையுச்சி 2. குளம் ஒப். குடுமி.

**கூ–ம்பு** 2. பெ. (முன்னது) 1. தேர்மொட்டு (திவா.) 2. பாய்மரம் "கூம்புமுதன் முறிய வீங்கு பிணியவிழ்ந்து" (மணி 4, 30). மலையாளத்தில் இது மலையுச்சியாதியனவற்றிற்கும் பெயர்.

**கொட்–கு.** த.வி. (வளைந்தோடுதல்) 1. சுழலுதல் "வளிவலங் கொட்குமாதிரம்" (மணி. 12, 91) 2. அலைதல் "கொடும் புலி கொட்கும் வழி" (சிறுபஞ். 80).

**கோகு.** பெ. (வளைந்தது) 1. புயம் (சூளா. அரசி. 240) 2. அடைவு கேடு 3. கபடம் ஒப். வட. ங்கு ஹ்.

**கொட்–பு.** பெ. (முன்னது) சுழற்சி "கொட்பின்றி ஒல்லும் வாயூன்று நிலை" (குறள் 789).

**கொக்கு.** பெ. (கொளுக்கி போலும் நெடுஞ்சொண்டுடைய) பறவை. இச்சொல் "கொட்கு" எனும் உருவத்தின் திரிபாம் என்பது துளுவத்தில் இது கொற்ங் கு என நிற்பதால் விளங்கும். ஒப். கோட்டான், குடிஞை, கொக்கி (கொடுக்கி, கொளுக்கி).

**கொக்–கட்டி.** பெ. (சிறிது வளைந்தது) குறட்பனங்கிழங்கு

**கொக்–கரை.** பெ. (வளைந்தது) 1. சங்கு 2. வில் 3. பாம்பு

**கொட்–டம்.**

**கொட்–டகை.**

கொட்–டில். பெ. (கவிந்தது 1. மாட்டுக்குடில். 2. வாயிலிற் சிறு மண்டபம். பாளி கொ ற்ற்ஹ க வட. ங்கோ ஷ்ற்ற க. இவ்வடசொல்லை ங்கோ. பசு எனும் சொல்லோடு சம்பந்தப்படுத்துதல் பொருந்தாது: குடில், கொட்டகை கொட்டில் என்பனபோல குட எனும் அடியினின்று பிறந்ததாகக் கூறுதலே சிறப்பாம்.

**கொட்—டம்**, பெ. (திரண்டது) நூற்குங் கொட்டை.

**கொட்—டாரம்**,

**கொட்டி**, பெ. (கவிந்தது) 1. களஞ்சியம் 2. அரண்மனை கோபுர வாசல் வட. கோ ற்றார ஒப். வட. கோ ஷ்ற்றா ங்கா ர=களஞ்சியம்

**கொட்டி** 2, பெ. (உடலை வளைத்தல்) ஒரு கூத்து. கொடுகொட்டி, கொட்டிச்சேதம் எனவுமாம். ஒப். குடம் 1, குடந்தை, கூத்து.

**கொட்டி**,

**கொட்டி—யம்**, பெ. (சூழ்ந்துவரல்) 1. கூட்டம் 2. மாட்டுமந்தை 3. எருது வட. ங்கோ ஷ்ற்=கூட்டல் ஆகவே ங்கோ ஷற்ற எனும் மாட்டுப் பட்டி அர்த்தங்கொண்ட சொல்ங்கோ எனும் மாட்டின் சார்பாயன்று குட எனும் அடியாலே பிறந்ததெனக் காண்க. ஒப். கோட்டம்

**கொட்டு**, பெ. (குவிந்தது, உட்டுளைகொண்டது) 1. நெற் கூடை 2. குழாயுள்ள மரத்துண்டம் 3. மேளம் (சிலப். 3, 14) வட. கோ ஷ்ற்ற = அடிவயிறு. குழி.

**கொட்டை**, பெ. (திரண்டது) 1. குமிழ் 2. விதை 3. தலைப்பாகம் 4.சுருள்

### கொளு—வு <குழை <உழல் <உள்

**கொளு—வு**, பி.வி. (தலை வளைந்த திண்ணிய பொருளால் பற்று தல்) 1. பூட்டுதல் "அறிவென்னுந்தாள்கொளுவி" (திவ். இயற். 3, 12) 2. அகப் படுத்துதல் 3. சிக்குதல் 4. கொள்ளச்செய்தல் (புறநா. 55,1) 5. தீமூட்டுதல் (திருவாச. 6, 19) 6. தூண்டிவிடுதல் (கலித். 144, 20) ஒப். வட. ங்க்று ம்ப்ஹ.

**கொள்**, பி.வி. (முன்னது) 1. கையாற் பற்றுதல் (சீவக. 430) 2. முகத் தெடுத்தல் (மதுரைக். 238) 3. பெறுதல் (குறள். 222) 4. விலைக்கு வாங்குதல் 5. உரிமையாக்குதல் (சீவக. 457) 6. உள்ளே தரிக்கச்செய்தல் "சிதரரிக் கண் கொண்டநீர்" (நாலடி. 394) 7. கருதுதல் 8. நன்கு மதித்தல் (குறள் 699) 9. உற்சவமெடுத்தல் "தண்பதங்கொள்ளுந் தலை நாட்போல" (சிலப். 6, 160) 10. மனம் பொறுத்தல் (தொல். பொ. 147 உரை) 11. ஒத்தல் "வண்டினம் யாழ்கொண்ட கொளை" (பரிபா .11, 125) ஒப். கோலு.

**கொடு**, பி.வி. (கொள்ளச்செய்தல்) 1. ஈதல் (குறள் 1005) 2. விற்றல் (திருக்கோ. 63) "கொள்ளுதல்" கொடுத்தல் என வந்தமைபோல. "குளித் தல்" குடித்தல் என வந்தமையையுங் காண்க.

**கொள்ளை**, பெ. (கொள்ளல்) 1. சூறையாடிப் பற்றுகை 2. வாங்கும் விலை "சில்பதவுணவின் கொள்ளை சாற்றி" (பெரும்பாண். 64) 3. அடையும் பயன் 4. பெருவாரிநோய் 5. மிகுதி 6. கூட்டம்

**கள்**, பி.வி. (கொள்ளுதலின் மரூஉ) 1. பறித்தல் (சூடா.) 2. களை பிடுங்குதல் (குறள் 1038) 3. திருடுதல் "கட்போருளரெனின்" (சிலப். 5, 115) 4. வஞ்சித்தல்.

***கள்,***
***கள,***
***கள—வு,***
***கள்வம்,***
***கள்ளம்,*** பெ. (முன்னது 1. திருட்டு "காமங்களவிட்டு" (பரிபா. 11,42) 2. வஞ்சனை.

***கள்வன்,***
***களவன்,*** பெ. (கொள்ளும் அவன்; கொடுக்காற் பற்றுமது) 1. திருடன் 2. நடுச் சொல்வோன் (பிங்) 3. நண்டு (ஐங்குறு, 21) களவனும் அது (கலித். 88, 10) ஒப். கொடுக்கன் 4. முசு (பிங்) 5. (?) யானை. ஒப். வட. க ல ம்ப்ஹ.

***கர,*** பி.வி. (கள்ளலின் மரூஉ. கவர்தலின் திரிபுமாகலாம்) 1. கவர்தல் 2. மறைத்தல் (புறநா. 1,8) 3. ஒடுக்குதல் "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" (திருவாச. 7, 12) 4. (த.வி). மறைதல் (மணி. 2, 26) 5. கெடுதல் (திருக்கோ. 213)

***கரவு,***
***கர வடம்***, பெ. (=களவு; ?=கவர்வு) 1. களவு 2. வஞ்சனை வட. க ர வ ற்ற.

**கொழு—நன்**, பெ. (கொள்ளும் அவன்) 1. கணவன் 2. இறைவன் (சூடா.)

**கொழு—ந்தன்**, பெ. (முன்னது) 1. கணவன் 2. கணவன் தம்பி

**கொற்—று**, பெ. (கொள்வது) உணவு

**கோட்—பு**, பெ. (கொள்ளுதல்) 1. கொள்ளுகை 2. வலிமை. ஒப். கொற்றம்.

**கோட—ல்**, பெ. (முன்னது) 1. கொள்ளுகை 2. பாடங்கேட்கை (நன். 40) 3.மனத்துக் கொள்கை.

**கொளை**, பெ. (முன்னது) 1. பிடிப்பு 2. கோட்பாடு (கலித். 34, 13) 3. பயன் (கலித். 34, 17) 4. இசை "புரி நரம்பின் கொளை" (பரிபா.7, 7 7) 5. தாளமிட்டு ஒற்றறுக்கை (சிலப். 17. ஒன்றன் பகு.2) 6. பாட்டு (பரிபா. 16, 12)

**கொளு–த்து**. பி.வி. (பற்றச்செய்தல்) 1. கொள்ளுவித்தல் "புகை யைக் கொளுத்தி அமைத்த ஊன்" (புறநா. 14 உரை) 2. அறிவுறுத்துதல் (பெருங். உஞ்சைக். 58, 70) 3. விளக்குதல். 4. தீப்பற்றவைத்தல் 5. வீணை யாதியனவற்றின் ஒலியெழச்செய்தல் "நரம்பினாய கருவியைக் கொளுத்து மாக்கள்" (சூடா 2, 39) 6. நடப்பித்தல் (சிலப். 3, 17)

**கொளு–த்து**. பெ. குலவுதலின் கீழ்க் காண்க.

**கொள்–ளி**, பெ. (கொளுத்துவது) 1. எரிகட்டை (ஐங்குறு. 295) 2. நெருப்பு (நெடுநல். 8).

**கொழுந்–து**, த.வி. (கொளுத்துண்டெரிதல்) 1. சுவாலித்தல் 2. வெயிலிற் கருகுதல்.

**கொழு–ந்து**. பெ. (முன்னது) சுவாலை. ஒப். வட. கு ஷ் . கு ஷா கு.

**கோள்** 1, பெ. (கைக்கொள்வது) 1. பற்றுதல். ஏற்றல் (பரிபா. 4. 57) 2. துணிபு (குறள் 646) 3. மதிப்பு 4. வலிமை (பிங்.) 5. தன்மை 6. (கொண்டு சென்று சொல்லும்) குறளை 7. பொய் 8. (உயிரைக் கொள்ளல்) கொலை (சீவக. 264) 9.(வளைவுண்மையால்) பாம்பு 10. (சார்புபற்றி) விஷம். ஒப். வட. ங்க்ஹோ ர. கிரகம் ஆதிய அர்த்தங்களில் குலவுதலின் கீழ்க் காண்க.

**கோள–ரி**, பெ. (முன்னது) சிங்கம்.

**கொளு**, பெ. (கொளுவுவது) 1. உருவு திரையை மாட்டுங் கருவி. 2. கருத்து விளக்கும் சொற்றொடர்.

**கோட்–பு**, பெ. (கொள்ளுதல்) 1. பறித்தல் 2. ஏற்றல் 3.வலிமை "விதியின் கோட்பால் வீடினன்" (கம்பரா. உருக். 81)

**கோட–ல்**, பெ. (முன்னது) 1. கொள்ளுகை 2. பாடங்கேட்கை 3. மனத்துக்கொள்ளுகை

**கொல்**, பி.வி. (கைப்பற்றல்) 1. உயிர் கவரல் 2. வெட்டுதல் "மரங் கொஃறச்சர்" (சிலப். 5, 29) 3. கதிரறுத்தல் (தொல். பொ. 76 உரை) 4. அழித் தல் (திருவாச. 12, 16) 5. துன்பப்படுத்தல் (சீவக. 642)

**கொலை**.

**கோற–ல்**. பெ. (முன்னது) 1. உயிர்வதை 2. இமிசை.

**கொற்–றம்**. பெ. (கொன்றழித்தலோடு சம்பந்தப்பட்டது) 1. வெற்றி (குறள் 583) 2. வீரம் "பெரும் படைக்கொற்றம் பீடழிந்து" (பெருங். மகத். 3, 90) 3. அரசியல் (பெருங். இலாவா. 5, 73) 4. வன்மை (சூடா.).

**கொற்–றி**. பெ. (கொல்வது) 1. கொற்றவை (வெற்றி செறிந்த ஐயை எனும் தெய்வம். "பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு" (கலித். 89, 8) 2. ஒருவகைக் கூத்து

**கொற்–றவன்**, பெ. (கொ்றறமுள்ளோன்) 1. வெற்றியாளன் "ஊர் கொண்ட உயர் கொற்றவ" (மதுரைக். 88) அரசன் (சீவக. 2544).

**குல–வு <குழ <உழ–ல் <உள்**

**குல–வு**.

**குலா–வு**, த.வி. (வளைதல், கவிதல்) 1. வளைதல் "குலவுச்சினைப் பூக்கொய்து" (புறநா. 11. 4) 2. குவிதல் "குலவுமணல்" (ஐங்குறு. 153) 3. நெருங்கியுறவாடல் 4. உலாவுதல் ஒப். குடவு, குலம். வட. கு ல், குல.

**குள–சு**.

**குழை–ச்சு**. பெ. (வளையமாடியது. குழிந்தது) 1. கயிற்றுச் சுருக்கு 2. எலும்பின் சந்து. ஒப். குழை.

**கொளு–த்து**. பெ. (முன்னது) 1. உடற் சந்து 2. ஆபரணங்களின் பூட்டு = கொளுக்கி (புறநா. 150 உரை).

**கொலு–சு**, (வளையமாயுள்ளது) 1. கை கால்களில் அணியும் வளைந்த ஆபரணம் 2. ஓரளவுச் சங்கலி. ஒப். சிலம்பு (சுலம்பு) இது சுலவுதலினின்று பிறப்பது; இங்கு குலவுதலினின்றும் கொலுசு வந்ததுபோல.

**குல் –லம்**, பெ. (வளைந்தது, உட்கவிந்தது) முறம். ஒப். சுளகு. இஃது சுலவு எனுஞ்சொல்லினின்று பிறந்து முறத்தையே குறிக்கும். முறத் தையும் காண்க. முடங்கி வளைந்திருப்பது முறம் வட. கு ல் ய = முறம். ப்ாளி கு ல் ல ஒருவகை மரக்கலம்

**குலா–லன்**, பெ. (சக்கரத்தோடு தொடர்புடையவன்) குசவன். மலையாளத்தில் குலால் என்பது சக்கரம் வட. கு லா ல.

**குல–ம்**, பெ. (வளைந்து கூடி வந்தது) 1. கூட்டம், மந்தை 2. சாதி, இனம் 3. உயர் குடிப்பிறப்பு (குறள். 960) 4. வீடு, அரண்மனை, கோயில் 5. (துளையுள்ளது) மூங்கில். ஒப் குழு, குடி, கூட்டம். வட. கு ல் = சேர்த்தல். குவித்தல். கு ல= குலம்.

**குலை**. பெ. (வளைந்தது) செய்கரை. வட. கூல.

**கோ –லு <குல–வு <குழை <உழ–ல் <உள்**

**கோலு**, பி.வி. (வளைத்தல். கவித்தல்) 1. வளைத்தல் "நெடுங்காழ்க் கண்டங்கோலி" (முல்லைப். 44) 2. உட்கவியச் செய்தல் "சீறுடை கோலிக் கீழிருந்தூட்டுபு" (குறுந். 60. 3) 3. திரட்டி வைத்தல் (திருக்கோ. 110) 4. முகந்து அள்ளுதல் (கலித் 23. உரை) ஒப். கொள். 5. விரித்தல், ஆலோசித்தல், தொடங்குதல் 6. உண்டாக்குதல். வட. கு ல் = சேர்த்தல்.

**கோரு**, பி.வி. (முன்னது) 1. தண்ணீர் முகத்தல் 2. விரும்புதல் 3.வேண்டிக்கொள்ளுதல், பெ. கோரிக்கை.

**கோல–ம்**. பெ. (வளைந்திருப்பது, வளைந்து வருகை) 1, சுற்றி வருதல் "ஊர்க்கோலம்" 2. உருவம் 3. வேடம் "உள்வரிக்கோலத்து" (சிலப். 5, 216) 4. ஆபரணம் (சிலப். 30, 18) 5. அலங்காரம் 6. அழகு "கோலத் தனிக் கொம்பர்" (திருக்கோ. 45) 7 நிறம் 8. தன்மை 9. (வளைந்தோடுவதாற் போலும்) சிறு நீரோட்டம் (பிங்.) 10. முயற்சி 11. (உருண்டையானது) பாக்கு, இலந்தை. பன்றி எனும் அர்த்தத்தில் கேழல் (= கிண்டுவது) எனும் சொல்லின் விகாரம்போலும். "கேழறி கழ்வரக் கோலமொடு பெயரிய" எனும் பரிபாடல் காண்க (2. 16)

**கோள–ம்**. பெ. (வட்டித்து உருண்டையானது) 1. உருண்டை 2. பந்து 3. கட்டி வட. ங்கோ ல. ங்கு ல. ங்க்லௌ.

**கோள்**, 2 பெ. (முன்னது) 1. கிரகம் (பெருங். இலாவாண 11. 70) 2. இராகு (சீவக. 454) 3. மேகம் (சீவக. 320) 4. ஒளி 5. (வளைந்திருத்தலால்) பரிவேடம் (சீவக. 1098) 6. பாம்பு (சீவக 360 உரை) கொழு (திவா) 8=குலை. வட. ங்கோ ல

**கோல–கம்**,

**கோள–கம்**, பெ. (உண்டையானது) 1.மிளகு 2. திப்பலி. வட. கோ ல க.

**கோல்**, பெ. (வளைந்தது, திரண்டது) 1. கொழு (பிங்) 2. திரட்சி "கோனிறவளையினார்க்கு" (சீவக 209) 3. மரக்கொம்பு (சூடா.) 4. கம்பு (கலித். 82, 24) 5. செங்கோல், அரசு (குறள் 546, 558) 6. தூரிக்கை (பிங்.) 7. துலாக்கோல் (பிங்.) 8. பிரம்பு 9. குதிரைச் சம்மட்டி 10. அம்பு 11. யாழ் நரம்பு (சீவக. 459) 12. சித்திரவேலை (=கோலம்) (புறநா 36, 2)

**கோன்–மை**. பெ. (கோல் செலுத்துகை) 1. அரசாட்சி 2. அரசன் 3. தலைவன். ஒப். கொலு.

**கோன்.**

**கோ.** பெ. (கோன்மையுடையது) 1. தலைமை (தேவார 997. 6) 2. மலை 3. பெருமையிற் சிறந்தோன் 4. அரசன் (பிங்) 5. தகப்பன் (கலித். 116. 11) 6. குசவன் (புறநா. 256. 7) ஒப். வட. ங்கோ மான் இதனை பசுக்களை யுடையோன் என அர்த்தஞ் சொல்வர். அவ் அர்த்தமும் பொருந்தும்.

**கோடு <குட–கு <குழ <உழ–ல் <உள்**

**கோடு.** த.வி. (வளைதல்) "செங்கோல் கோடியோ" (மணி 28, 188) ஈண்டு "குட" குட-கு. கொடு-கு என நின்று கோடு ஆயிற்று.

**கோடு.** பெ. (வளைவு) 1. கொம்பு 2. மரப்கொப்பு 3. சங்கு 4. மயிர் முடி 5. மலையுச்சி 6. மேலிடம் 7. ஆற்றங்கரை 8. வரி 9. பக்கம் ஒப். கோடி. குடுமி, குன்று, கொப்பு, கூம்பு. குவி. வட. கூற்ற.

**கோடி.** பெ. (வளைந்தது) 1. வளைவு "முளைத்திங்கட்கோடியென" (திருவாரூ. 134) 2. முடி மலை (கி ங்) 3. நுனி 4. முனை 5. மூலை 6. சேனை யின் பிற்கூழை "உரமுதற் கோடியீறாயின்" (குறள் 767 உரை) 7. எல்லை 8. புதியது "கோடியுடுத்தல்" "கோடி காய்த்தல்" 9. (கடைசி எண்) நூறு நூறாயிரம் 10. பெரும்படை (பிங்) 11. விவாதத்தில் மேன்மேல் நிகழ்த்தும் தடை வட கோ ற்றி கூற்றி.

**கோட்–டம்.** பெ. (முன்னது) 1. வளைவு "மரத்தின்கனக் கோட்டந் தீர்க்குநூல்" (நன். 25) 2. வணக்கம் "கோட்டந்தருநங்குரு முடி வெற்பன்" (திருக்கோ 156) 3. தோட்டம் 4. கோயில் (சிலப். 14, 10) 5. பாசறை (பிங்) 6. அறை (மணி. 6, 59) 7. சிறைச்சாலை (சீவக. 262) 8. குளக்கரை "உயர் கோட்டத்து....... வான்பொய்கை" (பட்டினப் 36) 9. யாழ் (வளைந்தது) (பிங்.) ஒப். கோடு, கூலம் வட கோ ஷ்ற்ற=மதில். ங்கோ ஷ்ற்ஹ=மாட்டுத் தொழுவம்.

**கோட்–டு.** பி.வி. (வளையச் செய்தல்) 1. வளைத்தல் (சீவக. 1568) 2. முறித்தல் 3. சித்திரம் முதலிய வரைதல் "தன்னாம மேருவினுங் கோட்டினானே" (பாரத. சிறப்புப் 19.) 4. கட்டுதல்.

**கோடி.** பி.வி. (வளைத்து உருவாக்கல்) 1. உருவாக்கல் "கடி மண்டப முன்கோடிப்ப" (காஞ்சிப்பு. திரும. 4) 2. உரூபிகரித்தல் 3. அலங்கரித்தல் "கோடித்தன்ன கோடுசால் வையம்" (பெருங். இலா. 8, 185) ஒப் . சோடித் தல்)

**கோட்—டை**. பெ. (வளைவானது) 1. அரண் "உலவாக் கோட்டை" (திருவாலவா 50. 13) 2. பரிவட்டம் "சந்திரனோர் கோட்டை கட்டிக் கொண் டிருந்த கோலம்" (கொண்டல் விடு. 72) கோட்டம் காண்க. வட. கோ ற்ற. கோ ற்றஹ.

**கோட்—டான்**. பெ. (வளைந்த உறுப்புடையது கொக்கு ஒப். குடிஞை

**கூட—ம்**. பெ. (திரண்டது. கவிந்தது) 1. மலையுச்சி "கூடக் கூம்பு" (பெருங். உஞ். 40, 72) 2. வீடு "மதலை நாட்டமைத்த தன் பழங்கூடம்" (கல்லா 60. 22) ஒப். கோட்டம். வட. கு ற்ற=வீடு. கூற்ற=மலைச்சிகரம் ஆதியன.

**கோட—கம்**. பெ. (வளைந்தது) ஒருவகைச் சிகரம் பொருந்திய முடி "கோடக மணிந்த கோல முடியினாய்" (சிந்தா 2989) வட. கோ ற்ற= வளைவு. குடில். கோ ற்ற ர=குகை.

**கோர—கம்**.

**கோர—கை**. (வளைந்தது. திரண்டது) அரும்பு முகை. டகர வியஞ் சனம் ரகரமாயிற்று. வட. கோ ர. கோ ர க.

**கோரம்**. பெ. (முந்தியதன் திரிபு) வட்டில்.

**கேடகம்**.

**கேடயம்**. பெ. (வட்டாகாரமானது) 1. பரிசை 2. (வளையமாயு மைந்த) பாசறை 3. மலைகள் அடுத்துள்ள ஊர் (பிங்.) இங்கு ஓகாரம் ஏகார மாயிற்று. வட. க்கே ற்ற= பரிசை, சிற்றூர்.

**கிடு—கு**. பெ. (முன்னதன் திரிபு) 1. பரிசை (சீவக. 2218) 2. சட்டப் பலகை (சீவக. 113) 3. (மறைப்பதினாற் போலும்) முடைந்த ஓலைக் கீற்று 4. (வட்டவடிவான) பறை வகை.

**சேடகம்**. பெ. (கேடகத்தின் திரிபு) பரிசை "மயிர்ப்புளக சேடகமு மேந்தி" (சூளா. அரசி. 159) வட க்கே ற்ற க. ஈண்டு அடிக்ககரம் சகர மாயிற்று)

**சிரகம்**. பெ. (சேடகத்தின் திரிபு) 1. தலைச்சீரா 2. நீர்க்கலயம் "அடர் பொற் சிகரத்தால் வாக்கி" (கலித். 51, 7) 3. திவலை (திவா.)

**சிகரம்**. பெ. (சிரகத்தின் திரிபு) 1. வட்டில் 2. (திரள் வடிவத்தின் பொருட்டு) மலையுச்சி "சிகரமுயர்ந்த நெடியமலை" (புறநா. 135 உரை)

3. மலை (சூடா) 4. தலை 5. கோபுரம் 6. கமான் வளைவின் நடு 7. உயர்ச்சி 8. நீர்த்திவலை 9. (சார்பு பற்றி) அலை. ஒலி நிலை மாற்றால் சிரகம் சிகர மாயிற்று. வட ஶி க்ஹா. ஶி க்ஹ ர.

***சிகரி***, பெ. (சிகரத்தையுடையது) 1. மலை "கோலவருவியஞ்சிகரி" (பெருங். நரவாண. 1. 182) 2. கோபுரம் "மங்குறோய்சிகரி" பரத பாவ 29) வட ஶி க்ஹ ரி ன்.

***சிகழி—கை***, பெ. (தலையைச்சார்ந்தது. திரட்டிமுடித்தது) 1. தலை மயிர் முடிப்பு "மேல் விரித்தியாத்த சிகழிகை" (கலித் 96, 8) 2. சிரத்தைச் சூழ அணியும் மாலை. இது வடமொழி ரீதியைப் பின் பற்றி ஆக்கிய சிகரிகை எனுஞ் சொல்லின் மரூஉ.

சிகை, பெ. (சிகழிகையின் திரிபு) 1. தலையின் உச்சி 2. குடுமி "மது மலர் தயங்கு பூஞ்சிகை" (சீவக 195) 3. மயிற்கொண்டை 4. தீச்சுவாலை வட ஶி க்ஹா.

***சிகி***. (சிகையுடையது) 1. மலை 2. மயில் 3. நெருப்பு. இது வட சொல்: ஶி க்ஹி ன்.

***கடகம்***, பெ. (கேடகத்தின் திரிபு) 1. வட்டம் (பிங்) ஒப் குடகம் 2. வளை யல் "கடகஞ் செறிந்தகையை" (மணி. 6. 114) 3. பரிசை 4. (வளையமாய்ச் சூழ்ந்து நிற்கும்) படை 5. யானைத் திரள் 6. ஓர் எண் 7. மதில் (பிங்) 8. மலைப் பக்கம். கேடகத்தின் அடி ஏகாரம் அகரமாகி கடகம் என நின்றது. வட. கற்ற க=வளையல். ங்க்ஹ ற்ற=கலயம்.

***கரகம்***. பெ. (கடகத்தின் திரிபு) 1. கமண்டலம் 2. ஆலங்கட்டி 3. நீர்த் துளி 4. நீர் (பிங்.). வட க ர க.

***சகடம்***,

***சகடி***,

***சகடு***,

***சகடை***, பெ. (கடகத்தின் திரிபுகள்) 1. சில்லு 2. வண்டி "பல் கதிர் முத்தார் சகடம்" (சிந்தா. 363). கடகம் சகடமானமை ஒலி நிலைமாற்று. வட. ஶ க ற்ற. ஶ க ற்றி கா. ஒ ப். ச க்ற.

***சாகாடு***. பெ. (சகடத்தின் திரிபு) 1. வண்டியுருளை "அச்சுடைச்சா காட்டாரம்" (புறநா. 256. 2) 2.வண்டி "பீலிபெய் சாகாடு மச்சிறும்" (குறள். 475) வட. ஶ க ற்ற

***சட்டி***. பெ. (சகடியின் திரிபு) மட்பாண்டம். (பெரும்பாண். 377 உரை)

**கூடா–ரம்**, பெ. (கவிந்து நிற்பது) 1. படவீடு 2. வண்டிக்கூடு. இது குற்றரு எனும் வட சொல்லினின்று மீண்டெடுத்ததுமாகலாம். ஒப். கூடு. கூண்டு.

**கூடு**,

**கூண்டு**, பெ. (கவிந்து மூடுவது) 1. குரம்பை. ஒப். கூடை, ஒப். வட. கூல் = மூடுதல், ங்கு ஹ்=மறைத்தல், ங்கு ஹா=கெபி. ஒப். கூடாரம்.

**கூடை**, பெ. (கவிந்து மூடுவது) ஓலைக்கூண்டு, கூடு.

**கூரை**, பெ. (கவிந்து நிற்பது) 1. இறப்பு "குறுங்கூரைக் குடிநாப்பண்" (பட்டினப். 81) 2. வீடு (பு.வெ. 10. முல்லை. 9. உரை) ஒப். வட கு ற்ற ங் க

## கூள் <குழ <உழ–ல் உள்

**கூள்**,

**கூடு**, த.வி. (வளையமாய் ஒருங்கு சேரல்) திரளல் "கூண்டன கரிகள்" (இரகு. மீட்சி. 42) "கூடிய வண்டினங்காள்" (திவ். திருவாய். 6. 8. 3) இச்சொல் குழ (குழை) வின் நீட்டல் விகாரமாம். ஒப். குழு. வட. கு ல்= சேர்த்தல்.

**கூட்டு**. பி.வி. (முன்னது) 1. திரளச்செய்தல் 2. இணைத்தல் 3. அதிகப்படுத்தல்.

**குட்டினி**, பெ. (கூடியிருந்தவள்) கற்பழிந்தவள். இது வடசொல்

**குண்டணி**,

**குண்டுணி**, பெ.(கூட்டிச் சொல்வது) குறளைச்சொல்

**கூளி** 1,

**கூட்–டம்**, பெ. (ஒருங்கு திரண்டது) 1. சபை 2. இனத்தார் 3. குடும்பம், மந்தை. கூளியர் =(திரண்ட படையின்) போர் வீரர். ஒப், கூலி, கூளி.

**கூளி** 2, பெ. (முன்னது) கூட்டுவோன், சேனாபதி.

**கூலி**, பெ. (முன்னது) 1. போர் வீரரின் வேதனம். 2. பணியாளர் வேதனம். 3. (சார்பு பற்றி) பணியாளன்.

## குற–ழ் <குழ–ல் <உழ–ல் <உள்

**குற–ழ்**.

**குற–ண்டு** த.வி. (வளைதல்) குனிதல், சுருளல் "அவனாங்கே பாராக் குறழா" (கலித். 65, 10) ஒப். கொடுகு. குறழ் எனுஞ் சொல் "குழல்" சொல்லின் மரூஉ. ஈண்டு ழகரம் றகரமாயிற்று.

**குற—வணவன்**, (குறண்டினது) வெண்புழு. "அணவன்" அணவு (அண்டு) எனுந் துணைச்சொல்லின் திரிபு.

**குற—ங்கு**,

**குர=ங்கு**, பெ. (வளைந்து மடிந்தது, குறுகியது) 1. கொக்கி 2. துடை த.வி. (வளைதல்) 1. தாழ்தல் "இலைப்பொழில் குரங்கின" (சிந்தா. 657) 2. குறைதல் "குரங்கா வாற்றல்" (கம்பரா. பாசப். 5) ஒப். குறழ், குறண்டு, குடங்கு, சுருங்கு, சுருள்.

**குர—ங்கு**, பெ. (முன்னது) 1. 'கொடுகுதல் 2. கொக்கி 3. சாகாமிருகம். ஒப். குறங்கு. வட. கு ல ங் ங்க, கு லு ங் ங்க, பாளி கு றுங்ங் க.

**குற—ள்**,

**குற—டு 2**, பெ. (வளைந்து மடிந்தது) 1. குள்ளமானது "குண்டைக் குறட்பூதம்" தேவா. 944. 1) 2. மரத்துண்டம் "ஊனமர் குறடு போல" (சிந்தா. 2281), குறுகாண்க. "குறடு" கொடிறின் மரூஉமாம்.

**குறளை**, பெ. (முன்னது) 1. குள்ளம் 2. வறுமை (திரிகடு.37) 3. கோட் சொல் (மணி. 30. 68) 4. நிந்தனை.

**குற—ளி**.

**கூளி**. பெ. (குள்ளமானவர்) பேய். கூளி = குறளி.

**குள்—ளம், கூழை, குட்டை**, பெ. (குறளாந் தன்மை) குறுகிய உருவம். குள்ளல், குள்ளன், குள்ளி என்பன குள்ளச் சொல்லினின்று வருவன. வட. க்ஹு ல் ல, க்ஷு ல் ல, க்ஷு ந்த்ற =குள்ளமான,.சிறிய.

**குளகம்**, பெ. (குறளானவை) 1. குற்றெழுத்துத் தொடர்ந்த செய்யுள் 2. குறையாய் நின்று பிறிதொன்றோடு முடியும் செய்யுள். இவை வட சொல்லெனப்படினும் தமிழ் குள்ள, குழ எனுஞ்சொற்களோடு ஒற்றுமை பூண்டனவே என நுனித்துக் காண்க.

**குட்டி**, பெ. (குறுகியது) 1. விலங்கினும் ஒருசில மரத்தினும் பிள்ளைப் பொது 2. சிறுமை.

## குழ < குற—ழ் < குழ < உழ—ல் < உள்

**குழ** உரி. (குறுகிய, சிறுவத்தன்மையான) இளமையான "மளவுங் குழவும் இளமைப் பொருள" (தொல். சொல். 312) ஒப். குள்ளம்.

**குழ—கு, குழ—வி, குழ—ந்தை**, பெ. (பிள்ளைத் தன்மை) 1. இளமை 2. பிள்ளை. ஒப். கொழுப்பு, கொழுந்து.

**கொழு–ந்து, குரு–ந்து, குரு–த்து,** பெ. (முன்னது) 1. இளமையான இலை 2. (குருத்து நிறமான) வெள்ளை. வட. ங்கௌ ர=வெண்மையான 3. குழந்தை.

**குரு–கு, குரு–ளை**, பெ. (முன்னது) 1. விலங்கு முதலியவற்றின் இளமை (தொல். பொருள். 564, 565) 2. குருத்து.

**குருவி**, பெ. (முன்னது) சிறுபறவை.

## குறு–கு < கொடு–கு < குட < குழ < உழ–ல் < உள்

**குறு–கு, குறு, குன்–று**, த.வி. (வளைந்து உட்கோடுதல்) 1. அணு குதல். 2. குறைதல். கொடுகு (குடகு) எனும் உருவம் ஈண்டு குறுகு என வந்தது. ஒப். சுருங்கு, சிறு. ஒப். வட. க்ஷு நந்த் =குறுகுதல், க்ஷு நந்த்ஹ = பசிகொள்ளல்.

**குறு, குறும்**. உரி. (முன்னது) 1. குறைந்த, 2. சமீபமான. ஒப். கூர். சிறு. பாளி கூற்ற. வட. க்று நந்த்ஹு=குறுகிய, அங்கக் குறைவுள்ள.

**குறு–மல், குறு–ணல், குறு–ணி, குறு–ம்பு**. 1. பெ. (குறைந்தது. சிறு துண்டாக்கியது) தூள், பொடி.

**குறுக்கு**. (குறைந்தது) 1. குறைந்த தூரம். 2. அகல அளவு.

**குன்–று, குறை,** த.வி. (உட்கோடுதல், சுருங்கிச் சிறுத்தல்) 1. சுருங் குதல். 2. பற்றாமற் போதல். 3. உயிரொடுங்குதல் "கணவன் குறையக் குறை வாள்" (கம்பரா. நகர் நீங். 53) 4. வெட்டப்படல் (நாலடி. 84) 5. அழிதல் 6. (பி.வி.) தறித்தல் 7. தண்ணீர் முகத்தல் (குறள் 17. உரை.).

**கூற்று, கூற்–றம்1, கூற்–றன்**, பெ. (உயிரைக் குறைப்பவன்) யமன்.

**கூற்றம் 2, கூறு**. பெ. (குறைத்து எடுத்தது) 1. பகுதி. 2. பாதி. 3. துண்டம்.

**கூறை**, பெ. (துண்டித்தது) 1. ஆடை 2. பெண்ணுக்கு மணமகன் வீட் டார் கொடுக்குஞ் சேலை. ஒப். துணி=துண்டித்தது. அறுவை = அறுத்தது.

**குன்று, குன்–றம்**, பெ. (திரண்டது) சிறுமலை. ஒப்.கோடு. குடுமி

**குன்ற–வன் குன்று–வன், குற–வன்**. பெ. (முன்னது) மலை நாட்டான்.

**குறி–ஞ்சி, குறி–ச்சி, குறு–ம்பு** 2. பெ. (முன்னது) 1. மலைநாடு 2. ஊர்.

**குறு—ம்பு** 3, பெ. (வளைந்தம திலுள்ளது) 1. அரண். ஒப். கோட்டை 2. வலிமை 3. கொடுமை 4. போர் 5. தலைவன்.

**குறாவு**, த.வி. (மடிந்து சுருளல்) 1. ஒடுங்குதல், வாடுதல்.

**கூர்**. த.வி. (வளைந்து குறுகுதல்) 1. வளைதல் "மெய்கூர்ந்த பனி யொடு" (கலித். 31, 6 ) 2. கொடுகுதல் (நெடுநல். 9. உரை) 3. மெல்லிய முனை யாகுதல் "கூர்க்குநன்மூவிலை வேல்" (தேவா. 367, 8) 4. அறிவு நுட்பமா தல் "கூர்த்தவறிவு" 5. விரும்புதல் (திணைமாலை. 124) 6. சினத்தல் (நாலடி. 70) 7. மிகுதல் "பெருவறங்கூர்ந்த கானம்" (பெரும்பாண். 23). இச்சொல் கூர்தல் எனவும் கூர்த்தல் எனவும் நிற்கும். வட. க்ஹூ ர், க்ஷூ ர், க்ஷூ ர = சவரக் கத்தி. பாளி க் ஹூ ர = சாணைக்கல்.

**குறை, குறுக்கு**. பி.வி. (உட்கோடச் செய்தல்) 1. சுருக்குதல் 2. தறித்தல். ஒப். வட. ச்ஹி ந்த்.

**குற்—றம், குன்—னம்**. பெ. (குறைந்தது) 1. பிழை 2. அவமானம் "குற்றம்" குற்றுதரனின்று வருவதுமாகலாம். குற்று=குழி (குழ) ஒப். பிழை. இதன் சுயவுருவம் புழை என்பது. இப் பிழை "குழை" யோடினங் கொண்டது.

**குச்—சம்**. பெ. (முன்னது) புறந்தூற்று மொழி. வட. கு த் ஸா.

**கொச்—சு** 1. உரி. (முன்னது) சிறு.

**கொச்சை**, பெ. (முன்னது) 1. இழிவு, 2. இழிந்தவன். வட. கு த் ஸா.

**குஞ்ச—ம்** 1, பெ (முன்னது) 1. குறள் (திவா.) 2. கூன் (அக. நி) 3. குற ளைப் பேச்சு (திவா.) வட.கு ம்ப் ஜ.

**குச—ம்**. (சுருங்குவது) பெண்கள் மார்பு. இது வடசொல்.

**குஞ்ச—ரம்**, பெ. (?கூனுள்ளது) யானை. வட குஞ்ஜர. ஒப். மலை குஞ்சுக=கூம்புதல், குவிதல்.

**குஞ்சி**, உரி. (குறுகிய) சிறிய.

**குஞ்சு**. பெ. (முன்னது) பறவை ஆதியனவற்றின் சிறியவை.

**கொஞ்—சம்**, பெ. (முன்னது) சிறிது.

**குன், கொன்**. உரி (குறுகிய) இது குஞ்சிரிப்பு ஆதிய தொடர்களில் புன் எனும் சொல்லினுக்கிணையாய் வருவது. கொன்=பயனின்மை (தொல். சொல். 256) குன்னின் மரூஉ போலும்.

கு. உப சருக்கம் (முன்னது) இது வடசொற்களில் வருவது. கு-ங்க் ரா-ம. கு-தர்க்க ஆதியவற்றிற் போல. குறு>குன் எனும் வழியாகவே அது கடை நிலை கெட்டு வந்ததுபோலும்.

## குண—கு < குழ < உழ—ல் < உள்

**குண—க** த.வி. (உள்நோக்கிச் சாய்தல்) வளைதல், கோடுதல். ஒப். கூன்.

**குண—க்கு**. பெ. (வளைவு) பொழுது மீட்டு வருந்திசை, கிழக்கு. ஒப். குடக்கு. கொடி, கொண்டல். வளைவு எனும் பொருளில் "நாயின் வாலைக் குணக் கெடுக்கலாமா" எனும் பழமொழி காண்க.

**கொண்—டல்**. பெ. (குணக்கின் மரூஉ) 1. கிழக்கு 2. கீழ்க்காற்று (புற நா. 34, 22) 3. மழைமேகம் 4. மழை 5. மாரி காலத்தில் விதைக்கும் ஒரு பயிர்.

**கொண்—மூ** பெ. (முன்னது) 1. மேகம் "குணக்கேர்பு காலத்திற் றோன் றிய கொண்மூப்போல்" (கலித். 82, 1) 2. ஆகாயம். இச்சொல் கொண்மூ < கொண்ணு < குணகு என வந்திருத்தல் வேண்டும். ஒப். மலை கொங்கு.

**குன—கு**. த.வி. (குவிந்து மெல்லென ஒலித்தல்) கொஞ்சிப் பேசுதல் (திருப்பு. 20). ஒப். கொஞ்சு.

**குனை, கொனை**. பெ. (வளைந்தது. ஒடுங்கியது) கூர்.

**குந்—தம்**. பெ. (கூரியது) 1. வேல் (பு. வெ. 4. 7) 2. எறிகோல் (சீவக. 1678) ஒப். குத்து, கூனு. வட. குந்த.

## கோணு < குண—கு < குழ < உழ—ல் < உள்

**கோணு**. த.வி. (வளைதல்) 1. வளைந்திருத்தல் 2. நெறிபிறழல். ஒப். கோடு.

**கோண—ம்**, பெ. (வளைந்து மடிந்தது) 1. முடக்கு 2. மூலை 3. மூஞ்சி (பிங்.) கோடு காண்க. வட. கோண, ங்க்ஹோ ண.

**கோணி**, (மூஞ்சியுள்ளது) பன்றி. வட. ங்க்ஹோ ணின்.

**கோண—ல்**. பெ. (முன்னது 1. வளைவு 2. கூன்).

**கோண்**. பெ. (முன்னது) 1. வளைவு 2. மாறுபாடு "கோணக் களிற் றுக் கொடித்தேர்" (சீவக. 28).

**குண—ம்**. பெ. (வளைவு) 1. திரிப்பு 2. வில்ஞாண் 3. கயிறு 4. போக்கு (வளைவுத்தன்மை). வட. ங்கு ண.

**குண-லை**. பெ. (உடலை வளைத்தல்) ஒரு கூத்து. ஒப். குடம். குடந்தம். கொட்டி. கூத்து.

**குணு**. பெ. (குறண்டுவது) புழு. ஒப். குறவணவன். வட. ங்க்ஹூண.

## குனி < குண-கு < குழ < உழல் < உள்

**குனி**. த.வி. (வளைதல்) 1. வளைதல் "குனிவளர்சிலை" (சிந்தா. 486) 2. வணங்குதல் (சூடா) 3. தாழ்தல் (சூடா) 4. இரங்குதல் (சது.) 5. வீழ்தல் (சீவக. 2293) 6. ஆடுதல் "அன்பரென்பூடு ருகக்குனிக்கும்" (திருக்கோ. 11) 7. குரல் நடுங்குதல் 8. (பி.வி.) வளைத்தல் "குனித்தபுருவமும்" (தேவா. 11.4.) இது குனிதலென்றும் குனித்தலென்றுமாம்.

**குனி-ப்பு**. பெ. (முன்னது) 1. வளைகை 2. ஆடல் (திருவாச. 10, 3) 3. தாழ்வு.

**குந்து**. த.வி. (முன்னது) 1. வளைதல் "குந்துவன்னெடுஞ்சிலை" (கம்பரா. பிராமாத். 56) 2. மடிந்து உட்காருதல் 3. நொண்டி நடத்தல்=கெந்துதல் 4. தவறுதல்.

**குன்-னா**. வி. (முன்னது) உடல் வளைந்து ஒடுங்குதல். ஒப். கொடுகு. கூனு.

**கூனு**. வி. (முன்னது) வளைதல். முதுகு கோடுதல். இதனால் "கூன்" நத்தைக்கும் ஆந்தைக்கும் பெயராம். கூனி=வளைந்தவள்.

**கூத்-து**. பே. (உடலை வளைத்தல். வளையமாய் வருதல்) நடனம். ஒப் கூள். கூடு. கொட்டி. குடம். குடந்தம். கோடியர். குனி. வட. கூ ர் ந்த்= குதித்தல். விளையாடல். கூர்ந்த நம்=விளையாட்டு.

## கூப்பு < கொடு-கு < குழை < உழல் < உள்

**கூப்பு**. பி.வி. (வளைத்துக் கவியச் செய்தல்) 1. கைகுவித்தல் (சீவக. 430) 2. உயர்ந்து கவிந்து நிற்கச் செய்தல் "கூப்பியகனகமாழையால்" (சீவக. 913) 3. சுருக்குதல். ஒப். சூப்பு.

**கூம்பு**. த.வி. (முன்னது) 1. ஒடுங்குதல் (சூடா) 2. குவிதல் "செய்ய கமல மலர் கூம்ப" (நைடத. சந்திரோ. 2) 3. ஊக்கங் குறைதல். ஒப். சூம்பு. சோம்பு. சாம்பல்=கூம்பிய மலர்.

**கூவ-ல்**. பெ. (உட்கவிந்தது) 1. குழி 2. கிணறு. வட. கூ.ப. இதற்கு கு+அப் என வட நூலோர் சொல்லும் பிறப்புப் பொருந்தாது. ஒப். மலை. கொப்பம் = யானை பிடிக்குங்குழி.

**கோம்பு**, த.வி. (குவிந்து பொருமுதல்) சினத்தல் (பிங்.) வட. கு ப். க்ஷு ம்ப்ஹ் ஒப். மலை. குப்பு = (பொருமு) அனல்.

**கோம்–பல்**, பெ. (முன்னது) 1. சினங்கொள்ளல் 2. (பி.வி.) கடிதல். வட. குப். க்ஷு ம்ப்ஹ்.

**கோப–ம்**, பெ. (முன்னது) 1. சினம் 2. வெறுப்பு 3. மிகுத்தல். வட. கோப. ஒப். மலை. கொ ம் பி க் க. தம்பலப்பூச்சி, ஒரு வகைத் துகில் எனும் அர்த்தங்களில் கெழுவின் கீழ்க்காண்க. உறைத்த நிறம் எனும் அர்த்த முள்ள இக் கெழுச் சொல்லில் (கெழு < எல் < எழு) நின்று கெம்பு. செம்பு ஆதியனவும் கொவ்வை. சுவப்பு கோகம் கோபம் ஆதியனவும் பிறக்கும். இவற்றைப் பிறாண்டுக் கண்டு மகிழ்க.

**கோம்பை**. பெ (குவிந்தது. கூம்பியது) 1. தேங்காய் முதலியவற்றின் மேற்கூடு 2. அறிவற்றவன்.

**கொம்மை**. பெ (குவிந்து திரண்டது) 1. இளமுலை (பரிபா. 22. 30) 2. மார்பு 3. (சார்பு பற்றி) இளமை. அழகு. வலிமை 4. திரட்சி (சூடா) 5. வட் டம் (பிங்) 6. பெரிதாந் தன்மை "அம்மையு மழகுங் கொம்மை யொடு கழுமி" (பெருங். உஞ்சைக். 40. 210) 7. கொத்தளம் 8. வீடு 9. அடுப்புக் குமிழ் 10. கதவுக் குடுமி 11. குவிந்து திரண்ட ஒரு காய்க் கொடி 12. கை குவித்துக் கொட்டுகை.

**கொங்–கை**. பெ. (முன்னது) 1. முலை (சிலப் 4.49) 2. மரத்தின் முருடு.

**கொம்–மட்டி**, பெ. (முன்னது) திரண்ட காயுள்ள கொடி வகை. ஒப். தும்மட்டி.

**கொம்மி**.

**கும்மி**.

**கொப்பி**. பெ. குனிந்து கைகொட்டுவது) கைகொட்டிப் பாடியாடும் விளையாட்டு.

**கும்–மாளம்**.

**கோ–மாளம்**.

**கும்மட்டி**, பெ. (முன்னது) குதித்து விளையாடுகை. வட. கு மா ல

**கோமா–ளி**. பெ. (முன்னது) நகைக் கூத்தாடுவோன். ஒப். கோணங்கி. மலை கோ ட ங் கி.

**குமாரன்**, பெ. (குவிந்து திரண்டு இளமை பொருந்தியது) 1 இளைஞன் 2 புதல்வன் ஒப். குழந்தை. இது வட. கு மா ர என்பதன்

தற்சமம். ஆயினுந் தமிழ் வழியடியாகிய குழையினின்றே பிறந்தது; குமாரன் ஈ கொம்மை ஈ குவி ஈ கூம்பு ஈ கொடுகு ஈ குட ஈ குழை என வரும். கு+மாரன்= எளிதில் சாவோன் என வட நூலோர் கூறும் வரலாறு பொருந்தாது.

**குமரி**. பெ. (முன்னது) . கன்னி 2. புதல்வி 3. துர்க்கை (சிலப். 11. 214) 4. (நித்திய இளமை) அழியாமை (சிலப். 10. 123).

**கோம—ளம்**, பெ. (முன்னது) 1. இளமை 2. அழகு (சூடா). 3. மென்மை "கோமளக் கொழுந்து" (திருவா. 5. 68) 4. (கொம்மை பொருந்தியது) கற வைப் பசு (சூடா) மாணிக்க வகை எனும் அர்த்தத்தில் கெழுவின் கீழ்க் காண்க. வட. கோ மல ஒப். கு மா ர.

**குவி < குமி < கூம்பு < கொடு—கு < குழை < உழல் < உள்.**

**குவி**. த. வி. யும் பி. வி. யும் (வளைந்து கூடுதல்) 1. கூம்புதல் 2. நெருங்கக் கூடுதல் (திவா.) 3. திரண்டு உயருதல் 4. உருண்டு திரளுதல் 5. சுருங்குதல். ஒப். மலை குங்குக = உள் விழல். பெருமிதங் கொள்ளல்.

**குவி**. பெ. (திரண்டு உயர்ந்தது) சுவர் (தனிப்பா ii 131. 331).

**குவை,**

**குவி—வு,**

**குவி—யல்**. பெ. (முன்னது) 1. கும்ப வடிவாய்க் கிடப்பது 2. தொகுதி.

**குகை**. பெ. (குவிந்து கவிந்தது) 1. மலைப் பொந்து (பிங்.) 2. சமாதி யறை ( திருமந். 1913) 3. சிமிழ் (சீவக. 1906 உரை) வட. ங்கு ஹா. கு ஹ ர.

**குமி**. த. வி (முன்னது) 1. திரளுதல் 2. (பி. வி) (திரட்டுதல்) குழைந் திருகச் செய்தல்.

**கும்பு**.

**கும்பம்** 1.

**கும்பல்**. பெ. (முன்னது) குவியல். ஒப். வட. ங் கு ம் ப்ஹ.

**கும்பம்** 2. பெ. (குவிந்து திரண்டது) 1. குடம் 2. முதுகின் மேற்பக்கம் வட. கு ம் ம்ப்ஹ.

**குமை**. தவி (? குவிந்து நெருங்குதல்) 1. குழைய வேகுதல் 2. குழம் புதல் 3 இறுகுதல் 4 சேர்தல் 5. அழிதல் 6. (பி. வி.) துவைத்தல் (தேவா.; 44. 6) 7. இடித்தல் 8. வருத்துதல் "ஆவி திகைக்க ஐவர் குமைக்குஞ் சிற் றின்பம்" (திவ். திருவாய். 6. 9. 9).

**குழ-க்கு**, பெ. (குவியலானது) 1. மொத்தம் 2. பெருந்தொகை 3. கூட்டம்.

**குமுறு,**

**குமிறு**, த.வி (குமைந்து எழுதல்) 1. கோபித்துக் குமிழிகொள்ளல் 2. முட்டிப் பீரிடுதல் 3. வருந்துதல் 4. குழம்பி ஒலித்தல் 5. எதிரொலித்தல்.

**குமி-லம்**, பெ. (முன்னது) பேரொலி. ஒப். வட து மு ல.

**குமி-ழ்**, பெ. (குவிந்து திரண்டது) 1. திரள் வடிவம் 2. நீரில் உண்டாகும் புற்புதம் 3. எருதின் திமில் 4. நீர் வடிக்கும் செடி வகை.

**குமி-ழ்**, த.வி. (முன்னது) 1. குமிழியிடுதல் 2. மயிர் (? குவிந்து) சிலிர்த்தல் (பிங்.) 3. (பி.வி.) ஒலிக்கச் செய்தல். குமுறுதல் காண்க.

**குமு-தம்**, பெ. (? குவிவது, கூம்புவது) 1. மிகுதி 2. படைப் பிரிவு 3. ஆம்பல். இவ்வீற்றர்த்தத்தில் வட. கு மு ந்த. இதனை "கு=எவ்வளவு முந்த=ஆநந்தகரம்!" என்னும் அர்த்தங் கொண்டு ஆம்பலுக்குப் பெயராயிற்று என்றலிலும், பகல் முழுதும் கூம்பியிருத்தலால் ஆம்பலைச் சுட்டிற்றென்பதே அதிகப் பொருத்தமுடைத்து.

**குப்-பை**. பெ. (குவிந்தது) 1. குவியல் "குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை" (பொருந. 244) 2. கூட்டம் 3. மேடு (சூடா.) 4. சொத்தை. கும்பல் காண்க.

**குப்-பம்**, பெ. (முன்னது) 1. கூட்டம் 2. சிற்றூர். ஒப். வட. ங்கு ம்ப்ஹ.

**குப்-பி**, பெ. (முன்னது) 1. ஒருவகைக் குடுவை (புறநா. 56. உரை) 2. சிமிழ் 3. ஒரு காதணி.

**குப்-பாயம்**, பெ. (குவிந்து மூடுவது) சட்டை (சீவக. 431) வட. கு ர்ப் பா ஸ, கூர்ப் பா ஸக.

**கொப்-பளம்,**

**கொப்-புளம்**, பெ. (முன்னது) குமிழ் போன்ற பரு (பெருங். உஞ்சைக். 54, 59).

**கொப்-பளி,**

**கொப்-புளி**. த.வி. (முன்னது) 1. குமிழி கொண்டு வருதல் 2. கொப்பளங் கொள்ளல் 3. வாய் குமிழ்த்தல் 4. (பி.வி.) வாயை அலசி உமிழ்தல் 5. நீர் முதலியன பீரிட்டோடச் செய்தல் (சீவக. 1889).

**கொப்–பூழ்**, பெ. (முன்னது) நாபி. இது தொப்புள் எனவும் ஒலி மாற்றால் பொக்குள் எனவுமாம்.

**கொப்–பம்**, பெ. (உட்குழிந்தது) பெருங்குழி. வட. கூ ப.

**கொப்–பரை**, பெ. (முன்னது) பெரும்பாத்திரம்.

**கொப்–பு,**

**கொம்–பு,**

**கொம்–பர்**, பெ. (வளைந்தது) 1. மரக்கிளை (மணி 24. 86) 2. கோல் 3. விலங்கின் கோடு 4. ஊதுகுழல் 5. நீர் வீசுங் கருவி. ஒப். கோல், கோடு.

**கொப்–பரம்**, பெ. (முன்னது) முழங்கை. வட. கூர் பர.

**கோ** 2, த.வி. (குவிந்து மூடுதல்) 1. கவிந்து கொள்ளுதல் "வல்லிருள் கோத்தது கருங் கடல் கொள்ளை கொண்டென" (கம்பரா. இலங்கை கேள்வி. 3) குற்றிப் பிணைத்தல் எனும் அர்த்தத்தில் கொழுதலின் கீழ்க்காண்க.

**கோப்–பு** 2. பெ. (முன்னது) கவிவு "நீப்பருந் துயர் கோப்புக் கொள்ளலும்" (விநாயகபு. 7. 3).

**கொத்–து** 2, பெ. (குவிந்து நெருங்கியது) 1. குலை "கொத்துறு போது" (திருவாச. 6. 30) 2. திரள் 3. குடும்பம்.

## கவி < குவி < கூம்பு < கொடுகு < குழை < உழல் < உள்

**கவி**. பி.வி. (வளைத்தல். குவிதல்) 1. வளைதல் 2. மூடுதல் "வான் கவிந்தவையம்" (நாலடி. 8) 3. சூட்டுதல் "இளையவற்கவித்த மோலி என்னையுங் கவித்தி யென்றான்" (கம்பரா. விபீடண. 145) 4. (த.வி) கருத்தூன்றுதல் 5. சரிந்து விழச்செய்தல் "அருங்கரை கவியக் குத்தி" (பட்டினப். 223).

**கவி**. பெ. (கவிந்தது, ?கருத்தூன்றுமவன்) 1. குரங்கு. இக்குரங்குச் சொல்லுங் குடங்குதல் (வளைந்து) கவிதலையே காட்டுகின்றமையை நோக்குக. வட. க பி இதனைக் க ம் ப் = நடுங்குதல் எனும் அடியினின்று பிறப்பித்தல் அத்துணைப் பொருத்தமாகாது. 2. அறிஞன் "கவிகளாகுவார் காண்குவார் மெய்ப்பொருள்" (கம்பரா. இரணியன். 32) 3. மங்கலப் பாடகன் (சூடா.) 4. பாவலன் (திவா.) 5. பாட்டு (பிங்.) வட. க வி இதனை கு = சத்தமிடல் எனுந் தாதுவினின்றும் பிறப்பிப்பர் வடநூலோர். தமிழ்க் கவி= கருத்தூன்றுதல் எனும் அடியே அதிகப் பொருத்தமுள்ளது. ஒப். ஆ கூ த = கருத்து. அவா கவாரி = தன்னையே கருதுருவான்.

**கவி—ஞன்**, பெ. (கருத்தூன்றுமவன்) 1. பாவலன் 2. சுக்கிரன்.

**கவி—கம்,**

**கவி—யம்**, பெ. (வளைந்தது) கடிவாளம் வட. க வி க.

**கவி—சனை,**

**கவு—சனை,**

**கவி—சனம்,**

**கவு—சனம்**, பெ. (கவிந்து மூடுவது) 1. உறை 2. கோவணம் 3. சேணம். ஒப். வட. கௌ பீ ந. இச்சொல் கூ ப=கிணறு எனும் அடியால் வருவதெனல் பொருந்தாது. வரினும் கூ ப எனுஞ் சொல்லும் தமிழடியாய்ப் பிறந்ததேயாம்.

கவ-சம், பெ. (கவிந்து மூடுவது) 1. போர்ச்சட்டை "புலி நிறக் கவசம் பூம்பொறி சிதைய" (புறநா. 13, 2) 2. இரட்சா பந்தணம் 3. மருத்துப்பாண்டம் மூடுஞ் சீலை மண். ஒப். காவல். வட. க வ ச.

**கவி—சை,**

**கவு—சி**. பெ. (குவிந்து திரண்டது) வயிற்றுக்கட்டி.

**கவி—த்தம்**. பெ. (முன்னது) 1. விளாங்காய் 2. கைம்முட்டி. வட. க பி த் த்ஹ. இச்சொல்லினுக்கு "குரங்குகள் நிற்கும் மரம் ( க பி ஓ ஸ்த்ஹா)" என வடநூலோர் சொல்லும் உற்பத்தி அமையாது. விளாத்தியில் குரங்கு கள் நிற்பனவல்ல அன்றோ?

**கவி—கை**. பெ. (கவிந்தது, வளைந்திருப்பது) 1. வளைவு 2. குடை (குறள். 389) 3. கவிந்த கை (இருசொல்), தியாகம் (பு. வெ. 9, 29).

**கவி—ப்பு**, பெ. (முன்னது) 1. மூடுகை 2. மேற்கட்டி 3. குடை 4. ஓர் இராசி.

**கவி—ழ்**, த.வி. (கீழ் நோக்கிக் கவிதல்) 1. தலை இறங்குதல் "குவளை கவிழ்ந்து நிலநோக்கும்" (குறள் 1114) 2. குனிதல் (யாப். வி. 30) 3. தலை கீழாதல் 4. நிலை குலைதல் 5. அழிதல் 6. முழுகிப்போதல் 7. (பி.வி.) மூடுதல் 8. ஒழுகவிடல் "இரு கவுள் கவிழ்த்த" (கல்லா கண). ஒப். வட. ஹவ்று=வளைதல் ஆதியன.

**கவு—ள்**, பெ. (கவிந்தது, திரண்டது) 1. கன்னம் (சீவக. 2050) 2. யானையின் உள்வாய் (புறநா. 308) 3. பக்கம் (சீவக. 2967) 4. முழங்காற் சில்லு. வட. க போ ல. இதற்கு க ம் ப் = நடுங்குதல் எனும் பொருந்தாத் தாது கூறுவர் வட நூலோர்.

**கபா—ல்,**

**கபா—லம்**, பெ. (முன்னது) 1. மூடி 2. தலையோடு 3. இரப்போர் கலம். வட. கால. ஒப். கவுள்.

**கபோ—லம்**, பெ. (முன்னது) கன்னம். இது வடமொழியுருவம். ஒப். மலை. கவிள்.

**கவா—ளம்,**

**கவ—ணம்**, பெ. (மூடிக்கட்டுவது) காயக்கட்டு.

**கவ—ளி,**

**கவ—ளி=கை**, பெ. (கவித்துக் கட்டியது) வெற்றிலைக்கட்டு, புத்தகக் கட்டு. வட. க வ லி கா = புண் மூடிக் கட்டுஞ்சீலை.

**கவ—டி,**

**கவா—ட்டி**, பெ. (கவிந்தது) 1. சிப்பி. 2. வெள்வரகு. வட. க ப ர் ந் த= சிப்பி.

**கவா—டம்**. பெ. (கவிந்து மூடுவது, காவல் பண்ணுவது) 1. கதவு. 2. (திரட்டியது) பொதி. ஒப். கவசம், காவல். வட. க பா ற்ற. வடநூலோர் இச் சொற்கு தாதுகாட்ட அறியார்.

**கவ—வு**, பி.வி. (கவிந்து சாய்தல், உள்விழுத்தி மூடுதல்) 1. கையால் தழுவுதல் "கண்ணுநுதலுங் கவளுங் கவவியார்க்கு" (கலித். 83, 17) 2. முயங்குதல் 3. அகத்திடுதல் (திருக்கோ. 108 ) 4. விரும்புதல் (சீவக. 1658) 5. (த.வி) பொருந்துதல் "பவபயங்கவவ" (ஞானா. 62, 21) 6. நெருங்குதல் (கம்பரா. மூலபல. 160) ஒப். அவவு <அகவு <அய. "தமிழமைப்புற்ற வரலா" ற்றில் கவவு ஆதியனவற்றை அவவினின்றும் பிறப்பித்துள்ளோம். (பக். 35). கவிதலினின்று பிறப்புக் கோடல் அதிகப் பொருத்தமுள்ளதென் பது ஊன்றிய ஆராய்ச்சியாற் புலமாகின்றது.

**கவ—ல்,**

**கவ—லி**. த.வி. (கவிந்து சோர்தல், அங்குமிங்கும் சாய்தல்) மனம் வருந்துதல் (சீவ. 1456).

**கவ—லை**, பெ. (முன்னது) 1. சஞ்சலம் (மணி. 30, 63) 2. அச்சம் (திவா) 3. (வளைந்து செல்வது) பிரிந்து போம்வழி. ஒப். கவர் 4. மரக்கிளை 5. (? குவிந்தது) செந்தினை 6. (? கவிந்தது) ஏற்றம்.

**கவ—ற்று**, பி.வி. (முன்னது) அங்கலாய்க்கச் செய்தல் (நாலடி. 306).

**கவ—ல்வு,**

**கவ—றல்,**

**கவ—ற்சி,**

**கவ—ன்றல்**, பெ. (முன்னதன் பெயருருவங்கள்) 1. விருப்பம் 2. மன விசாரம்.

கவ-ர், பி.வி. (கவிந்து சாய்தல், உள்விழுத்தி மூடுதல், பலவாகப் பிரிதற்கு இடமாயிருத்தல். இது குவிதலின் வேறொரு நோக்கு) 1. விரும்பு தல் (திவா.) 2. அழைத்தல். ஒப். அகவு 3. வசப்படுத்தல் (தேவா. 61,1) 4. நுகர்தல் (குறள் 100) 5. முயங்குதல் (கலித். 94, 33) 6. அகப்படுத்தல் (பதிற்றுப். 84, 12) ஒப். கவ்வு 7. கொள்ளையிடல் (பு.வெ.3, 15, கொளு) 8. கடைதல் (திவா.) 9. (த.வி.) பலகாலாகப் பிரிதல் (புறநா. 35, 8) 10. (கவர்த் தல்) கவடுபடுதல்.

**கவா—அன்**, பெ. (கவரும் அவன்) கள்வன் "விண்ணுயர் விறல் வரைக்கவா அனொருவன்" (இலக். வி. 580 உரை).

**கவ—ர்**. பெ. (கவிந்து சாய்வது) பலவாகப் பிரிகை (சீவக. 1212) 2. பிரியுங் கிளை 3. சுவர்ச் சந்து 4. வஞ்சகம் (சேதுபு. விதூம. 118) ஒப். கவடம் 5. வாழை (பிங்.).

**கவர்—வு**, பெ. (முன்னது) 1. விருப்பம் (தொல். சொல். 362) 2. இழுக்கை 3. துக்கம் ஒப். கவல்வு ஆதியன.

**கவ—டு,**

**கவட்—டை,**

**கவ்—வை** 1, பெ. (முன்னது) 1. மரக்கிளை (சீவக. 1389) 2. துடைச் சந்து 3. பிரிவு (மலைபடு. 34) 4. அடிவைப்பு.

**கவ—டம்**, பெ. (வளைந்த தன்மை. இரண்டாய் மடிந்து பிரிகை) வஞ்சனை. ஒப். கவர்வு, கரவு. வட. க ப ற்ற = வஞ்சனை. வ ஞ்ச் எனும் தாதுவும் வளைவு எனும் பொருளுள்ளதாய் தமிழடியிற் பிறந்ததாய் உள்ளதே என உய்த்துணர்க. வஞ்ச் < வாங்கு < வணங்கு < வளை < உழ-ல் < உள் என வரும்.

கவை, த.வி. (முன்னது) 1. கவடு படுதல் 2. உட்படுத்தல்) உளதாதல் "கை இய கற்பினை" (கல்லா. 6, 22) 3. (பி.வி.) அணைத்தல் (குறிஞ்சிப். 185) 4. அகத்திடுதல் (புறநா. 19, 18).

**கவை**. பெ. (முன்னது) 1. பிரிவு 2. மரக்கிளை 3. கவர்த்தடி (அகநா. 34) 4. கவர்த்த வழி (சூடா) 5. காடு (பிங்) 6. கோட்டை.

**கவ–னம்**. பெ. (கவித்தூன்றுகை, பிரிவுபட விடுகை) 1. கவிபாடுகை. வட. க வ்ய 2. கருத்தூன்றுகை 3. வேகம் ஒப். வட. ங்க ம ந 4. (குவிந்து நெருங்கியது) காடு (திவா) ஒப். வட. ங்க ஹ ந 5. படை (சூடா) ஒப். வட. க ந்த ந 6. கலக்கம் (திவா) 7. வெப்பம் (சூடா).

**கவ்–வை** 2. பெ. (முன்னது) 1. கவனித்தற்குரியது 2. கவலை 3. துன்பம் (கம்பரா. திருவா. 63) 4. பொறாமை 5. பழிச்சொல் 6. ஒலி ( பு.வெ. 12, பெண்பாற். 10).

**கா**, பி.வி. (கவித்து உள்ளடக்குதல்) 1. தடுத்தல் "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" (குறள், 301) 2. செறித்து வைத்தல் "சிறை காக்குங் காப்பெவன் செய்யும்" (குறள், 57) 3. தீமை விலக்கிப் புரத்தல் (மணி. 23, 17) 4. எதிர்பார்த்து அடங்கியிருத்தல்.

**கா** 1, பெ. (முன்னது) 1. சோலை (புறநா. 23, 9) 2. தீமையின் விலக்குகை.

**கா–வல்**, பெ. (முன்னது) 1. வேலி (பிங்.) 2. மதில் (பிங்.) 3. சிறை 4. செறித்து வைப்போன் 5. நாடு (புறநா. 5,6,) 6. கவசம் (சீவக. 793) 7. எதிரின்றி வைத்தல் (மணி. 22) 209.).

**கா–ப்பு**, பெ. (முன்னது) 1. வேலி (பிங்.) 2. மதில் (பட்டினப். 41) 3. கோட்டையின் உட்திட்டி (பிங்.) 4. கதவு. ஒப். கவாடம் 5. காவலான இடம், ஊர் (கலித். 110, 1) 6. சிறை 7. அரச முத்திரை (கலித். 94, 43) 8. அரசன் நுகர்தற்குரிய பொருட்கள் (சீவக. 1873) 9. கையிற் கவசமாயணியும் நாண், வளையல் 10. நூலின் தலைப்பிற் கடவுள் துதி.

**காவு** 1. பி.வி. (கவித்துக்கொண்டு செல்லல்) 1. சுமத்தல் (புறநா. 206) 2. பொறுத்தல்.

**காவு**, பெ. (சுமப்பது, காப்பது) 1. சிறுதெய்வங்களுக்கிடும் பலி. ஒப். பிராகிருதம் ங்க்ஹா உ 2. காவற்பொட்டு மை.

**கா** 2. பெ. (சுமத்தலுக்குரியது) 1. காவடித்தண்டு (குறள், 1163) 2. தூலாக் கோல் 3. பூப்பெட்டி (சீவக. 826).

**காவு** 2. பி.வி. (கவிந்து சாய்தல்) இச்சித்தல் (தேவா. 338, 1) ஒப். கவி. வட. க ம்.

**காம்**. பெ. (முன்னது) விருப்பம் "காம் உறுதல்" கலித். 80. 14இல் "காமரு நோக்கின்" என வருவதை "விருப்பம் மருவுகின்ற" எனப் பொருள் கொடுத்தோதுகின்ற நச்சினார்க்கினியர். இத்தொடரின் முதல் அங்கம் காமர் கடைக்குறைந்து நின்றதென்பர் (உரை). ஆயின் காமர் எனுஞ் சொல்லும் காமம் (=காம்+அது) எனப் பிரிதலால் காம் என்பதூஉம் ஒரு தமிழ்த் தனிச்சொல்லாம் என உணர்க.

**காம—ம்**, பெ. (முன்னது) 1. விருப்பம் 2. ஸ்திரீ போகம் (குறள், 1092) 3. விரும்பிய பொருள் (திவ். இயற். 2, 92) வட கா ம.

**காம—ர்**, பெ. (முன்னது) 1. விருப்பம் (கலித். 39, 1) 2. (விரும்பப்படுவது) அழகு (புறநா. 1, 1) இச்சொல்லை காமம்+மருவு எனக் கொண்டு கூட்டலன்று, காமம் எனும் சொல்லின் மரூஉ (களம்-களர் என ஆகியமை போல) எனக் கொள்வதே சிறப்பிற்று.

**காந்தம்**, பெ. (கவர்ந்திழுப்பது) 1. இரும்பைக் கவருங்கல் 2. (கவர்வது) அழகு 3. மின்சாரம்.

**காத—ல்**, பெ. (உள்ளத்தைக் கவருவது) 1. வேட்கை "காதலாற் காம பூமிக்கதிரொளி யவருமொத்தார்" (சீவக. 189) 2. அன்பு (அகநா. 55) 3. பத்தி (திவ். திருமாலை. 26).

**காத—லி**, பி.வி. (முன்னது) 1. விரும்புதல் 2. அன்பு கூர்தல்.

**கவ்—வு**. பி.வி. (கவித்து உட்செலுத்துதல்) 1. ஆவலோடு பற்றுதல் "கவ்வித் தோறின்னுங் குணுங்கர் நாய்" (நாலடி. 322) 2. கடித்தல் 3. தின்னல் (பொருந. 184).

**கதுவு**, பி.வி. (முன்னது) 1. பற்றிப் பிடித்தல் "கராவதன் காலினைக் கதுவ" (திவ். பெரியதி. 2, 3, 9) 2. (த. வி.) கலங்குதல் 3. படிதல் (வேதா. சூ. 107).

**கவ—ளம்**. பெ. (கவ்வும் அளவு) 1. வாயளவு கொண்ட உணவு 2. யானைத்தீன் 3. சோறு. வட. க வ ல

## கொய் < குவி < கூம்பு < கொடு—கு < குழ < உழ—ல் < உள்

**கொய்**,

**கொசு—வு**. பி.வி. (குவியச் சேர்த்தல். சேர்த்தெடுத்தல்) 1. சீலையைச் சுருக்கிச் சேர்த்தல் "கோடிப்பூந்துகில் கொய்து" (பெருங். இலாவாண. 5. 165) குவிந்து சிலிர்த்தல் (மலைபடு. 572) 3. சேர்த்தப் பிடுங்குதல்

(பெருங். இலாவாண. 19. 161) 4. கூட்டியறுத்தல் (மதுரைக். 271) 5. தெரிந் தெடுத்தல் (கோயிற்பு. பதஞ்ச. 54)

**கொய்–யகம்,**

**கொய்–சகம்,**

**கொய்–சுவனம்,**

**கொச்–சம்,**

**கொச்–சகம்**

**கொச–வம்**. பெ. (முன்னது) 1. குவியச் சுருக்கிய உடை 2. அலங் காரத் தொங்கல்.

**கொசி–கம்,**

**கோசி–கம்**. பெ. (?முன்னது) 1. ஆடை 2. பட்டாடை.

**கொசு–கு,**

**கொது–கு**. பெ. (? குவிந்து மொய்ப்பது) தொங்குங் கயிறாதியன வற்றில் மொய்க்கும் ஈ இச்சொல் குச்சு எனும் அடியாய்ச் சிறுமையையும் காட்டுவதாகலாம்.

**கொத்–து** 2. பெ. (குவிந்து ஒன்று சேர்ந்திருப்பது) 1. குலை (திருவாச. 6, 30) 2. திரள் 3. குடும்பம் 4. கைப்பிடியளவு. வட. ங்கு ச் ச்ஹ துளு. ங்கு ச் சு.

**கொத்–தளம்**. பெ. (?குவிந்தது) கோட்டை மதிலுறுப்புகளுளொன்று. ஒப். பாளி, கொ ற்ற்ஹ க.

**கொச்–சு** 2, பெ. (குவிந்தது) 1. குஞ்சம். வட. ங்கு ச் ச்ஹ.

**குச்–சம்**. பெ. (முன்னது) 1. கொய்யகம் 2. கொத்து. வட. ங்கு. ச் ச்ஹ.

**குஞ்ச–ம்** 2. பெ. (முன்னது) 1. கொய்யகம் 2. கொத்து 3. ஈயோட்டி. வட. கூ ர் ச.

**குஞ்சி**. பெ. (முன்னது) 1. குடுமி (திவா.) 2. உச்சிமயிர் (சீவக. 2792) 3. தலை 4. சிற்றணுக்கனெனும் அரச விருது (சீவக. 437) வட. கூ ர் ச.

**குஞ்சி**. பி.வி. (குவிய வளைத்தல்) 1. கால் தூக்கி வளைத்தல் (தேவா 521. 4) 2. காற்படங் குந்தி நிற்றல் (சூடா.) ஒப். குந்து. வட. கு ஞ்ச்.

**கொஞ்சு**. த.வி. (உதடுகளைக் குவித்து மெல்ல ஒலித்தல்) 1. மழலை பேசுதல் 2. இனிதாய் ஒலித்தல் ''சிலம்பு கொஞ்சவே'' (பாரத. அருச்சுனன் றவ. 148) 3. முத்தமிடல். வட. சு ம் ம்ப். ஈண்டு அடிக்ககரம் சகரமாயிற்று.

**கொன்—னு**. த.வி. (முன்னது) தடக்கிப் பேசுதல். மலை. கொ ஞ் னு.

**கூசு**, த.வி. (குவிந்து சுருங்குதல்) 1. அஞ்சிப் பின்வாங்குதல் (கம் பரா. பூக்கொய். 6) 2. நாணுதல் 3. நிலைகுலைதல் (பிங்) 4. உள்ளிழுக்கச் செய்யும்படியான பரிசமுறல். மலையாளத்தில் கூ சு க எனுஞ் சொல் வளைதல். சுருங்குதல் எனும் தலையர்த்தம் பெறும். அதனைக் கு ஞ் சு (குவி) எனும் அடியிற் பிறந்ததென்பர். அஞ்சுதல் < அல்குதல் =சுருங்கு தலினின்று வந்தவாறு, கூசுதலும் குவிதல் < கொடுகுதலினின்று வந்த தெனக் கொள்க.

**கூச்—சம்**, பெ. (முன்னது) 1. மயிர் சிலிர்த்தல் 2. நாணம் 3. பயந்து நடுங்குகை. மலை. கூ ச் ச ல் = விரலாதியன உள்ளிழுத்துச் சுரண்டிக் கொள்ளல்.

OOO

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**சென்னை – 600 113**

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| பொருள் புதிது | 35. 00 |
| ஆளும் தமிழ் | 28. 00 |
| புதிய அமைச்சகம் புரிந்த பணிகள் | 10. 00 |
| தமிழின் பா வடிவங்கள் | 35. 00 |
| சங்க இலக்கியம் – கவிதையியல் நோக்கு | 110. 00 |
| நாடக மேடை நினைவுகள் | 160. 00 |
| சின்னணைஞ்சான் கதை | 65. 00 |
| தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் | 110. 00 |
| நன்னூல் மூலமும் கூழங்கைத்தம்பிரான் உரையும் | 65. 00 |
| யாப்பருங்கலம் | 170. 00 |
| மண்டல புருடர் வழங்கிய சூடாமணி நிகண்டு | 65. 00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40. 00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் – ஓர் ஆய்வு | 60. 00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும் | 60. 00 |
| வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும் | 65. 00 |
| தமிழ்நாட்டு வரலாற்றில் இலக்கிய ஆதாரங்கள் | 100. 00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், தொகுதி – 1 | 100. 00 |
| கதிர்வேற்பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600. 00 |
| தொல்காப்பியப் பொருளதிகாரம் – ஆங்கில மொழிபெயர்ப்பு | 40. 00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40. 00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–1 | 50. 00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–2 | 40. 00 |
| நாட்டிய நன்னூல் | 25. 00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20. 00 |
| கபிலர் | 70. 00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75. 00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65. 00 |
| தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள் – குறிப்பேடு | 25. 00 |
| Tamil India | 40. 00 |
| Studies in Tamil Prosody and Poetics | 45. 00 |
| Persona in Tolkapiyam | 50. 00 |
| A Grammar of Contemporary Literary Tamil | 80. 00 |
| Cilappatikaram (மொ.நூ.ம.ப) | 100. 00 |
| Tani pacura togai (மொ.நூ.ம.ப) | 30. 00 |
| Dedication (மொ.நூ.ம.ப) | 25. 00 |
| Temple chimes (மொ.நூ.ம.ப) | 20. 00 |
| Nala venba (மொ.நூ.ம.ப) | 45. 00 |
| Tamil Heroic Poems (மொ.நூ.ம.ப) | 40. 00 |